





16-8-1984
75 காசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி

24 AUG 1984





சேலத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் சேலம் விஜய ராகவாச்சாரியார், பெருந்தலைவர் காமராஜர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளை, 30.7.1984 அன்று மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

விழாவிற்கு, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமை தாங்கினார்கள். மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டனர்.

எம். ஜி. இராமச்சந்திரன்
முதலமைச்சர்

புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை-600 009

நாள் 13-8-1984

## விடுதலைத் திருநாள் செய்தி

நம் தாய்த் திருநாடு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து சுதந்திரம் பெற்ற 38-வது ஆண்டுவிழா இன்று கொண்டாடப்படுகிறது. இத்திருநாளையொட்டி அனைவருக்கும் என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் தாய் நாட்டின் விடுதலைக் கனவு நனவாகிட தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் காணிக்கையாக்கிய தியாகச் செம்மல்களுக்கு நமது அஞ்சலியைச் செலுத்துவது நம்முடைய கடமையாகும். விடுதலை பெற்ற 37 ஆண்டுகளில் பல சோதனைகளை வென்று அனைத்துத் துறைகளிலும் சாதனை புரிந்து உலகின் வலிமைமிக்க நாடுகளிலொன்றாக இன்று இந்தியா உயர்ந்து நிற்கிறது. என்றாலும் இன்றுள்ள சூழ்நிலை சற்று கவலை ஏற்படுத்துவதாக உள்ளது. மதம், மொழி, இனம், சாதி இவற்றின் பெயரால் வெறியுணர்வை வளர்ப்போர், அரசியல் கட்சிமாச்சரியங்கள் காரணமாக வதந்திகளை, அவதூறுகளை அள்ளிவீசி அமைதியைக் கெடுப்போர், எவ்விதக் காரணமுமின்றி எப்போது பார்த்தாலும் தொல்லை தருவதையே தொழிலாகக் கொள்வோர் ஜனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்கும் எந்நாளும் நண்பர்கள் ஆகமாட்டார்கள் என்பதை மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

"தனித்தனியே நமக்குள்ள விருப்பு-வெறுப்பு, உரிமை, சலுகை இவையெல்லாம் நாடு வாழவேண்டுமென்ற பொதுக் கடமைக்குத் துணை செய்வதாக அமைய வேண்டும்" என்ற அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவாக்கையே இன்று நான் அனைவருக்கும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.



தீய சக்திகளும், பிளவு சக்திகளும், சீர்குலைவு மதியினரும் இன்று ஜனநாயகப் போர்வையில் உலா வந்துகொண்டிருப்பதால் விடுதலையினையும், மக்களாட்சித் தத்துவ அமைப்பையும் நாம் இரட்டிப்பு விழிப்போடு காத்து-நிற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

சுதந்திரத்தின் பகைவர்கள், முன்னேற்றத்தின் விரோதிகள் நமக்குள்ளேயும் இருக்க முடியுமென்பதையே கடந்த 37 ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் வரலாறு ஒரு பாடமாக நின்று காட்டியுள்ளது. இதனை உணர்ந்து ஆக்க சக்திகளின் இலட்சியப் பயணம் இடையறாது தொடர்ந்து நடந்திடவும், அழிவு சக்திகள் அடையாளம் காணப்பெற்று அகற்றப்படவும் நாம் எச்சரிக்கையுடன் பொருத்தமான நேரத்தில் நமது கடமையைப் புரிந்திட முன்வர வேண்டும்.

தற்சார்புள்ள, முற்போக்கான, பேதமற்ற, சமத்துவ இந்தியாவை-வலிமைமிக்க, வீறுகொண்ட தாயகத்தை உருவாக்கிக் கட்டிக் காத்திட அனைவரும் ஒரணியில் திரள்வோம் என நாட்டுப்பற்றுமிக்க நல்ல உள்ளங்களை அழைக்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!!

வாழிய பாரத மணித் திருநாடு!!!

வாழ்க அண்ணா நாமம்!

(எம். ஜி. இராமச்சந்திரன்)

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2015
ரக்தாக்ஷி
மலர் : 15 இதழ் : 4
16-8-1984

# சுதந்திரம்

## ஓர் வரப்பிரசாதம், ஒரு வாய்ப்பு

37 ஆண்டுகளுக்கு முன்னர் நமது அடிமைத் தளைகளைக்களைந்து, சுதந்திர நாடுகளின் குழாமில் சேர்ந்தோம்.

அதன் பிறகு வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் விரைவான முன்னேற்றம் கண்டோம்.

* இன்று நமது விவசாயிகள் நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் போதிய உணவு தானியங்களை விளைவிக்கிறார்கள்.

  தொழில் துறை உற்பத்தியில், உலக நாடுகளிடையே பெருமை வாய்ந்த ஓர் இடத்தைப் பெற்றிருக்கிறோம்.

அனைவருக்கும் சமூக மற்றும் பொருளாதார நீதி கிடைத்திட நாம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் முயற்சியின் பிரதான அங்கமாகும் புதிய 20-அம்ச திட்டம்.

நமது இலக்கை எட்டுவதற்குப் பாடு படுவதன் வாயிலாகத்தான் உள்நாட்டு, வெளிநாட்டு அபாயங்களிலிருந்து நமது சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

கடினமாக உழைப்போம், ஒன்றுபட்டு முனைவோம் என்று உறுதி பூண்டு 38-வது சுதந்திர ஆண்டில் அடியெடுத்து வைப்போம். நாம் போற்றும் லட்சியத்தை எட்டுவதற்கு அது ஒன்றுதான் வழி.





# அன்று சொன்னோம்! இன்று செய்கிறோம்!

## மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி எவ்வளவோ துல்லியமாக விளக்கமாக புள்ளிவிவரங்களோடு எடுத்துரைத்தார்கள். முதலில் நாம் சொல்ல விரும்புவது இந்த வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட 1248 என்கிற கணக்கை நீங்கள் ஒருவகையிலே எண்ணிப் பார்த்தால் நாம் எப்படி வளர வேண்டுமோ அதே போல் 1 இன்னொன்று சேர்த்தால் 2, இன்னொரு 2ஐச் சேர்த்தால் 4, இன்னொரு நான்கைச் சேர்த்தால் 8-1248. குடும்பம் வளமாக வாழ-வளமாகப் பெருகிவரவேண்டும் என்பதுபோல் எண்ணிக்கையும் அமைந்துள்ளது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 45, 40, 35, 30 என்று மாதந்தோறும் கொடுப்பதை அறுதியிட்டு அந்த வசதியினைக் கொஞ்சம் கொஞ்சம் கூடுதலாகப் பணத்தைச் செலுத்தி இந்தத் திட்டம் தோன்றிய விதம் உண்மையிலேயே எனக்கு வியப்பாக உள்ளது.

ஒரு அம்மையார் கண்ணீர் வடித்து, தாய்மார்களைக் கூட அழைத்துவந்து ஒரு மனுவைக் கொடுத்தபோது மேடையிலேயே நான் படித்துப் பார்த்தேன். இங்கே வாழ முடியவில்லை எந்த வசதியும் இல்லை - கழிப்பிடங்கள் இல்லை - விளக்கு இல்லை-தண்ணீர் இல்லை -குடிசைக்குப் பாதுகாப்பும் இல்லை. குடிசையில் இடவசதியும் இல்லை என்று எழுதப்பட்டிருந்தது அந்த மனுவில்!

### அட்டை சொல்லும் செய்தி

நான் அதைப் படித்துப் பார்த்தேன். எனது வாழ்வில் நான் எப்படி இருந்தேன் என்பதைக் கொஞ்சம் நினைத்துப் பார்த்தேன், இந்த நேரத்தில்! 18 ரூபாய் வாடகைக்கு ஒரு வீட்டில் குடியிருந்தேன். அப்போது வாடகை ரொம்ப அதிகம். 18 கூட கொடுக்க முடியாத நிலை. ஒரு கூடம், ஒரு ரூம், ஒரு சமையல் கூடம். அதில்தான் நான் 19 ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்தேன். அதையும் நினைத்துப் பார்த்து, அந்தத் தாய் எழுதிக் கொடுத்த மனுவையும் நினைத்து எப்படியெல்லாம் கற்பனை செய்தேன்-வருத்தப்பட்டேன் என்பது 'உனக்கு வாக்கு அளித்து முதலமைச்சராக ஆக்கியிருக்கிறோமே தமிழகத்திற்கு, நீ தான் அந்தப் பொறுப்பை ஏற்கவேண்டும்! நீங்கள் தான் எங்களுக்குச் செய்து தர வேண்டும்' என்று சொல்கின்ற பதில் என் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்ததன் விளைவாக அப்போதே நான் சொன்னேன், இங்கே வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று. 1982லே சொன்னேன். 1984லே முடிந்து, இந்தக் கட்டடங்கள் யார் யாருக்குச் சொந்தமாக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கெல்லாம் உரிமையாக்கப்படுகின்ற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது.

இங்கே எனது அருமைச் சகோதரர் மாண்புமிகு எஸ்.ஆர்.ராதா அவர்கள் திரைப்படங்களிலே என்னென்ன சொன்னேனோ அதையெல்லாம் செய்து வந்துள்ளேன் என்று சொன்னார். அதில் கொஞ்சமும் சந்தேகமே இல்லை.

என் வாழ்வில் நான் கண்ட கஷ்டங்கள், நான் அனுபவித்த துன்பங்கள், வேதனைகள் போன்று எனக்குத்தான் தெரியும். ஏதோ மக்களுடைய ஆதரவால் எனக்குக் கிடைப்பது இவர்களுக்கு யாருருடைய ஆதரவினால் கிடைக்க வேண்டும் என்கிற நினைப்பை எனது உள்ளத்திலே தேக்கிய போது எனக்குக் கிடைத்த பதில் 'உன்னை எதற்காகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்?' என்று ஒவ்வொரு ஆணும் பெண்ணும் என்னைக் கேள்வி கேட்பதுபோல் உள்ளது.

நாளே இந்நாட்டினுள்ள அத்தனை பெருக்கும் நிலைமை இருக்கும். அதிலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே வேலையே இல்லாமல் இருக்கின்றவர்களுக்கு அவர் நிலைமை எப்படி இருக்கும் என்ற எண்ணத்தை மனதில் தேக்கித்தான் நான் நடித்த படங்களிலே எல்லாம் கொள்கைகளைச் சொல்லும்போது ஆர்வத்தோடும் சொன்னேன், அழுத்தமாகவும் சொன்னேன். மக்களிடம் மனத்தில் பதியும்படியும் சொன்னேன். மக்கள் அதைச் சிந்திக்க வேண்டிய நிலையைச் சொன்னேன். ஆனால் ஒரு சிலர் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.

சினிமாக்காரன் என்று என்னை நினைத்தார்களே தவிர இந்த மக்களின் தேவையை நினைத்து உண்மையான நிலைமையை இந்த எம்.ஜி.ஆர். சொல்கின்றான் என்று யாரும் எண்ணவில்லை, கேலி பேசினார்கள்.

2 கோடி ரூபாய் செலவு செய்தால் இந்த 2 கோடி ரூபாய் அரசின் பணம் என்று வந்தாலும் உங்கள் பணம் என்று வந்தாலும் நீங்கள் வாடகை கொடுப்பது போல் கொடுத்து வந்து சில ஆண்டுகளுக்குப் பிறகு இது உங்களுக்குச் சொந்தமாக்கப்பட இருக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதேசமயம் ரூ.30,35,40, 45 என்று கொடுத்தாலும் அரசு ஒவ்வொரு ஆண்டிலும் எவ்வளவு உங்களுக்காகக் கொடுக்கிறது என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும்.

மாதம் ஒன்றுக்கு 1248 வீடுகளுக்கு 30,35,40,45 என்று கொடுக்கின்றீர்களே அந்தப் பணம் போக, 83, 616 ரூபாய்களைத் தமிழக அரசு வீட்டுவசதி வாரியம் உங்களுக்காகக் கொடுக்கப்போகிறது, மானியமாக. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். முழுப் பணமும் நீங்கள் கட்டப்போவதில்லை. நீங்கள் கட்ட வேண்டிய பணத்தின் ஒரு தொகையை அரசு உங்கள் வரிப் பணத்திலிருந்து உங்கள் கடனை - சுமையைக் குறிப்பாக வீட்டைக் கட்டிக் கொடுத்து ஓரளவுக்குத் தேவையான பணத்தை வாங்கிக் கொண்டு 83,616 ரூபாய்களை மாதம் ஒன்றுக்குத் தமிழக அரசு இந்தத் தொகையை வீட்டு வசதி வாரியத்துக்குக் கொடுத்தாக வேண்டும். அப்படியானால் உங்களுக்காக வீடு கட்டிக் கொடுத்து நீங்கள் 45, 40, 35, 30 கொடுக்கின்றீர்களே அதுமட்டுமல்லாது நீங்கள் கொடுக்க வேண்டிய பணம் 50 அல்லது 60 என்று இருந்தால் 20ஐ நீங்கள் கொடுக்க வேண்டும் மீதியை அரசு கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையில் இந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு உள்ளன.

அப்படி நீங்கள் பணம் கொடுத்தால் அது எங்கே போகும்? இந்த வீட்டு வசதி வாரியம் எங்கே கடன் வாங்குகிறதோ அவர்களுக்குத் திருப்பித் தரப்படும். அதே போல் நீங்கள் தருகின்ற பணத்தில் இருந்து இதுபோன்ற குடியிருப்புகள் தமிழகம் முழுவதும் எங்கெங்கே மற்றவர்களுக்கு வீடு இல்லாமல் கஷ்டப்படுகின்றார்களோ இதேபோல புதிய வீடுகள் கட்டிக் கொடுக்க நீங்கள் கொடுக்கின்ற பணம் மீண்டும் அதற்குப் பயன்படுத்தப்படும் என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்; மனத்தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

எப்படிப்பட்ட குடிசையிலிருந்து சிறிய வீடு ஆனாலும் ஒரு கல் கட்டடத்தில் ஆபத்தில்லாத ஒரு இடத்தில் வசதியான இடத்தில் - பாதுகாப்பான இடத்தில் உங்களுக்காக இடம் தரப்பட்டிருக்கின்றதோ - ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதோ அதே போல்இன்னும் லட்சக்கணக்கான மக்கள் குடிசையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். வீடே இல்லாமல் இருக்கின்றார்கள். நீங்கள் 30, 40 என்று கொடுக்கின்ற ரூபாய்கள் அங்கே போய்ச் சேரும்போது அவர்கள் மீண்டும் கடன் வாங்கியோ அல்லது மானியம் பெற்றோ, அரசிடம் பெற்றுக் கொண்டோ அவர்கள் இது போன்ற குடியிருப்புக்களை ஆயிரக்கணக்கில் அல்லது லட்சக்கணக்கில் மற்றவர்களுக்குக் கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கிறது.

இது முன்பிருந்த ஆட்சியால் கொண்டு வந்த வசதியான தீப்பிடிக்காத வீடுகள் என்று அளவிலே தொடங்கப்பட்ட திட்டம்; எங்கள் ஆட்சிக் காலத்தில் இது நடந்து கொண்டிருந்தாலும் சென்னைக்கு மட்டும் தான் என்ற அளவில் அவர்கள் இந்தத் திட்டத்தைத் தீட்டியிருந்தார்கள் நாம் ஆட்சிக்கு வந்தபிறகுதான் உங்களது ஆட்சி இங்கே நடைபெறுகிறது என்ற நிலைமையில் தான்-இது சென்னைக்கு மாத்திரம் உரிமை உள்ளதுபோல், தமிழகத்தில் எங்கெங்கே வாழ்கிறார்களோ அந்த மக்கள் அனைவருக்கும் கிடைத்தாகவேண்டும் என்று பரவலாக்கினோம்; தேர்தல் நேரத்தில் வாக்குகள் பெறுவதற்காக அல்ல. மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை நாம் செய்ய வேண்டும் என்பதற்காக இதைப் போன்ற செயல்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல,குடிசை மாற்று வாரியம் என்று ஒன்று இருக்கிறது. ஒரு குடிசையை வீடாக மாற்ற வேண்டும் என்கிற அதுவும் சென்னைக்கு மட்டும் தான் என்று வைத்திருந்தார்கள். நான் அதை மாற்றி, தமிழகம் முழுவதற்கும் குடிசை மாற்று வாரியம் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டு

## பள்ளிபாளையம் வீட்டு வசதித்திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பரப்பளவு | 11.46 ஏக்கர் |
| திட்டத்தின் மதிப்பு | ரூ 171.22 இலட்சங்கள் |
| மொத்தக் குடியிருப்புகள் | 1248 |
| ஒரு குடியிருப்பின் பரப்பு | 20.60 ச.மீ. |
| ஒரு வீட்டின் மதிப்பு | ரூ 14,700 |

அந்த வசதி வாய்ப்பும் ஏற்பாடு செய்துதர வேண்டும் என்று சொல்லி இருக்கின்றேன். நடந்து கொண்டு இருக்கின்றது.

இவைகளையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் 'நாடோடிமன்ன'னில்' அமைச்சரவை இல்லை-அதில் ஒரு மன்னன்-நாடோடி மன்னன் என்னைப்போல். எனக்கு ஊரும் உறவும் கிடையாது. மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என விரும்பிய ஒரு நாடோடிக்கு மன்னனாக இருக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். ஒரு பணக்காரர் எழுந்து எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொல்கின்றீர்களே குடிசைகளை என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்பார். அதற்கு தேவையில்லாத காரணத்தால் குடிசைகள் கொளுத்தப்படும் என்று நான் பதில் கூறினேன்.

மாணவர்களைப் பற்றிக் கேட்பார்கள். மாணவர்கள் படித்து முடித்து வேலை கேட்கும்வரை. அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்கும் என்று அதில் சொல்லி இருக்கின்றேன். ஆரம்பக் கட்டத்தில் சத்துணவு கொடுக்கின்றோம். 10 வயது வரை கொடுத்து வருகிறோம். செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளிலிருந்து 15 வயது வரையுள்ள – படிக்கும் குழந்தைகளுக்குச் சத்துணவு கொடுக்கப்பட இருக்கிறது. அது மட்டுமல்ல; வயது முதிர்ந்தவர்கள், இங்கே இப்பொழுது உதவித் தொகை கொடுத்தோமே அப்படிப்பட்டவர்களுக்கு, சேலையும் வேட்டிகளும் கொடுக்கும் திட்டத்தைப் போல் அந்த மாணவர்களுக்குச் சீருடை வழங்கப்படும் என்று நான் சொல்லி இருக்கின்றேன். அந்தத் திட்டத்தில் வேலை தேடித் தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

வேறு எங்கும் பணி செய்யாதவர்கள் எத்தனை பேர்கள் என்று கணக்கு எடுத்து மாதம் ஒன்றுக்கு அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம். மக்கள் வரிப் பணத்திலிருந்து ஏறக்குறைய 400 கோடி ரூபாய்க்கு மேலே ஒரு ஆண்டுக்கு நாம் செலவு செய்கிறோம் கல்விக்காக. அப்படி இருந்தும், படித்து



வெளியே வருபவர்களை என்ன வேலை செய்யப் போகிறீர்கள் என்று கேட்டால் தெரியாத அளவில்தான் இது கல்வியா? அல்லது நாளை வீணாக்கும் விளையாட்டுக் கூடமா என்ற கேள்வி எழுகிறது.

படித்தவன் புத்திசாலியாகிறான் என்று சொன்னால் மட்டும் போதாது. தன்னை வாழ வைத்துக் கொள்கிற தகுதியுள்ளவனாக வெளியே வருகிறான் - தொழில் பயின்றவனாக வருகிறான் என்கிற உரிமை-தகுதி இருக்க வேண்டும். அதற்கு வேலை வாய்ப்பு தயாராக இருக்க வேண்டும். ஐந்து ஆண்டுக் காலத்தில் முடியுமா, மூன்றாண்டுக்காலத்தில் முடியுமா என்ற திட்டத்தை எப்படி நிறைவேற்றுவது என்ற எண்ணம் கொண்டு, இடைக்காலத்தில் அவர்களுக்கு 50 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொன்னேன். இப்பொழுது அந்தப் புள்ளி விவரங்களைச் சரியாக எடுத்து வந்து கொண்டிருக்கிறோம்.

அண்ணா அவர்களுடைய பிறந்த நாள் விழாவின்போது இதைப் பற்றிய ஒரு புதிய அறிவிப்பு வரும் என்பதை மட்டும் இங்கே நான் சூசகமாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். இந்தக் காலத்தில் 50 ரூபாய் போதாது. ஆகவே அதைப் பற்றி ஏற்பாடு செய்யப்பட இருக்கிறது - இந்த ஆட்சி செய்யும் என்றும் உறுதி கூறிக் கொள்கிறேன். அந்தப் படத்தில் நான் சொன்ன திட்டம் ஓரளவுக்கு நிறைவேறும். பள்ளிக்கூடத்தில் படித்துப் பட்டம் பெற்று வேலையில்லாமல் இருந்தால், வேலை கிடைக்கும் வரையில் அரசு பொறுப்பு ஏற்கவேண்டும் என்று அங்கே சொன்னேனே? அதனுடைய ஒரு பகுதிதான் 50 ரூபாய்.

அரசினுடைய வேலை, உடனடியாக யாருக்கு என்ன தேவையோ அதைச் செய்து கொடுக்க வேண்டும். உங்களுக்குத் தற்காலிகமாகப் பயன்படுவது எதிர்காலத்தில் நன்கு பயன்பட இருக்கிறது. மக்கள் தரும் வரிப் பணத்திலிருந்து நமக்குச் சம்பளம் கொடுக்கிறார்கள். ஆகவே மக்களுக்குத் தொண்டு செய்கிறோமே தவிர மக்கள் எஜமானர்கள் அல்ல என்ற வகையில் அரசு அலுவலர்களும் மற்றவர்களும் அந்தப் பணியைச் செய்தால்தான் நிலைமை சீர்படும்; எந்தத் திட்டமும் நிறைவேறும். அந்த வகையில்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியவர்கள் தங்களுக்குச் சம்பளம் கிடைத்தது என்பதற்காக மட்டுமல்லாமல், சமுதாயம் வாழ வேண்டும் என்பதற்காகச் செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லி, வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்களையும் அவர்களுடன் ஒத்துழைத்த அலுவலர்கள், பணியாளர்கள் அனைவரையும் பாராட்டுவதோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகிறேன். அண்ணா நாமம் வாழ்க!

**(சேலம் மாவட்டம்-பள்ளிப்பாளையத்தில் கிராமப்புற மக்களுக்குத் தவணை முறை வீட்டு வசதித் திட்டத்தை 31-7-'84-ல் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து.)**

# ஏர்க்காட்டில் தொலைக் காட்சி அஞ்சல் நிலையம்



ஜூலைத் திங்கள் 30-ஆம் நாள் 'மலைவளம் நிறைந்த ஏர்க்காடு புதுப் பொலிவு பெற்று விளங்கியது. அந்தப் பகுதி மக்களிடம் ஆர்வ அலை பொங்கி வழிந்தது. அங்கே தொலைக்காட்சி ஒளி பரப்பு நிலையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைக்கிறார்கள் என்னும் செய்திதான் மக்களுக்கு மகிழ்ச்சியை உருவாக்கியது.

எங்குப் பார்த்தாலும் வரவேற்பு வளைவுகள். பற்பல திட்டங்களை உருவாக்கி மக்களுக்கு நன்மை செய்து வரும் மாண்புமிகு முதல்வருக்குப் பாராட்டு வாசகங்கள் நிறைந்த-பதாதைகள் தோரணங்கள்;வண்ணக்கொடிகள் இப்படியாக ஊரே எழில்கோலத்துடன் காட்சியளித்தது.

சீருடை அணிந்த பள்ளிக் குழந்தைகள் சிரித்த முகத்துடனும் சின்னஞ்சிறு கைகளில் வண்ணக் கொடிகளுடனும் நின்றவாறு முதல்வரை வரவேற்கக் காத்திருந்தனர். பல்லாயிரக் கணக்கான குழந்தைகள் பேரார்வத்துடன் நின்ற காட்சி, பார்ப்பவர்களைப் பரவசப்படுத்தியது. பிஞ்சுகளின் நெஞ்சங்களில் தமிழக முதல்வர் வேரூன்றி நிற்கிறார் என்பதை - அவர்களின் பேரார்வம் உறுதிப்படுத்தியது.

தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்தின் அருகே, 'சேலத்து மக்கள் தொலைக்காட்சி காணும் கோலத்தைத் தந்த குணக் குன்றே வருக! வருக!'' என்று எழுதி வைக்கப் பெற்றிருந்த வாசகம் அனைவரையும் கவர்ந்தது.

பகல் 12 மணி அளவில் மாண்புமிகு மத்திய வெளி உறவு மாநிலங்கள் அவை அமைச்சர் திரு ஏ. ஏ. ரகீம் அவர்கள் ரிப்பனைக் கத்தரித்து நிலையத்தைத் தொடங்கி வைக்க,மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்தார்.

அதன் பின்னர், ஒளிபரப்பு நிலையத் தொடக்க விழா ஏர்க்காடு நகரியத் திரை அரங்கில் நடைபெற்றது. அரசுக் கலைஞர் நாமகிரிப் பேட்டை கிருஷ்ணன் குழுவினரின் நாயன இசையுடன் விழா தொடக்கமாகியது.

சென்னை தொலைக் காட்சி நிலைய இயக்குநர் திரு ஆர். எஸ். சவுடேகர் வரவேற்புரை ஆற்றினார். அப்போது அவர் குறிப்பிட்டார்:

''ஏர்க்காடு - சேலம், மக்களுக்கு இந்த நாள் மகிழ்ச்சி தரக் கூடிய திருநாள். ஒருமைப் பாட்டின் காரணமாக நாம் நமது மகிழ்ச்சியைப் பங்கிட்டுக்கொள்ள முடிகிறது. ஒருமைப்பாட்டு உணர்வும் நாம் அனைவரும் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற நினைவும் நமக்கு வேண்டும்.''

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராஜலு, இ.ஆ.ப ஏர்க்காடு நகரியக் குழுவின் தலைவர் - உறுப்பினர்களின் சார்பாக வரவேற்றுப் பேசுகையில், ''சாதனைகள் பல புரிந்து சரித்திரம் படைத்தவரே! ஏர்க்காடு வளர, பல இலட்சங்கள் ஈந்தவரே! கண்ணீர் துடைக்கும் பன்னீர் மலர்ச்சரமே'' என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டினார்.

மாண்புமிகு மத்திய வெளி உறவு மாநிலங்கள் அவை அமைச்சர் அவர்களை, ஏர்க்காடு நகரியத்தின் சார்பில் அதன் தலைவர் திரு வள்ளியப்பன் வரவேற்றுப் பேசுகையில், ''இந்தத் தொலைக் காட்சி நிலையம் இங்கு அமைக்கப்பட்டிருப்பது ஏர்க்காடு மக்களுக்கு ஊக்கம் தரும் செயலாகும்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து, உரையாற்றிய அகில இந்திய வானொலியின் தென் மண்டலத் துணை இயக்குநர் திரு டி. எஸ். வாசன், ''மாண்புமிகு முதல்வர் அவர்களும் மைய அமைச்சர் ரகீம் அவர்களும் உதவி செய்திருக்காவிட்டால் இந்த நிலையம் குறித்த காலத்தில் செயல்பட்டிருக்க முடியாது என்பதை - நான் ஒரு பொறியாளன் என்ற நிலையிலிருந்து சொல்லிக் கொள்கிறேன்!

''செய்தி, சமூக ஒற்றுமை, ஒருமைப்பாடு, தேசிய உணர்வு ஆகியவற்றிற்கு தொலைக்காட்சி முக்கியமானதாகத் திகழ்கிறது'' என்றார்

அடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. பழனியப்பன் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

''1990-ல் 5 இலட்சம் கிராமத்து மக்களுக்கு தொலைக் காட்சி வசதி கிடைக்க வேண்டும் என மைய அரசு திட்டமிட்டு வருகிறது. இந்தியாவில் 1127 மொழிகள் பேசப்படுகின்றன. அவற்றில் 14 மொழிகள் தேசிய மொழிகள் ஆகும். அந்தந்த மாநிலப் பகுதிகளில் - மாநில மொழி நிகழ்ச்சிகள் தொலைக் காட்சியில் அதிக அளவில் இடம் பெற வேண்டும். இங்கு உருவாகியுள்ள நிலையத்தில் தமிழுக்கு முதலிடம் கிடைக்க-மைய அரசு வழி வகை செய்ய வேண்டும்.''

அடுத்து ராசிபுரம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு தேவராஜுலு தெரிவித்தார்.

''இந்த நிலையத்தை நாம் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்குக் கல்வி தரும் வகையில் இது பயன்படுத்தப்படவேண்டும். தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதியில் அரசுச் செலவில் தொலைக் காட்சிப் பெட்டிகள் வைக்கப் பெற வேண்டும். பள்ளிகளிலும் அவை இடம் பெற வேண்டும். தற்போது 50 கிலோ மீட்டர் வரைதான்தெரியும்என்கிறார்கள். ஏறக்குறைய சேலத்தைச் சுற்றி 100 மைல் சுற்றளவில் தெரிவதற்கு ஆவனசெய்ய வேண்டும்''

அடுத்து, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு ஆர். டி. பார்த்தசாரதி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்:

'இந்தியாவின் முன்னேற்றத்திற்காகத்தான் இத்தகைய தொலைக் காட்சி நிலையங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆக்க வேலையில் நாம் ஈடுபட வேண்டும் என்பதற்காகத்தான் தொலைக் காட்சி நிலையம் அமைக்கப்படுகின்றன.''

அடுத்து, மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் உரையாற்றும்போது தெரிவித்தார்:

''சேலம் மாவட்டம் இன்று புதிய விஞ்ஞானப் பேற்றைப் பெறுகிறது. விஞ்ஞானம் நமக்களித்த மகத்தான பொருள்-அற்புதமான சாதனம் தொலைக் காட்சி ஆகும்.

'அகில உலகச் சேதிகளை விரைவில் தெரிந்து கொள்ளவும், நேரில் காணவும் இது பயன்படும். கிராம மக்கள் பயன்பெற, தொலைக் காட்சி நிலையம் வந்திருப்பதற்கு வாயார மனமார வாழ்த்துகிறேன்.'

''பாரீஸ் நகரில் தொலைக் காட்சி மூலம் மக்களுக்கு அற்புதமான போதனைகளைச் செய்கின்றனர். லண்டன் தொலைக் காட்சியில் உடற்பயிற்சி குறித்து விளக்கம் செய்கின்றனர். அமெரிக்க நாட்டில் விஞ்ஞானச் செய்திகளை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் ஒளிபரப்புகின்றனர்.

''இளைஞர் நெஞ்சில் ஆக்க உணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்தத் தொலைக் காட்சி நிலையம் பயன்படும் என நம்புகிறேன்.''

அடுத்து மைய அரசின் வெளி உறவு மாநிலங்கள் அவை அமைச்சர் திரு ஏ. ஏ. ரகீம் அவர்கள் தமிழில் உரையாற்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தி விட்டார். அவா தமது உரையில் தெரிவித்தார்.

''நான் தமிழில் பேசுவது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். நான் கேரளாவில் படித்துக் கொண்டிருந்தபோது சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டதால் கேரளத்தை விட்டு வெளியேற்றப்பட்டேன். அப்போது சென்னையில் வந்து இரண்டு ஆண்டு கல்லூரியில் படித்தேன். அப்போது நான் தமிழைக் கற்றுக் கொண்டேன். தமிழ் இனிமையான மொழி. படிப்பதற்கு - பேசுவதற்குச் சுவையான மொழி.

''இந்தத் தொலைக்காட்சி நிலையம் இந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது. ஏழை, எளிய மக்கள் இதன் மூலம் பயன் பெறுவார்கள். நல்ல பொழுதுபோக்கு வசதி இதன் மூலம் கிடைக்கும். உலகம் அனைத்திலுமுள்ள நிகழ்ச்சிகள் இந்தத் தொலைக் காட்சி மூலம் கிடைக்க வழி உள்ளது. தமிழ்நாடு, சினிமா, நாட்டியம், கலை ஆகியவை சிறந்த மாநிலம் ஆகும். கல்வி, கலை முன்னேற்றத்திற்கு இந்த நிலையம் உதவும்.

'1985-க்குள் 120 தொலைக் காட்சி ஒளிபரப்பு நிலையங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் இன்று ஏர்க்காட்டில் உருவாக்கப்பட்டுள்ள இந்நிலையத்தின் மூலம் ஏராளமான மக்கள் பயன்பெறுவர். இதனை அமைக்கும் பணியில் தமிழக முதல்வர் முனைப்புடன் செயலாற்றி வந்தார். தமிழ்நாடு அவரது சீரிய தலைமையின் கீழ் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

## ஏர்க்காடு தொலைக் காட்சி நிலையம் சில தகவல்கள்

சேலம் ஏர்க்காட்டில் அமைக்கப்பட்டுள்ளது குறைதிறன்சக்தி கொண்ட தொலைக்காட்சி நிலையம் ஆகும். இந்திய நாட்டின் 79வது நிலையம் ஆகும் இது. லேடீஸ் ஸீட் என்று சொல்லப்படும் புகழ்பெற்ற பகுதியில் இது அமைக்கப்பட்டுள்ளது. இங்குள்ள டிரான்ஸ்மீட்டர் 100 வாட்ஸ் திறன் கொண்டது; 11 சானல்கள் கொண்டது. கோபுரத்தின் உயரம் 100 அடி. இதன் மூலம் 50 கிலோமீட்டர் தொலைவுக்கு ஒளிபரப்புக் கிடைக்கும். இதில் பயன்படுத்தப்பட்டுள்ள சாதனங்கள் அனைத்தும் இந்தியாவில் தயாரித்ததாகும்.

சாடலைட் மூலம் டெல்லியிலிருந்து ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளை இங்கே பார்க்கலாம். தாகவல்லி, பெரும்பாலை, தோப்பூர், அச்சாங்குட்டப்பட்டி, மல்லபுரம், ஓமலூர், வாழப்பாடி, மல்லூர், நாமக்கல், சேலம், கடையம்பட்டி, பாபிரெட்டிபட்டி ஆகியஇடங்கள் இதனால் பயன்பெறுகின்றன.

ஒவ்வொரு நாளும் மாலை 6 மணியிலிருந்து 11.30 மணி வரையிலும் தொலைக் காட்சி ஒளிபரப்பப்படும். ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.30 மணியிலிருந்து 12.30 மணி வரையிலும்- பின்னர் பிற்பகல் 2 மணியிலிருந்து 6 மணி வரையிலும் ஒளிபரப்பு நிகழும். இரண்டாம் சனிக்கிழமைகளில் காலை 9.30 முதல் 12.30 வரையிலும், நான்காம் ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9.30 முதல் மாலை 6 மணி வரையிலும் ஒளிபரப்பு நிகழும்.

இந்தத் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையத்திற்குரிய இடத்தைத் தமிழ்நாடு அரசு இலவசமாக அளித்துள்ளது.

'உலகத்தில் விஞ்ஞான வளர்ச்சியில் நமது இந்தியா 3வது இடத்தைப் பெற்றுள்ளது. நமது தலைவர் இந்திரா காந்திதான் இதற்கு காரணம். இந்தியா வளரும் நாடு இங்கு சில பிரச்சினைகள்உண்டு. இது உலகத்தில் எல்லா இடத்திலும் உண்டு. இந்த நாட்டை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு நாம் ஜாதி, மதம் கடந்து பணிபுரிய வேண்டும்.

''இந்திராவின் ஆட்சிக்கு நண்பர்-தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் மிகவும் உதவியாக உள்ளார். தமிழகத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைப்பதற்குச் சில பகுதிகளில் இடங்கள் அளித்துள்ளார். சில பகுதிகளில் கட்டடமும் கட்டிக் கொடுத்துள்ளார் தமிழக முதல்வர். அவருக்கு நன்றி!''

அடுத்து மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''ஏர்க்காட்டில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் தொடங்கப்பட்டிருக்கிறது என்பது மிகச்சிறந்த காரியம் என்பது மட்டுமல்ல, இவ்வளவு விரைவில் அது நடைபெறுவதற்காக பிரதமர், மற்றும் அவரது உதவியாளர்கள், நிபுணர்கள் அத்தனை பேரையும், பாராட்டி, அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப் பட்டிருக்கிறேன்.

"இங்கே வழிநெடுக சிறு குழந்தைகள் ஆர்வத்துடனும் கொடிகளுடனும் நின்றவாறு எங்களை வாழ்த்தி வரவேற்றார்கள். அந்தப் பிஞ்சு உள்ளங்களில் என்ன ஆசை நிரம்பி , பெருகி வழிந்தோடியிருக்கும் என்பதை ஒரு கணம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"பெரியவர்களான நாம் சமூக சமுதாய நிலைமைக்கு ஏற்றபடி வாழ நம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டிருக்கிறோம். ஆனால் குழந்தைகளுக்குப் புதிய அனுபவங்கள் ஏற்படுகின்றன. இவர்களது எதிர்காலம் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இளைய தலைமுறை முதிய தலைமுறையை விட முற்போக்குச் சமுதாயமாகச் செய்ய-துணிவுள்ளவர்களாக குழந்தைகள் வளர்க்கப் பெற - நாம் ஆவன செய்ய வேண்டும்.

"வசதி உள்ளவர்கள் எல்லாம் தொலைக்காட்சி பார்க்கலாம். ஆனால் நிலையம் இல்லாமல் யாரால்தான் பார்க்க முடியும்? நாம் எப்படி இருக்க வேண்டும் என்பதைத் தெரிந்து கொள்வதற்கு இதுபோன்ற தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் நிறையத் தேவை என்று கருதுகிறேன்.

"சேலம் மாவட்டத்திற்கு நான் என்னென்ன நன்மைகள் செய்தேன் என்று, முன்னர் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். இன்னமும் செய்ய வேண்டியிருக்கிறது. மலைவாழ் பகுதிமக்கள் இனம் எந்த அளவு முன்னேற வேண்டும் என்பது பற்றி டெல்லி செல்லும்போது பிரதமர் தனியாக ஒரு கூட்டம் கூட்டிப் பேசினார். மற்ற எந்த மாநிலமும் கொடுக்க முடியாத புள்ளி விவரங்களை நம்மால் மட்டும்தான் கொடுக்க முடிந்தது. உழைக்கின்ற-திறமைவாய்ந்த-கடமை உணர்வு மிக்க நமது அரசு அலுவலர்களின் உதவியால்தான் இது முடிந்தது.

"இந்திராவின் அரசுக்கு ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று மைய அமைச்சர் அவர்கள் இங்கு குறிப்பிட்டார்கள். ஒத்துழைப்புத் தருவதில் நான் பின்வாங்கியது இல்லை. பின் வாங்கவும் மாட்டேன்.

"சத்துணவுத் திட்டம், தன்னிறைவுத் திட்டம் போன்றவற்றை நிறைவேற்றத் தொடங்கியவுடன் இங்குள்ள சிலர் எதிர்த்தார்கள். அண்ணா பிறந்தநாள் முதல் 15 வயதுடைய குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்க இருக்கிறோம்.

"இந்தத்திட்டத்தைப் பிரதமர் பாராட்டினார். மற்ற மாநில முதல்வர்களையும் இந்தத் திட்டத்தைச் செயலாற்ற வழிவகை காணும்படி கேட்டுக் கொண்டார். பள்ளியில் தொழில் கல்வியைக் கொண்டுவரும் திட்டத்தை அவர் அறிந்து, பாராட்டினார். இந்தியத் துணைக்கண்டம் முழுதுக்கும் ஒரே மாதிரி பாடத்திட்டம் இருக்க வேண்டும் என்று நான் சொன்னேன். அனைத்து மாநிலங்களும் இதனைப் பரிசீலிப்பது நல்லது எனப் பிரதமர் குறிப்பிட்டார். தமிழகத்தில் வேறு கட்சி ஆளுகிறது என்று எண்ணாமல், நாம் நல்ல யோசனைகளைச் சொன்னால் அதை ஆதரிப்பவர் நமது பிரதமர் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

"இந்த நிலையம் 10 கிலோ வாட் சக்தி கொண்ட நிலையமாக உயர்த்தப்பட வேண்டும் என்று மைய அமைச்சரின் மூலமாக பிரதமருக்குத்' தெரிவித்துக் கொள்கிறேன்.

''இளைஞர்கள் கல்வி கற்பதுடன் உடற்பயிற்சி செய்யவும் பழக வேண்டும். அதற்கு இந்தத் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் பயன்படும். குழந்தைகள்-இளைஞர்கள்—உடலைப் பேணிப் பாதுகாக்கப் பழக வேண்டும். எதிர்காலச் சந்ததிக்கு இது செல்வமாக அமையும்.



''ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையுடன் நாம் இணைந்து வாழ முடியும் என்ற நம்பிக்கை உண்டு. அதற்கு தொலைக் காட்சி நிலையம் பயன்படும் என்று நம்புகிறேன். அண்ணா, நேரு-அண்ணல் காந்தி ஆகியோரின் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் தொலைக்காட்சி நிலையம். நாடு ஒன்றுபட்டு வாழ வேண்டும் அதற்கு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் பயன்பட வேண்டும் என வாழ்த்துகிறேன்.''

நிகழ்ச்சித் தொகுப்பு :

சுந்தர்



# உலகம் வியக்கும் ஒலிம்பிக் பந்தயம்

உலகம் மிக்க ஆவலுடன் எதிர்பார்த்த 23-வது ஒலிம்பிக் பந்தயம், அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் 1984 ஜூலைத் திங்கள் 29-ஆம் நாள் கோலாகலமாகத் தொடங்கியது.

* அமெரிக்காவைச் சேர்ந்த நீக்ரோ விளையாட்டு வீரர் ரோபர் ஜான்சன் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி வைத்தார்.

* 'வரவேற்பு' எனப் பன்மொழிகளில் எழுதப்பெற்ற பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட வண்ண பலூன்கள் வானில் மிதந்தன. வெண்மேகக் கூட்டம்போல் ஆயிரக் கணக்கான வெண் புறாக்கள் விண்ணில் பறந்தன. அவற்றைக் கண்ணாரக் கண்டவர்கள் மெய்மறந்தனர்.

* எழிச்சிமிகு ஒலிம்பிக் பந்தயத்தில் 141 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் வீரர்களும், வீராங்கனைகளும் கலந்து கொண்டனர்.

* வரவேற்புக் கீதம்—அமெரிக்க நாட்டுத் தேசிய கீதம்—ஒலிம்பிக் பந்தயக் குறிக்கோள் பற்றிய பாட்டு ஆகியவை இன்னிசையோடு ஒலித்தன.



லாஸ் ஏஞ்சலீஸ் நகரின் ஒரு தோற்றம்.

* முதலில் கிரேக்க நாட்டினர் அணிவகுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து வீரர்கள், வீராங்கனைகள் பெருமிதத்துடன் தங்கள் நாட்டுத் தேசியக் கொடியை ஏந்திக் கொண்டு சென்றனர். இந்தியக் குழுவில் ஹாக்கிக் கேப்டன் திரு ஜாபர் இக்பால் இந்தியக் கொடியை ஏந்திச் சென்றார். அணி வகுப்பு நிகழ்ச்சியில் இறுதியாகச் சென்றது அமெரிக்கக் குழு.

* அணி வகுப்புக்குப் பின், லாஸ் ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் குழுத் தலைவர் திரு உபராந்தும், சர்வே தேச ஒலிம்பிக் தலைவர் திரு சமராஞ்சும் உரையாடினர். பின்னர் அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரீகன் அவர்கள், 'நவீன யுகத்தின் ஒலிம்பிக் விழாவைக் கொண்டாடும் வண்ணம் இந்த ஒலிம்பிக் விளையாட்டுகளைத் தொடங்கி வைக்கிறேன்' என்று கூறிப் போட்டிகளைத் தொடங்கி வைத்தார்.

* 1952-ஆம் ஆண்டு ஒலிம்பிக பந்தயங்கள் அமெரிக்காவில் நடந்தது. 32 ஆண்டுகள் கழித்து

* ஒலிம்பிக் பந்தயத்தை ஒளி பரப்பும் உரிமையை அமெரிக்கத் தொலைக் காட்சி நிறுவனம் மொத்தமாக 250 கோடி ரூபாய் கொடுத்து வாங்கியிருக்கிறது.




* ஒலிம்பிக் பந்தயத்தில் விளையாடும் வீரர்களுக்குச் சிறப்பான உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு நாள்தோறும் வழங்குவதற்கு 20 இலட்சம் ஐஸ் கிரீம்களும், 6 இலட்சம் ஆப்பிள்களும் வாங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு உணவு தயாரித்துப் பரிமாறும் பணியில் மட்டும் 3000 சமையல்காரர்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். போட்டி நடக்கும் 16 நாட்களுக்கும் மொத்தம் 12 இலட்சம் டன் உணவு தயாரிக்கத் தேவையான உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.




லாஸ்ஏஞ்சலீஸ் ஒலிம்பிக் போட்டியையொட்டி இந்திய அரசு வெளியிட்டுள்ள சிறப்புத் தபால் தலைகள்

* ஒலிம்பிக்கில் வழங்கப்படும் பதக்கங்களின் தரம் மற்றும் அதன் மதிப்பு எவ்வளவு என்று தெரியுமா?

முதல் பரிசாக வழங்கப்படும் தங்கப் பதக்கம் 24 காரட்டில் செய்யப்படுகிறது. அதன் எடை 6.5 கிராம் அல்லது அதன் எடையில் 5.2 சதவீதமாகும். வெள்ளி முலாம் பூசப்பட்டுள்ள அந்தத் தங்கப்பதக்கத்தின் அடக்க விலை 130 டாலர் (1 டாலர் என்பது சுமார் 11 ரூபாய்) தங்கத்தின் விலையைப் பொறுத்தும் அதன் மதிப்பு மாறுகிறது.

எனினும் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களின் உலோகம் சுத்தமானது. அதன் மதிப்பு உறுதி செய்யப்படவில்லை. மொத்தம் 1454 பதக்கங்கள் இந்த ஒலிம்பிக்கில் வழங்கப்படுகின்றன.







# மாமல்லபுரத்தில் ஒரு விழா!

மாமல்லபுரத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மூலம் கட்டப்பட்ட கடற்கரைச் சுற்றுலா வளாகக் குடில்கள், நீச்சல் குளம், உணவகம் ஆகியவற்றை மாண்புமிகு நிதி - வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் திறந்து வைத்தார்.

கடற்கரைச் சுற்றுலா வளாகத்தில் - ரூ. 9 இலட்சம் செலவில் கட்டப்பட்ட 18 ஒரு நபர் அறைகள், ரூ. 10 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட 10 குளிர்பதன வசதி செய்யப்பட்ட அறைகள், ரூ. 9 இலட்சம் செலவில் கட்டப்பட்ட உணவகம், ரூ.8 இலட்சத்து 60 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட நீச்சல் குளம் ஆகியவற்றைத் திறந்து வைக்கும் இவ்விழா 22.7.84 அன்று சிறப்புற நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சித்தனேந்தல் நடராசன் நாதசுர இசை நிகழ்ச்சியோடு விழா தொடங்கியது.

மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் விழாத் தலைமை ஏற்றார்.

இங்கிலாந்து, சைப்ரஸ், ஜெர்மன், பெல்ஜியம், அயர்லாந்து போன்ற பல வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் வருகைதந்து சிறப்பித்த இந்த விழாவில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு. பாலசுப்பிரமணியம் எம்.எல்.ஏ. வரவேற்புரையாற்றினார்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.ஆர்.சீனிவாசன், திரு. ஆனூர் செகதீசன் எம்.எல்.ஏ., திரு.இரா.மோகனரங்கம் எம்.பி., அயர்லாந்து சுற்றுலாப் பயணிகளில் ஒருவரான மெர்ல், மேற்கு ஜெர்மனி சுற்றுலாப் பயணிகளில் ஒருவரான ஜூலியன் எல்டன்பர்க், சுற்றுலாத் துறைச் செயலர் திரு இரா. கிருபாகரன் இ.ஆ.ப. ஆகியோர் உரையாற்றினர்.

அயல்நாட்டுப் பயணிகள், தமது பேச்சினிடையே-''மாமல்லபுரம் பகுதிக்கு எங்களைப் போன்ற சுற்றுலாப் பயணிகள் ஏராளமாக வருவதன் மூலம், இந்த வட்டாரத்திலுள்ள மக்கள் வாழ்வு வளம்பெறும்; எங்களால் என்றும் மறக்க முடியாத இந்த இடத்திலேயே நீண்டநாள் தங்கிவிட மாட்டோமா என்கிற ஏக்கம் எங்கள் எல்லோருக்குமே உண்டு'' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. இராம. வீரப்பன் தனது தலைமை உரையில் குறிப்பிட்டதாவது:

''மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின், தமிழ்நாட்டில், சுற்றுலாத் துறை வியத்தகும் அளவிலே வளர்ச்சி பெற்றுள்ளது. சில ஆண்டுகளுக்குமுன்னால், மாமல்லபுரத்தைப் பொறுத்தவரை, ஆறு கோடி ரூபாய் அளவில் மாஸ்டர் பிளான் ஒன்று தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பினோம்; அனுமதிக்காகக் காத்திருக்கிறோம்.

"தமிழக அரசு மட்டும் மாமல்லபுரம் விரிவாக்கப் பணிகளுக்காக இந்த ஆறாண்டுகளில் ரூ. 80 இலட்சம் ஒதுக்கிப் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்போது 35 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

''இங்கே உருவாக்கப்பட்டு வரும் அருங்காட்சியகத்தில் -பண்டைத் தமிழகத்தின் சுமார் மூவா

யிரம் ஆண்டுக் கால வரலாறு 47 வகைச் சிற்பங்களாலே விளக்கப் படவிருக்கிறது. கடற்கரைக் கோயிலை முக்கியமாக வைத்து ஒலி-ஒளி காட்சியமைக்க மத்திய அரசு ஒத்துக்கொண்டும், மாநில அரசு நிதி ஒதுக்கியும்கூட, மத்திய அரசின் ஓர் அங்கமாக உள்ள தொல்பொருள் ஆய்வுத்துறை ஏனோ அதற்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது.

''ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுற்றுலாத்துறைக்கு 343 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 137 கோடி ரூபாய் மத்திய சுற்றுலாத்துறை ஊழியர்களுக்குச் சம்பளமாகவும், 41.4 கோடி ரூபாய் நட்சத்திர ஓட்டல்கள் கட்டவும் போய்விடுகிறது. மீதமுள்ளதுதான் மாநிலச் சுற்றுலாத்துறைக்கு என்ற நிலை இருக்கிறது. சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கென மாநில அரசுக்கு மத்திய அரசு அடிப்படை வசதிகளைச் செய்துதர வேண்டும்; அல்லது இவ்வகையில் மாநில அரசு சிறப்புறச் செயல்பட மத்திய அரசு மானியமாகவோ கடனாகவோ அடிப்படை வளர்ச்சிக்களுக்கென நிதியுதவி செய்யவேண்டும்.

''சுற்றுலாப் பயணிகள் வரும் தனி விமானம் சென்னையிலும் இறங்கவேண்டும் என்று ஐந்தாண்டுக் காலமாக் கேட்டுவருகிறோம். இப்போது அந்த விமானம் திருவனந்தபுரத்திலும், கோவாவிலும் இறங்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். முதன் முதல் 'மாஸ்டர் பிளானை'த் தந்த தமிழகத்தில் அந்த விமானம் இறங்குவதுபற்றி 'இன்டர் நேஷனல்' விமான நிலையம் மறுபரிசிலனை செய்யவேண்டும்".

—இவ்வாறு மாண்புமிகு செய்தி சுற்றுலாத்துறை அமைச்சர் பேசினார்.

புதிய கட்டடங்களைத்திறந்து வைத்து மாண்புமிகு நிதி-வருவாய்த்துறை அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் பேசியதாவது:

''இந்தியாவிலேயே சுற்றுலாத் துறையில் தமிழ்நாடுதான் மேம்பட்டு விளங்குகிறது. அமெரிக்காவிலோ வேறெங்குமோ முந்நூறு நானூறு ஆண்டுகளுக்கு முந்திய சிற்பங்கள் ஓவியங்கள் இல்லை; இங்கேதான் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியவைகளையும் பாதுகாத்து வருகிறோம்.

''இந்தியாவிலேயே சிற்பங்களைச் செய்யத்தக்க அழுத்தமான கருங்கற்கள் நம்நாட்டில்தான் கிடைக்கின்றன. அவை இங்கிருந்து ஜப்பானுக்கும் சீனாவுக்கும் கூட ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

''இந்தியாவிற்குச் செலாவணி ஈட்டித் தருவதில் நான்காவது இடத்தை வகிக்கிறது சுற்றுலாத் துறை.

''உலகிலேயே குளிக்கக்கூடிய நீர்வீழ்ச்சியான குற்றாலம் தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது. நயகாரா, ஜோக் நீர்வீழ்ச்சிகளெல்லாம் பார்க்கக்கூடியவைகளே! பார்ப்பதற்கே அங்கெல்லாம் பணம் வசூலிக்கிறார்கள்! மிகப்பெரிய அழகிய கடற்கரைகளில் 45 மைல் நீள சென்னைக் கடற்கரை இரண்டாவது இடம் வகிக்கிறது. இந்த மிக நீண்ட மணல் வெளியில் தொழிற்சாலைகள் தொடங்க அனுமதிக்கக் கூடாது; அதனால் மிக அருமையான கடற்கரையின் அழகு பாதிக்கப்பட்டுவிடும்''.

—இவ்வாறு உரையாற்றிய மாண்புமிகு நிதி - வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், 7 பேருக்கு முதியோர் உதவித் தொகையும், 12 பேருக்கு வீட்டு மனைப்பட்டாவும் வழங்கினார்.

சுற்றுலாத்துறை நிர்வாகஇயக்குநர் திரு.கோவிந்தன் நன்றியுரை ஆற்றினார்.

விழா முடிந்தபின் - சென்னை சித்ரா குழுவினரின் நடனநிகழ்ச்சி நடைபெற்றது.

**-இல. இராசேந்திரன்**

# மீனவர்களுக்குக் கடன் உதவி!



**ப**ட்டினத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கப் பெருமக்களுக்கு இந்தியன் வங்கி கடனுதவி வழங்கும் விழா (2.8.84) சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

சென்னை - திருவொற்றியூரிலுள்ள பட்டினத்தார் கோயிலருகேயுள்ள எம்.ஆர்.எஃப். சங்கக் கட்டடத்தில் நடைபெற்ற இந்த விழாவில் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வீட்டுவசதி வாரிய அமைச்சர் திரு.எஸ்.ஆர். இராதா மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு.கே.கலைமணி இருவரும் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பட்டினத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு.கே. குப்பன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில், இந்தியன் வங்கியின் இராயபுரம் கிளை மேலாளர் திரு.வி.தேனப்பன் வரவேற்புரையாற்றினார்.

வங்கியின் நிர்வாக இயக்குநர் திரு.எம்.வள்ளிநாயகம், மண்டல மேலாளர் திரு.எம்.எஸ்.கந்தப்பன், முன்னாள் சட்டமன்றஉறுப்பினர் திரு.லம்பராஜ் ஆகியோர், கடன் வழங்குவதன் குறிக்கோள்-அதைச் செம்மையுறச் செலவிடும்

விதம் ஆகியவை பற்றி உரையாற்றினர்.

இதைத் தொடர்ந்து -வங்கிச் சிப்பந்திகளில் ஆண்களும் பெண்களுமாக ஐவரைக் கொண்ட குழு ஒன்று இந்தியன் வங்கி கடனுதவி பற்றிய இசைப் பாடலொன்றைப் பாடியது. இசைக் கருவிகளோடு நடந்த அந்தக் குறைந்த நேர இசை நிகழ்ச்சி எல்லோரையும் மகிழ்வுறச் செய்தது.

**அமைச்சர்கள் உரை:**

இதன் பின், கடன் வழங்கி உரையாற்றுகையில் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே. கலைமணி பேசியதாவது:

''1969ல், இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களால் வங்கிகளெல்லாம் தேசியமயமாக்கப்பட்ட பிறகு - வசதி படைத்தோர் மட்டுமல்ல; வசதியற்றோரும் வங்கிகளின் மூலம் கடனுதவி பெற முடியும் என்ற நிலைமை ஏற்பட்டது.

''வலை வாங்குவதற்காகவும், கட்டுமரத்திற்காகவும், சிறிய மீன் வியாபாரத்திற்காகவும் என்று மிகுந்த ஆர்வத்தோடு இன்று கடன் பெறுகிற நீங்கள், இதைத் திருப்பிச் செலுத்துவதிலும் ஆர்வம் காட்டவேண்டும். அப்போதுதான் வங்கியானாலும் அரசானாலும் இன்னும் அதிக அளவில் கடனளிக்கும் ஆர்வம் காட்டும்; உங்கள் தொழிலும் சிறக்கும்.

''மீனவ சமுதாய முன்னேற்றத்திற்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆற்றிவரும் பணிகள்-உதவிகள் அளவற்றவைகளாகும். மீனவ மகளிருக்கென்று தனிக் கூட்டுறவுச் சங்கம் உண்டாக்கிய பெருமை அவருடையது.

மீனவ சமுதாய மகளிருக்குக் கடன் வழங்கியும், தையல் எந்திரங்கள் அளித்தும் சிறப்புரையாற்றுகையில் மாண்புமிகு பொதுப் பணித்துறை மற்றும் வீட்டுவசதி வாரிய அமைச்சர் திரு.எஸ்.ஆர். இராதா குறிப்பிட்டதாவது:

''மீனவர்கள் ஒவ்வொருவரும் கூட்டுறவுச் சங்கத்திலே உறுப்பினராக வேண்டும்; இந்தச் சங்கம் நன்முறையில் இயங்கஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், மீனவ சமுதாயத்தினர் நலனில் கொண்டுள்ள அக்கறை காரணமாகவே இத்துறைக்கெனத் தனியொரு அமைச்சரையே நியமித்திருக்கிறார்கள்.

''வாங்கிய கடனைத் திருப்பித் தராதே எனச் சிலர் பேசிவரும் காரணத்தால்தான், தவறாமல் திருப்பிச் செலுத்தவேண்டும் என்று சிலர் இங்கே பேசவேண்டிடிய அவசியம் ஏற்பட்டது. ஆனால், செய்த உதவிக்கு நன்றி காட்டுவதில் மீனவ சமுதாயம் மேலானது என்பதை நான் அறிவேன். மீனவர்கள் கூட்டுறவுச் சங்கம் வைத்து, இந்த அரசு தனியே அவர்களுக்கு வீடுகட்டித்



தருகிறது. இந்தியன் வங்கி, இவர்கள் வீடுகட்டக் கூட கடனுதவி செய்யலாம்'' என்று உரை நிகழ்த்திய மாண்புமிகு பொதுப்பணி மற்றும் வீட்டுவசதி வாரியத் துறை அமைச்சர், கடனுதவியளிக்கும் வங்கிக்கும் அதன் நிர்வாகத்தினர்க்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**கடன் விவரம்:**

இவ்விழாவில்-இந்தியன் வங்கி, மாண்புமிகு அமைச்சர்கள் மூலம் அளித்த கடன் பற்றிய விவரம் வருமாறு:

185 மீனவர்களுக்கு, ஆயிரம் ரூபாய் வீதம் வலை வாங்க வழங்கப்பட்ட மொத்தக் கடன் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் ஆகும்.

மீன் சில்லறை வியாபாரம் செய்ய ரூ. 500 வீதம் 55 மீனவப் பெண்மணிகளுக்கு அளித்த மொத்தக் கடன் ரூ.27 ஆயிரத்து ஐந்நூறு.

பத்துப் பெண்களுக்குத் தையல் எந்திரம் அளித்த வகையில் ஆயிரம் ரூபாய் வீதம் பத்தாயிரம் ரூபாய்.

ஆக மொத்தத்தில், இரண்டு லட்சத்து 22 ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் மீனவ சமுதாயத்தினர்க்கு கடனாக வழங்கப்பட்டது.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு இந்தியன் வங்கி நிர்வாகிகள் மூலமும், பட்டினத்தார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தார் மூலமும் கைத்தறியாடைகளும் மாலைகளும்அணிவிக்கப்பட்டன.

**—பீ.எல்.ஆர்.**



# மாநகராட்சியின் மணியான விழாக்கள்!

நீ. வே. பாலு
மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாநகராட்சி.

ஜூலை 23, 1984 மாநகராட்சியின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்னாளாகும். அன்றுதான் மாநகராட்சியின் முப்பெரும் விழாவும், குக்ஸ் சாலைப் பாலத் திறப்பு விழாவும் நடைபெற்றன.

முதன் முதலாக உள்ளாட்சித் துறைப் பொறுப்பை ஏற்றிருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்க வந்தார்.

முதலில் முப்பெரும் விழாவில் பங்கேற்ற அமைச்சர், மாநகராட்சி விளையாட்டை, விளையாட்டாக எடுத்துக்கொள்ளாமல் கவனத்தோடு பேணிக்காத்து மக்களிடையே இதைப்பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயல்வதைப் பாராட்டினார்.

மாண்புமிகு தமிழக முதல்வரின் விளையாட்டார்வத்தையும் அதுவளர அவர் காட்டும் அக்கறையையும் அமைச்சர் விளக்கிப் பேசினார். சென்னை மாநகராட்சி அலுவலர்களின் புதிய விளையாட்டரங்கத் திறப்பு விழா, சென்னை மாநகராட்சி உடல் பயிற்சிக் கூடத்தின் கூடுதல் விளையாட்டரங்கக் கால்கோள் விழா, சென்னை மாநகராட்சி வாகை சூடிய விளையாட்டு வீரர்களுக்குப் பரிசு வழங்கு விழா ஆகிய மூன்றும் ஒருங்கிணைந்து முத்தமிழ் போல இனித்த விழா தான், முப்பெரும் விளையாட்டு விழா.

இவ்விழாவிற்கு மாநகராட்சித் தனி அலுவலர் திரு. கி. சந்திரசூடன், இ.ஆ.ப. தலைமை தாங்கினார். திருமதி சாந்த ஷீலா நாயர், இ.ஆ.ப. வரவேற்புரை வழங்கினார். மாநகராட்சி விளையாட்டுத் துறைக்கும், பூங்காக்களுக்கும் ரூ. 53.28 இலட்சம் செலவிடுகிறது. பூங்காக்களுக்கும், தோட்டங்களுக்கும் ரூ. 39.99 இலட்சம் செலவிடுகிறது. விளையாட்டுத் திடல்கள் முன்னேற்றத்திற்காக ரூ. 10 இலட்சமும், விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு ஆக ரூ. 2 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் மாநகராட்சி, விளையாட்டில் ஆர்வம் உள்ள பொதுமக்களுக்காகக் கால்பந்து, மட்டைப்பந்து, கூடைப்பந்து, வாலிபால், பளு தூக்குதல் முதலியவற்றில் பயிற்சி முகாம்களை ரூ. 10,000 செலவில் நடத்தியது.

இதில்பங்குபெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மாநகராட்சியில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. உடற்பயிற்சித் திறன், கபடி, கோக்கோ போன்ற விளையாட்டுகளில் தேர்ச்சிக்கும் சுழற் கேடயங்கள் வழங்கப்பட்டன. தென்சென்னை துணை ஆணையாளர் திரு. ஜனார்த்தன், இ.ஆ.ப. அறிக்கை வாசித்தார். வடசென்னை துணை ஆணையாளர் திரு கோ. இராமகிருஷ்ணன் நன்றி நவின்றார்.

• விழா முடிந்த கையோடு அமைச்சர் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது குக்ஸ் சாலைப் பாலத்திறப்பு விழாவிற்கு விரைந்தார். இவ்விழாவில் மக்கள் வெள்ளம்போல் திரண்டிருந்தார்கள். மாநகராட்சி ஆணையர் வரவேற்புரை நிகழ்த்தினார். தனி அலுவலர் தலைமை தாங்கினார். தமிழகச் சட்ட மேலவை அரசு கொறடா திரு. ஜேப்பியார், சட்டமேலவை உறுப்பினர் திரு. இ. மதுசூதனன் மற்றும் பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் திரு. சு. பாலன் முதலியோர்பங்கு பெற்றனர்.

பாலத்தைத்திறந்து வைத்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மாநகராட்சியை, அது ஆற்றிவரும் பெரும் பணிக்காக மனமாரப் பாராட்டினார். நடப்பாண்டில் மாநகராட்சி ரூ. 18.24 கோடி செலவில் சாலைப்பணிகள் ஆற்றும் என்று அறிவித்தார்.







சாலைகளைப் புதுப்பிக்க ரூ. 8.31 கோடியும், பாலங்கள் கட்ட ரூ. 1.32 கோடியும், பேருந்து செல்லும் பாதைகளுக்கு ரூ.2.95 கோடியும் உட்புறச்சாலைகளுக்கு ரூ. 4.10 கோடியும், தனியார் தெருக்களுக்கு ரூ. 1.20 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளன என்றார்.

குக்ஸ் பாலம் 31 இலட்சம் செலவில் 3 ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்டது. காலதாமதத்திற்குக் காரணம் சிமெண்டு உரிய நேரத்தில் கிடைக்காததே என்றார். தமிழக அரசு தொகுதி பேதம் பாராட்டாது எக்கட்சியினரின் தொகுதியாக இருந்தாலும் மக்களின் 'தேவைகளை அறிந்து பணியாற்றுகிறது. அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது குக்ஸ் பாலம் என்றார்.

குக்ஸ்சாலைப் பாலம் பழைய குறுகலான பழுதடைந்த பாலத்தைப் புதுப்பித்துப் பெரியதாகக் கட்டப்பட்டது. இது நான்கு வழி வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றபடி அமைக்கப்பட்டுள்ளது. இருபுறமும் 2 மீட்டர் நடைபாதைகளைக் கொண்டது. வெள்ளக் காலங்களில் வெள்ளம் தடைபடாமல் ஓடுவதற்கு ஏற்றவாறு பாலத்தின்கீழ் உள்ள நீர்வழி உயர்த்தப்பட்டுள்ளது. நீர்வழியின் அகலம் 15.23 மீட்டர், உயரம் 3.6 மீட்டர்.

இப்பாலம் பெரம்பூரையும் அயனாவரத்தையும், புரசவாக்கத்தையும், ஓட்டேரியையும் இணைக்கும் முக்கிய இணைப்புப் பாலமாகும். மக்கள் மகிழ்ச்சியோடு இப்பாலத் திறப்புப் பணியில் உற்சாகம் பொங்கக் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் கலந்து கொண்டனர். இதிலிருந்தே இப்பாலத்தை எவ்வளவு தூரம் வரவேற்கிறார்கள் என்பதையும் புரிந்து கொள்ள முடிந்தது. இப்பாலம் மாநகராட்சியின் அரிய சேவைக்கு மற்றுமொரு எடுத்துக்காட்டு.

---

## நியாய விலைக் கடைகளில் தேங்காய் எண்ணெய் !

மைய அரசு நியாய விலைக் கடைகளில் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், இதுவரையிலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பாமோலின், சோயாபீன் எண்ணெய் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் ஆகியவற்றை வழங்கி வருகிறது.

தற்போது மைய அரசு பொது விநியோக முறையில் தேங்காய் எண்ணெயினை உணவுப் பண்டங்களுக்குப் பயன்படுத்திவரும் பகுதிகளில் வழங்குவதற்கு என்று மேற்படி எண்ணெய் ஒதுக்கீடு செய்துள்ளது.

இந்தத் தேங்காய் எண்ணெய் ஒரு கிலோ கிராம் எடை கொண்ட பாக்கெட்டுகளாக வருகின்றது. இந்த எண்ணெய் சென்னை நகரம், கோவை நகரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் வழங்குவதற்கு அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

ஒரு குடும்பத்துக்கு (குடும்ப அட்டை ஒன்றுக்கு) ஒரு கிலோ பாமோலின் எண்ணெயோ சூரியகாந்தி எண்ணெயோ அல்லது தேவைப்படுவோர், தேங்காய் எண்ணெயோ, எது வேண்டுமோ அதில் ஒரு கிலோ வாங்கிக் கொள்ளலாம்.

சென்னை நகரத்தில் பாலித்தீன் உறைகளில் அடைக்கப்பட்ட ஒரு கிலோ எண்ணெயின் விலை ரூ. 24.50 என்றும் பாலித்தீன் புட்டிகளில் அடைக்கப்பட்ட எண்ணெயின் விலை ஒரு கிலோ ரூ. 26/- என்றும் அரசு நிர்ணயித்துள்ளது. கோவை நகரம் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் இந்த எண்ணெயின் விலை போக்குவரத்துக்கான செலவினத்துக்காக 35 காசு கூடுதலாகும்.

தற்போது இந்த எண்ணெய் நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

# இரண்டே போதும்!

தேசிய ஒருமைப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கல்வி எனும் கருத்தரங்கு ஆகஸ்டுத் திங்கள் 2 முதல் 5 முடிய சென்னை இராஜாஜி மண்டபத்தில் சிறப்பாக நடந்தது.

மத்திய அரசு தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையின் கள விளம்பரப் பிரிவு, பாடல் மற்றும் நாடகப் பிரிவு ஆகியவையும், தமிழக அரசும் இணைந்து இக் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்திருந்தன.

கருத்தரங்கை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், ''குடும்ப நலத் திட்டத்தில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னணியில் உள்ளது, என்றாலும், இத்திட்டத்தின் குறிக்கோள்கள் பாமரமக்களை சேர்க்க வேண்டும்'' என்று கருத்து தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டார்:

''இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக் கொள்வதில்லை எனத் தாய்மார்கள் சபதம் எடுத்துக் கொள்ள வேண்டும். நடப்பு ஆண்டில் குழந்தைகள் இறப்பு விகிதம் ஆயிரத்துக்குப் பத்தாக உள்ளது. சர்வதேச சுகாதார நிறுவனத்தின் வேண்டுகோளின்படி இதனை ஒன்பதாகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நவீன மருத்துவ வசதிகள் காரணமாகக் குழந்தைகள் இறப்பு விகிதம் குறைக்கப்பட்டுள்ளது.''

இந்தக் கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கிய தமிழக அரசின் இரண்டாம் செயலாளர் திரு. டி. வி. அந்தோணி இ.ஆ.ப. அவர்கள் பேசுகையில், ''ஒரு குழந்தையை நான்கு வயது வரை வளர்க்க ஒரு தாய் 500 நாட்கள் இரவில் தனது தூக்கத்தைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளது. இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொண்டால், ஆரோக்கியமுள்ள தாயை அந்தக் குழந்தைகளுக்கு அளிக்க முடியும்'' என்றார்.

சிறப்புரையாற்றிய மக்கள் நல்வாழ்வுத் துறைச் செயலர் திரு டி. முருகராஜ் இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், ''திட்டமிட்ட குடும்பத்தின் மூலம்தான் தனி நபர் வருமானத்தை அதிகரிக்க முடியும். மக்கள் தொகை வளர்ந்து கொண்டே சென்றால் உலக நாடுகளில் நமது நாடு பின்தங்கி விடும்'' என்றார்.

### ஒற்றுமை வேறு ஒருமைப்பாடு வேறு

4-8-'84 அன்று தேசிய ஒருமைப்பாட்டுத் தினம் கொண்டாடப்பட்டது.



மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் சிறப்புரையாற்றுகையில் தெரிவித்த கருத்துக்களாவன:

''ஒற்றுமை என்பது வேறு; ஒருமைப்பாடு என்பது வேறு. முதலில் ஒற்றுமை வேண்டும். ஒற்றுமை வந்தால் ஒருமைப்பாடு தானாக வந்துவிடும்.

''உலகத்துக்கே ஒற்றுமையை, ஒருமைப்பாட்டைச் சொல்லித் தந்தவன் தமிழன். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' 'உலகமெலாம் உணர்ந்தோதற்கரியவன்' என்றெல்லாம் உலகை வைத்தே எழுதினார்கள் புலவர்கள். ஒருமைப்பாட்டைப் பற்றிப் பாரதி பாடாத பாட்டு உண்டா? எனவே பாரதி வழி நடப்போம்.

''அழகிய பூந்தோட்டம். பன்னிற மலர்கள் அங்கே உள்ளன. ரோஜா, முல்லை, சாமந்தி பூவகையிலே சேராத 'மருக்கொழுந்தும்' அங்கே உண்டு. எல்லாம் சேர்ந்ததுதான் பூந்தோட்டம்; மல்லிகைத் தோட்டம் என்று யாரும் சொல்வதில்லை. எனவே எல்லா மலர்களும் சேர்ந்த அதைப் பூந்தோட்டம் என்று அழைக்கப் போகிறோமா? அல்லது மல்லிகைத் தோட்டம் என்று அழைக்கப் போகிறோமா?''

அன்று நடந்த விழாவில் கள விளம்பர இணை இயக்குநர் திரு தேவிதாஸ் வாரியார், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப., திரு எச். இராமகிருஷ்ணன், திரு டி. ஆஞ்சநேயலு, திரு எஸ். எம். கிருஷ்ணன், டாக்டர் ஏ.ஆர். பாஜு, டாக்டர் நஞ்சுண்டராவ், தமிழ் வளர்ச்சி தமிழ்ப் பண்பாட்டுத் துறைச் செயலர் டாக்டர் அவ்வை நடராசன், திரு டி.வி. ஆனந்தன், திருமதி அரசு மணிமேகலை, திரு சு. சமுத்திரம் ஆகியோர் பேசினர்.

கவின்மிகு கலை நிகழ்ச்சிகளோடு நான்கு நாட்கள் நடந்த இக் கருத்தரங்கு கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தூட்டியது.

**—பி. வி. கிரி**

# மீனவர்களுக்கு இலவச வீடுகள்





கும்மிடிப்பூண்டித் தொகுதி, ஆரம்பாக்கம் கிராமத்தில் தமிழக அரசு 7 லட்சத்து 50 ஆயிரம் செலவில் இலவசமாகக் கட்டித் தந்துள்ள மீனவர் குடியிருப்பை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க.கலைமணி அவர்கள் 29.7.84 அன்று திறந்து வைத்தார். மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த இரண்டு மீனவர்களின் குடும்பங்களுக்கு அரசு வழங்கும் நிவாரண உதவியான 5 ஆயிரம் ரூபாய் நிதி உதவியையும் அமைச்சர் வழங்கினார்.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க.கலைமணி அவர்கள் கும்மிடிப்பூண்டி தொகுதியில் பலவேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் தண்டலச்சேரியில் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக்கட்டடத்தையும், பழைய கும்மிடிப் பூண்டிச் சத்துணவுக்கூடத்தையும், ஆரம்பாக்கத்தில் சத்துணவுக் கூடத்தையும், ஈகுவார் பாளையத்தில் பள்ளிக் கட்டடத்தையும் அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். ஆரம்பாக்கத்தில் இலவச வீட்டு மனைப்பட்டாக்களையும் வழங்கினார்.

ஆரம்பாக்கம் மீனவ கிராமத்தில் ஒரு வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் செலவில், 75 வீடுகளை இலவசமாகத் தமிழக அரசு கட்டித் தந்துள்ளது. இந்த மீனவர் குடியிருப்பை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

விழாவுக்குச் சட்டமன்ற உறுப்பினர் திரு முனிரத்தினம் தலைமை வகித்தார். குடிசை மாற்று வாரிய உறுப்பினர் திரு.ஜெ. பாலன் சிறப்புரையாற்றினார். மீன்வளத் துறை துணை இயக்குநர் திரு சண்முகாநந்தம் வரவேற்புரையாற்றினார். உதவி இயக்குநர் திரு சண்முகம் நன்றி தெரிவித்தார்.

நலிந்த மீனவர்கள் மீன்பிடிச் சாதனங்கள் வாங்கவும், ஏழை ஆதிதிராவிட மக்கள் கறவை மாடுகளும், ஆடுகளும் வாங்கியும் தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் மதுராந்தகம் பகுதியில் மீன்வளத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.க.கலைமணி அவர்கள் 30.7.84 அன்று ஒரே நாளில் 9 லட்சத்து 8 ஆயிரம் ரூபாயைக் கடனாக வழங்கினார்.

மதுராந்தகம் தொகுதியில் அமைந்துள்ளதும் கடலோர மீனவர் கிராமமுமான பெரிய குப்பத்தில் நலிந்த மீனவர்கள் 100 பேருக்கு ஆளுக்கு 5 ஆயிரம் ரூபாய் கனரா வங்கிக்கடன் வழங்கப்பட்டது. அதே வங்கி மூலம் ஆடு வளர்க்க நெடுமரம் காலனியைச் சேர்ந்த ஆதிதிராவிட மக்கள் 25 பேருக்கும், கடலூர் கிராமத்தைச் சேர்ந்த 12 பேருக்கும் ஆளுக்கு 4 ஆயிரம் ரூபாய் வீதம் கடன் வழங்கப்பட்டது.

பின்னர் சீக்கினாங்குப்பத்தில் ஆடு வளர்க்க 40 பேருக்குத் தலா 4 ஆயிரத்து 500 வீதம் ஆடு வாங்கவும், மாடு வாங்கி வளர்க்க 32 பேருக்கு 2 ஆயிரத்து 500 வீதமும் கடன் வழங்கப்பட்டது.

மொத்தம் 9 லட்சத்து 8 ஆயிரம் ரூபாய் ஆகும். இக்கடன் உதவிகளை மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு க.கலைமணி அவர்கள் வழங்கினார்.

அடுத்து கிரல்வாடியிலும், சிறுநல்லூரிலும் சத்துணவு மையக் கட்டடங்களைத் திறந்து வைத்து உரையாற்றினார்.

இவ்விழாக்களுக்குச் சட்டப் பேரவை உறுப்பினர் திரு எஸ்.டி.உக்கம்சந்த் தலைமை வகித்தார்.



# திருச்சியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம்

அந்த அழகிய பந்தலில் ஆடவர், மகளிர், குழந்தைகள் எனக் குழுமியிருக்கின்றனர். தங்கள் ஊருக்குத் தொலைக்காட்சி வரப் போகிறது என்ற குதூகலமும் மகிழ்ச்சியும் அவர்கள் முகத்தில் தெரிகிறது.

ஆம். 10.7.'84 அன்று திருச்சியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத் தொடக்கவிழா கோலாகலமாக நடந்தது.

நாட்டு மக்களில் குறைந்தபட்சம் 70 சதவீதம் பேருக்குத் தொலைக்காட்சி வசதி ஏற்படுத்தித்தரும் வகையில் தொலைக்காட்சி விரிவாக்கத் திட்டம் ஒன்றினை அரசு மேற்கொண்டுள்ளது. இதன்கீழ் நாடு முழுவதிலும் 126 குறைந்த சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களும், 26 உயர் சக்தி தொலைக்காட்சி ஒளிபரப்பிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் 34 குறைந்த சக்தி தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் தென் மாநிலங்களில் அமைக்கப்படுகின்றன. இதில் 6 நிலையங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படுகின்றன. இவை திருச்சி, வேலூர், சேலம், கும்பகோணம், கோயம்புத்தூர், நெய்வேலி ஆகிய இடங்களில் உருவாக்கப்படுகின்றன.

இந்த நிலையங்களுக்கான அனைத்துச் சாதனங்களும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவைகளாகும். இந்தச் சாதனங்களின் மூலம் வண்ண ஒளிபரப்பும் செய்ய இயலும்.

அந்த வகையில் முதன் முதலாகத் திருச்சியில் இந்தத் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான 100 வாட் டி.வி டிரான்ஸ்மிட்டர் பெல் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் தொலைக்காட்சி நிலைய ஒளிபரப்பினை அஞ்சல் செய்வதற்கு, திருச்சி ஒத்தக்கடை அருகே பாரதிதாசன் சாலையில் உள்ள அகில இந்திய வானொலி - திருச்சிராப்பள்ளி நிலைய வளாகத்தில் 110 அடி உயரமுள்ள அஞ்சல் கோபுரமொன்று அமைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் தில்லியிலிருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள் 'இன்சாட் 1-பி' செயற்கைக் கோளின் மூலம் அஞ்சல் செய்யப்படும். இந்த ஒளிபரப்பினை சேனல் 9ல் பொதுமக்கள் பார்க்கலாம். இந்த ஒளிபரப்பு, திருச்சிராப்பள்ளி அதனைச் சுற்றிலும் 25 கிலோ மீட்டர் சுற்றளவுக்குத் தெரியும்.

திருச்சிராப்பள்ளி தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திலிருந்து பின்வரும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும்.

நாள்தோறும் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் நேரம்: மாலை 6.00 மணி முதல் இரவு 11.30 வரை. ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுதல் ஒளிபரப்பு: காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.30மணி வரை, பிற்பகல் 2.00 மணிமுதல் மாலை 6.00 மணி வரை. (பின்பு வழக்கமான ஒளிபரப்பு உண்டு). இரண்டாவது சனிக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை. 4-வது ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை.

தமிழ்நாட்டிற்கென கொடைக்கானலில் 10 கிலோ வாட் உயர் சக்தி டி.வி.டிரான்ஸ்மிட்டர் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இது கொடைக்கானல் மலையில் கடல் மட்டத்திலிருந்து 2172 மீட்டர் உயரத்தில் நிறுவப்படுகிறது. இதற்கான டிரான்ஸ்மிட்டர் கொடைக்கானல் வந்து சேர்ந்துவிட்டது. ஒளிபரப்புக்கென 150 மீட்டர் உயரமுள்ள அஞ்சல் கோபுரம் அமைக்கப்பட்டுவருகிறது. இந்தத்தொலைக்காட்சி நிலையத்திற்கான கட்டடப் பணிகள் நிறைவுபெறும் தறுவாயில் உள்ளன. இப்பணிகள் முடிவடைந்து ஒளிபரப்பு அஞ்சல் தொடங்கப்படுவதற்கு இடையில், இந்தக் கட்டடத்தின் மீது 15 மீட்டர் உயரமுள்ள குறைந்த சக்தி 'ஆண்டனா பேனல்ஸ்' அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த டிரான்ஸ்மிட்டர் செயல்படத் தொடங்கும்பொழுது சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும். அதுவரை புதுதில்லி நிகழ்ச்சிகள் 'இன்சாட் 1-பி' செயற்கைக் கோளின் உதவியுடன் அஞ்சல் செய்யப்படும். இந்த இடைக்கால ஒளிபரப்பு 40 கிலோமீட்டர் தூரம் வரை தெரியும். நிலையான வசதிகளுடன் செய்யப்படும் ஒளிபரப்பானது 180 கிலோ மீட்டர் வரை தெரியும்.

அன்று நடந்த இந்த இனிய விழாவுக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை வகித்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்.

''தமிழ்நாட்டில் மொத்தம் 10 இடங்களில் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள் அமைக்க உதவும்படி மத்திய அரசை,

தமிழக அரசு வற்புறுத்தியுள்ளது. ஆனால், மத்திய அரசு தமிழ் நாட்டில் 6 இடங்களில் மட்டுமே தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையம் அமைக்க அனுமதி தந்துள்ளது.

''இங்கு டெல்லியில் இருந்து ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகளை மக்கள் பார்க்கிறார்கள். அது போல சென்னையில் உள்ள தொலைக்காட்சி நிலையம் தயாரித்து வழங்கும் நிகழ்ச்சிகளையும் தொலைக்காட்சியில் பார்க்க, மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். தபால்-தந்தி கோபுரங்கள் (மைக்ரோ வேவ் டவர்) எங்கெல்லாம் போகிறதோ, அந்தக் கோபுரங்கள் வழியாகச் சென்னைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும்''.

மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில்—

''தமிழ்நாட்டின் மையப் பகுதியான திருச்சியில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் தொடங்கப்படுவது எல்லா வகையிலும் பொருத்தம் ஆகும். திருச்சி பகுதி கலையிலும், கலாச்சாரத்திலும், இசையிலும் முக்கிய இடம் வகிக்கிறது.

''தொலைக்காட்சி வசதி அமைப்புக்கு நிதி ஒதுக்குவதில் தமிழ்நாடு புறக்கணிக்கப்படுவதாகத் தெரிவித்தார்கள். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொலைக்காட்சிக்குக் கூடுதல் நிதி ஒதுக்கிப் பரவலாக தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

''தமிழ்நாட்டில் தற்போது சென்னை, திருச்சி தவிர மேலும் 6 இடங்களில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தமிழ்நாட்டில் உள்ள மக்களில் 86 சதவீதம் பேர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும். மேலும் 14 சதவீத மக்களும் பார்க்க அடுத்த ஐந்தாண்டுத் திட்ட முடிவுக்குள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

''டெல்லியிலிருந்து ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள்தான் திருச்சியில் பார்க்க முடியும். சென்னை நிகழ்ச்சிகளையும் பார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இங்கு அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்கள் வேண்டுகோள்

## தமிழ்நாட்டில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்கள்

ஆறாவது திட்டத்தில் மிக விரைவுத் திட்டமாக எடுத்துக் கொண்டு தொலைக்காட்சித் தொடர்பை அதிகரிக்கும் வகையில் கொடைக்கானலில் உயர் சக்தி கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையமும், மேலும் கீழ்க்கண்ட 6 இடங்களில் குறை திறன் கொண்ட தொலைக்காட்சி அஞ்சல் நிலையமும் அமைக்க மத்திய அரசு முடிவெடுத்தது. அவை:

1. திருச்சி, 2. சேலம்-ஏர்க்காடு, 3. வேலூர், (கழிஞ்சூர்), 4. கோயம்புத்தூர் 5. கும்பகோணம், 6. நெய்வேலி.

**சேலம் :**

ஏர்க்காடு மலையில் 'லேடீஸ் சீட்' பகுதியில் புறம்போக்கு இடத்தில் 4 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, வானொலி பொறியியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்குத் தேவைப்படும் கட்டடம் வானொலித்துறையால் கட்டி முடிக்கப்பட்டு, தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர் அமைப்புப் பணியும் முடிவுற்று இவ்வாண்டு அக்டோபருக்குள் துவக்கப்படும்.

**கோயம்புத்தூர் :**

கோயம்புத்தூரில் குறைந்த சக்தியுள்ள தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர் நிலையத்தை அமைக்க, கோவை சிறைச்சாலை வளாகத்தினுள் ஒரு ஏக்கர் நிலத்தை இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**வேலூர் :**

வேலூரை அடுத்த கழிஞ்சூர் கிராமத்தில் தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான 80 சென்ட் நிலத்தையும், இதில் உள்ள கட்டடத்தையும், குறைந்த சக்தி கொண்ட தொலைக்காட்சி நிலையம் அமைப்பதற்கு வானொலி பொறியியல் துறைக்கு வழங்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆணை 22.2.84ல் பிறப்பிக்கப்பட்டது. பணிகள் நடைபெற்று வருகின்றன. 1984 இறுதிக்குள் தொலைக்காட்சி நிலையம் செயல்படத் துவங்கும்.

**கும்பகோணம் :**

தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தில் மத்தியப் பகுதியில் கற்பகம் விடுதியின் மேல் தளத்தையும், விடுதியில் இருக்கும் இட அறைகளையும் வாடகைக்கு எடுத்துக் கொள்ள வானொலித்துறை ஒப்புக் கொண்டு இதற்கான ஒப்பந்தம் செய்து கொள்ளும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நெய்வேலி:**

தென்னார்க்காடு மாவட்டம் நெய்வேலியில், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கக் கழகத்திற்குச் சொந்தமான இடத்தில், இதற்கான இடமும் கட்டடமும் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணிகள் அண்மையில் துவக்கப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி அஞ்சல் நிலையங்களுக்கான இடங்களையும், கட்டடங்களையும் உடனடியாகத் தருவதில் தமிழ்நாடு முதல் மாநிலமாகத் திகழ்கிறது.



# இம்சைகள் இல்லாத பரிசு!

காலநடைகள் இறைவன் நமக்கு அளித்த வரப்பிரசாதம். கிராமப்புற வாழ்க்கையில், கால்நடைகளின் உதவியின்றி எந்தத் தொழிலையும் நாம் கற்பனை செய்துகூடப் பார்க்க இயலாது.

இலட்சக்கணக்கானவர்களுக்குப் பாலையும், நாட்டுக்கு உணவையும், போக்குவரத்துக்கும், தோல் பொருட்களுக்குக் கச்சாத் தோலையும் கால்நடைகள் வழங்குகின்றன. ஆயினும், இன்றைய தேதிவரை, கால்நடைகளை வளர்க்கும் விதம் குறித்து சரிவர அறிவதில் எவரும் அக்கறை காட்டவில்லை.

சமுதாயத்தில் மனிதனின் சொத்தாகவும், தகுதியின் சின்னமாகவும் கால்நடைகள் கருதப்பட்டன. காலம் காலமாக மனித நாகரிகத்தின் ஒரு அங்கமாகக் கால்நடைகள் இருந்து வருகின்றன. இப்போதுகூட, கிராமப்புறத் தேவைகளைக் கால்நடைகள்தாம் தீர்த்து வைக்கின்றன.

தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப்பிடித்துப் பார்ப்பது என்பதுபோல, இயற்கையின் பரிசைத் தவறாகப் பயன்படுத்துவது மனிதனின் வழக்கமாக உள்ளது. இதுபோலவே, கடினமான பணிகளுக்கும் இரக்கமின்றிக் கால்நடைகள் பயன்படுத்தப்படுகின்றன.

காளைகளுக்கு லாடம் அடிக்கும் கொடூரமான முறை இன்றளவும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. கடினமான சாலைகளில் செல்வதனால், குளம்புகள் தேயாமலிருக்க இந்த ஏற்பாடு. குளம்புகளில் அடிக்கப்படும் லாடங்கள் சரியான வடிவில், ஆணி வைத்து அடிக்கப்பட வேண்டும்.

தவறான முறையில் லாடம் பொருத்துவதனால், பிராணிகள் சொல்லொணா துன்பத்துக்கு ஆளாகி, மெல்ல மெல்ல நடக்கும் சக்தியை இழக்கின்றன. உரிமம் பெற்றவர்கள் மட்டுமே இப்பணியைமேற்கொள்ள வேண்டும் என்று நிபந்தனை விதிக்க வேண்டிய தருணம்வந்துவிட்டது.

குறைபாடுகளுடன் கூடிய ஏர் மற்றும் வண்டிகள் கால்நடைகளை மேலும் துன்பத்தில் ஆழ்த்துகின்றன. தாங்கு கட்டைகள் இவற்றின் கழுத்தைப் பதம் பார்த்து, ஆற்ற இயலாத காயங்கள் ஏற்படுகின்றன.

சாட்டையால் அடித்தல், ஊசியால் குத்துதல், வாலை முறுக்குதல் போன்ற இரக்கமற்ற செய்கைகள் மூலம் பணியில் ஈடுபட இவை அல்லல்படுத்துப்படுகின்றன. கொடூரமான முறையில் கால்நடைகளைக் காயடிப்பதும் நடைபெறுகின்றன. இறைச்சிக்கான கால்நடைகள்கூட இதற்கு விதிவிலக்கல்ல. உணவும், நீரும், ஓய்வுமின்றி, நடையாய் நடத்திக் கொண்டுவரப்பட்டு, இவை கொல்லப்படும் கதையைக் கேட்டால் கரையாத மனமும் கரையும்.

பிராணிகளை நேசிப்போர், கால்நடைகளை இம்சிக்காமல் பயன்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும். மேம்படுத்தப்பட்ட ஏர் மற்றும் நவீன விவசாயக் கருவிகள் கால்நடைகளின் கழுத்துக்களைக் காப்பாற்றவல்லவை.

கால்நடைகள் சிரமமின்றி வண்டி இழுக்க ஏதுவாக, மாட்டு வண்டிகளும் தக்க முறையில் வடிவமைக்கப்படுகின்றன. அடிமாடுகளை வெட்டுமுன்பாக வலி தெரியாத துப்பாக்கி ரவைகளின் மூலம் தூங்க வைத்து, பின்னர் இறைச்சிக்கும், தோலுக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

கால்நடைகள் மனித இனத்திற்குச் செல்வம் போன்றவை. வாழும்போது, குழந்தைகளுக்குச் சத்தான பாலைத் தருவதுடன், பண்ணை வேலைகளையும் இவை செய்கின்றன. இறந்த பின்னர், இவற்றின் தோல் பலவகைகளில் நமக்குப் பயன்தருகின்றது. இவற்றின் கொம்புகளைக்கூட சீப்பு செய்யவும், இதர கலைப் பொருட்கள் செய்யவும் பயன்படுத்தலாம். இவற்றைச் சரிவரப் பேணுவது நமது கடமை. செல்வமாக மட்டுமின்றி, சொந்தக் குழந்தைகள் போல், கால்நடைகளைப் பாவித்து, நடத்த நாம் உறுதி பூணுவோம்!

**—இந்திய அரசு பத்திரிகைத் தகவல் அலுவலகம்.**

---

விடுத்தார். அந்தக் கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். அவர் கேட்டது போல தபால்-தந்திக் கோபுரங்கள் (டவர்)வழியாக இணைப்புக் கொடுத்து சென்னை நிகழ்ச்சிகளைத் திருச்சியில் ஒளிபரப்ப சம்பந்தப்பட்ட அமைச்சர், அதிகாரிகளிடம் பேசி ஆவன செய்கிறேன்.

''தமிழ்நாட்டில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வண்ணத்தில் ஒளிபரப்ப நடமாடும் கலர் டெலிவிஷன் நிலையம் (ஓ.பி. வேன்) தேவை என்று அமைச்சர் ஆர்.எம். வீரப்பன் அவர்கள், கேட்டார். இந்த விஷயத்தில் தமிழ்நாட்டை எக்காரணம் கொண்டும் ஒதுக்கி விடவில்லை. காஷ்மீர், அசாம், மிஜோராம், ராஜஸ்தான் போன்ற எல்லையோர மாநிலங்களுக்கு முதலில் முன்னுரிமை வழங்கி இருக்கிறோம். அதைத் தொடர்ந்து தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கும் அந்தத் திட்டம் விரைவுபடுத்தப்படும்'' என்றார்.

விழாத் தொடக்கத்தில் சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர் திரு சவுடேகர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். தலைமைப் பொறியாளர் திரு எம்.ஐ.சூரியநாராயணா, திருச்சி ராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு விசுவநாதன் இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திரு துரை செபாஸ்டியன், திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு சுப்பிரமணியம் ஆகியோர் தொலைக்காட்சியின் அவசியம் குறித்துப் பேசினர்.

விழா முடிவில் நாதஸ்வரம், கரக ஆட்டம், நையாண்டிமேளம் முதலான நிகழ்ச்சிகள் நடந்தன.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**
**—பி. வி. கிரி**



# சிறுவாணி

**பி. சுப்பையா**

**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்**
**கோயம்புத்தூர் மாவட்டம்.**

**கோ**வையிலிருந்து பழம்பெரும் மூதூர் பேரூர் செல்லும் வழியில், ஆலந்துறை என்ற பழம்பதியைக் கடந்து சென்றால், பெரியாறு ஒன்று குறுக்கில் வரும். அதைக் கடந்தால் மலையும் காடும் சூழ்ந்த மனமகிழ்வூட்டும் எழிலை நாம் காணலாம். இவ்வெழில் சூழ்ந்த கானகத்தே அமைந்துள்ள சாலை வழியில் கடந்து சென்று குன்றுகள் பல கடந்து சென்றால், கேரள மாநிலத்தின் எல்லையிலே சிறுவாணி எனும் ஆறு ஓடும். இவ்வாறு ஓடி கேரள மாநிலத்தில் பரவி, பவானியில் கலக்கும் நிலை. கொங்குத் தமிழ்ச் சீமையாம் கோவை மாநகரத்திற்குத் தீராத குடிநீர்ப் பிரச்னை இருந்த காலம் உண்டு.

இக்குடிநீர்ப் பிரச்னையை அகற்றுவதற்குக் கோவையிலிருந்து 32 கி.மீ. தொலைவில் ஓடிக் கொண்டிருக்கும் சிறுவாணி ஆற்று நீரைப் பயன்படுத்தத் தமிழக அரசு முடிவுசெய்து, அந்த ஆறு ஓடும் பகுதி கேரள மாநிலத்தின் ஒருபகுதியாக இருந்ததால், கேரள மாநிலத்தினுடைய ஒப்புதலுடன் அணை ஒன்றினைக் கட்டி, நீரினைத் தேக்கி, தேங்கியிருக்கும் நீரைக் குகைப்பாதை வழியாகக் கோவைக்குக் கொண்டு வந்து குடிநீர் வழங்கத் திட்டம் காணப்பட்டது.

தமிழக அரசின் எண்ணத்தை-திட்டத்தைக் கேரள அரசும் ஒப்புக்கொண்டு, அந்த ஒப்புதலோடு அணை கட்டுகின்ற பணி துவக்கப்பட்டது. அணை கட்டுவதற்கான திட்டமும், மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு கேரள அரசிற்கு, நிதியினைத் தமிழக அரசு தருவதென்றும், அந்த நிதியைக் கொண்டு கேரள மாநில எல்லையில் சிறுவாணி ஆற்றின் இரண்டு மலைக்கு இடையே ஒரு அணையை எழுப்புவது என்றும், தமிழக அரசும், கேரள அரசும் நல்லெண்ணத்தின் அடையாளமாய், கூட்டுறவின் மேம்பாடாய் இத்திட்டத்தை நிறைவேற்றித் தந்திட, கோவை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட முனைந்து சிறுவாணித் திட்டம் உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது.

இத்திட்டம் புவிஈர்ப்பு அணை நீர் எடுப்புக் கோப்பு, குகைப் பாதை, முழு அளவு நீர் சுத்திகரிப்பு நிலையம், சுத்தநீர்த்தேக்கம், முன் வலிமையூட்டப்பட்ட கற்காரை நீர் கொணரும் குழாய், ஆற்றின் குறுக்காகப் பாலங்கள், அழுத்த முறிப்புத் தொட்டிகள், பிரதான நீர்த் தேக்கத் தொட்டி, விநியோக மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், மற்றும் வார்ப்பு இரும்புக் குழாய், கல்நார்க் குழாய், பி.வி.சி. குழாய் அடங்கிய நீர் பகிர்மாண அமைப்ப ஆகிய அனைத்துப் பொதுச் சுகாதாரப் பொறியியல் சிறப்பியல்களும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரே திட்டமாகச் சிறுவாணித் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இது தமிழகத்திலேயே தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட்ட மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தின்படி கேரள மாநில எல்லையிலுள்ள சிறுவாணி ஆற்றில் 650 மில்லியன் கனஅடி நீர் கொள்ளளவு கொண்டதாகவும், 22.47 சதுர கி.மீ. நீர்ப்பிடிப்புப் பகுதியைக் கொண்டதாகவும், அணையின் நீளம் 224மீ. உள்ளதாயும், அதிகப்படியான அணையின் உயரம் 55 மீ. உள்ளதாயும், மூன்று நீர் வழிந்தோடும் பகுதியின் நீளம் 45.4 மீ. உள்ளதாயும், அணை திறப்பு பகுதி 2 மீட்டர் உள்ளதாயும், அணையின் மேல்மட்டம் 883 மீ. 881.5 மீ. முழுஅளவு நீர்மட்டம் 871.5 மீ. உள்ளதாயும், உச்சக்கட்ட வெள்ளநீர் வெளியேற்றம் 15,300 கன அடி வினாடிக்கு உள்ளதாயும், இவ்வணை உருவாக்கப்பட்டிருக்கிறது.

இவ்வணையை உருவாக்குவ



தற்கு ஆரம்பக் கட்ட மதிப்பீடு ரூ. 1,556 லட்சம் ஆகும். இதன் திருத்திய மதிப்பீடு ரூ. 2,203.25 லட்சமாகும். இச்சிறுவாணி அணையில் தேக்கப்படுகின்றநீரை குகைப்பாதை வழியாகத் தமிழக எல்லையில் அமைந்துள்ள ஆனை யாற்றில் விடப்பட்டு, பின்னர் நீர் எடுக்கும் அமைப்புக்களின் மூலம் தமிழக எல்லையிலுள்ள சிறுவாணி மலையடிவாரத்தில் முழு அளவு தண்ணீர் சுத்திகரிக் கப்படுகிறது. 6 அடிக்கு 7 அடி விதம் அளவும், 1.55 கி.மீ.நீள மும் கொண்டதாகக் குகைப் பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆறு மீட்டர் விட்டம், 23 மீ உயரம், கொண்ட நீர் எழுப்புக் கோபுரம் அமைக்கப்பட்டுள்ளது.

800 மி.மீ. அளவுள்ள நான்கு நீர் உச்சக் குழாய்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. 1.4 மீ உயரம் 12 மீ. நீளம் கொண்ட நீர் எடுக் கும் சிற்றணையும், 3 மீ விட்ட முள்ள நீர் சேகரிக்கும் தொட்டி யும் அமைக்கப்பட்டுள்ளது.

முழு அளவு சுத்திகரிப்பு நிலை யம் இருக்கிறது. 16.2மீ×23.4மீ அளவில் அமைக்கப்பட்ட காற்று கலக்கும் அறையும், 14×24 மீ அளவில் அமைக்கப்பட்டுள்ள ரசாயன அறையும், 4.5 மீ விட் டத்தில் அமைக்கப்படவிருக்கும் பிரித்தெடுக்கும் அறையும், 64×24 மீ. அளவில் அமைக்கப் பட்டு உள்ள வடிகட்டும் அறை யும், 16 வடிகையும் அமைக்கப் பட்டுள்ளது. 45 லட்சம் லிட்டர் கொள்ளளவுடைய 2 அறைகளைக் கொண்ட சுத்தநீர்த் தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டிருக்கிறது.

1000 மி.மீ. விட்ட முள்ள முன் வலிமையூட்டப்பட்ட கற்காரைக் குழாய் 31.33 கி.மீ. நீளத்திற்கு அமைக்கப்பட்டு கோவை மாநகராட்சி எல்லைக் குள் அமைந்துள்ள பாரதிப் பூங் காவில் புதிதாக அமைக்கப்பட் டுள்ள முக்கிய நீர்த்தேக்கத் தொட்டியுடன் இணைக்கப்பட்டு நீர் கொண்டுவரப்படுகிறது. 38 லட்சம் லிட்டர் கொள்ளளவு உள்ள பாரதிப்பூங்கா நீர்த் தேக் கத் தொட்டி, 28 லட்சம் லிட் டர் கொள்ளளவுள்ள இரத்தின சபாபதிபுரம் நீர்த்தேக்கத் தொட்டி, 11 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள டாடாபாத் நீர்த்தேக்கத் தொட்டி, 20 லட் சம் கொள்ளளவுள்ள சித்தா புதூர் நீர்த்தேக்கத்தொட்டி, 27 லட்சம் கொள்ளளவுள்ள வ.உ.சி பூங்கா நீர்த்தேக்கத்தொட்டி 20 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள சாந்திப்பூங்கா நீர்த்தேக்கத் தொட்டி, 9 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள வைசியாள் தெரு நீர்த் தேக்கத் தொட்டி, 14 லட்சம் லிட்டர் கொள்ளள வுள்ள நகர்மன்றம் நீர்த்தேக்கத் தொட்டி, 24 லட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள புலியகுளம் நீர்த்தேக்கத்தொட்டி ஆகிய தொட்டிகளின் மூலம் கோவை மாநகரின் பல்வேறு பகுதிகளுக் கும் சுற்றியுள்ள நகரப்பகுதிகளுக் கும், குடிநீர் விநியோகிக்கப்படு கிறது. இத்தொட்டிகளிலிருந்து குடிநீரை விநியோகிப்பதற்காகக் கோவை மாவட்டத்தில் 143.3 கி.மீ. மாநகராட்சி உடன் இணைக்கப்பட்ட சிங்கநல்லூர், கணபதி பகுதிகள், 105.5 கி.மீ. மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள சங்கனூர், தெலுங்குப்பாளையம் 51.40கி.மீ. கோவை நகரத்தைச் சுற்றியுள்ள குறிச்சி, குனியமுத்தூர் ஆகிய பகுதிகளில் 61 கி.மீ. ஆகமொத் தம் 362.5 கி.மீ. பகிர்மாணக் குழாய் அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின் மூலம் கோவை மாநகரத்தைச் சேர்ந்த 7 லட்சம் பேர், கோவை மாநக ரத்துடன் இணைக்கப்பட்ட சிங்கநல்லூர், கணபதி, குனியமுத்தூர், சங்கனூர், தெலுங்குப்பாளையம், பாலரங்க நாதபுரம், கோவை ஊரகம், பகுதிகளில் வாழும் 3.41 லட்சம் பேர், கோவை நகரத்தைச் சுற்றி யுள்ள கவுண்டபாளையம், சூலூர் குறிச்சி, குனியமுத்தூர் பகுதியி லுள்ள 65 குடியிருப்புகளில் உள்ள 1.97 லட்சம் பேர் ஆக மொத்தம் 12,38,000 பேர் இத் திட்டத்தினால் பயன்பெறுகிறார் கள்.

இது தவிர மருதமலை, பாரதி யார் பல்கலைக் கழகம், போத்த னூர், புகையுந்து நிலையம், விவசாயப் பல்கலைக் கழகம், சூலூர் விமானப் படைத்தளம், ஆகிய நிறுவனங்களுக்குச் சிறு வாணித் திட்டத்தில் இருந்து நீர் வழங்கப்படுகிறது. சிறுவாணி அணையைக் கட்டி முடிப்பதற்கு திருத்திய மதிப்பீடு ரூ. 2,200.25 லட்சம் என அரசு ஏற்றுக் கொண்டு நிதியினை ஒதுக்கீடு செய்தது. இணைக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் விநியோ கிக்க ரூ. 465 லட்சமும், ஒருங் கிணைந்த நகர வளர்ச்சித் திட் டத்தின் கீழ் அமைக்கப்பட்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க ரூ. 212.92 லட்சமும், கோவை நகரத்தைச் சுற்றியுள்ள நகரங் களுக்குக் குடிநீர் வழங்க ரூ.95.65 லட்சமும் நிறுவனங்களுக்குக் குடி நீர் வழங்க முதலீட்டுத் திட்டத் தின் கீழ் ரூ. 21.46 லட்சமும், வழியோரத்திலுள்ள 65 குடி யிருப்புகளுக்கு ரூ. 59.58 லட்ச மும் ஆகமொத்தம் ரூ. 3054.86 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு மே'84 வரை ரூ.2,614.09 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.

கேரள மாநில அரசின் பொறுப்பில் தமிழக அரசு நிதி ஒதுக்கீடு செய்து சிறுவாணி ஆற் றின் குறுக்கே கட்டப்பட்டு வந்த அணை முற்றுப் பெற்று திறப்பு விழாவை எதிர்நோக்கியிருக் கிறது.

குகை வெளிப்பகுதிக்கும், நீர் எடுக்கும் சிற்றணைக்கும் இடைப் பட்ட நீர்மட்ட வித்தியாசத்தைப் பயன்படுத்தி 3,000 கிலோவாட் மின்உற்பத்தித் திறன் கொண்ட சிறிய நீர் மின்நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 21 பேரூராட்சிகள், 476 கிராமங்கள் குடிநீர் பெறுகின்ற வகையில் உலக வங்கியின் கடன் உதவி யுடன் 36 கோடி ரூபாய் செல வில் மற்றொரு திட்டம் அமைக்கப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மலைமுகடுகளிலிருந்து பாய்ந்து வரும் நீர் ஊற்றுக்கள் ஒன்றாகி, சிறுவாணியில் குதித்தோடி, பவா னியில் கலக்கும் நிலையை மாற்றி, குடிநீருக்காக ஏக்கப் பெருமூச்சு விட்ட மக்களெல்லாம் மகிழ்கின்ற வகையில் சிறுவாணி கோவை மக்களை வாழவைக்கும் ஓர் அரிய ''வாணி''யாக உருப்பெற்று நிற்கிறது.

மலையும், வனமும், ஒன்று சேர்ந்த எழில்மிகு மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதியி லிருந்து மழைநீரின் ஊற்றாய், தெள்ளியதேனாய், பருகச்சுவைக் கும் இளநீராய், சுவைபெருக்கி சிறுவாணி புகழ் சேர்த்து நிற் கிறது. இரு மாநிலத்தின் நல் லெண்ணத்திற்கும். கூட்டுறவிற் கும் ஒரு எடுத்துக்காட்டாய், இத் திட்டம் பொலிவுற்று நிற்கிறது.



## குடும்ப நலத் திட்டம் சிறப்பாகச் செயல்பட...

"மக்கள் அடிப்படையில் மாநிலங்களுக்கு நிதியுதவியைப் பகிர்ந்து அளிக்கும்போது, குடும்ப நலத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல் படுத்தும் மாநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதோடு, தாராள நிதியுதவி அளிக்க வேண்டும்" என்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் கூறிய கருத்தை, மாண்புமிகு மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு சங்கரானந் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்.

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலக் குழுக்களின் 3 நாள் கூட்டு மாநாடு அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்றது.

தமிழகத்தின் சார்பில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

1983-84ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 3 லட்சத்து 90 ஆயிரம் பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டில் 4 லட்சத்து 90 ஆயிரம் பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யப் பட்டது.

பிரதமரின் 20 அம்சத்திட்டத்தில் 13-வது அம்சமாகக் குடும்பக் கட்டுப்பாடு இடம் பெற்று உள்ளது. இதனைத் தீவிரமாக அமல்படுத்தும் மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது. மாறாக, தீவிரமாக அமல் செய்யத் தவறிய மாநிலங்கள் அதற்கான விலையைத் தரட்டும் என்றும் கூறினார்.

குடும்பக் கட்டுப்பாட்டைத் தீவிரமாகச் செயல்படுத்தும் மாநிலங்கள் தண்டிக்கப்படக் கூடாது என்ற மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கருத்தை, கூட்டத்திற்குத் தலைமை வகித்த மாண்புமிகு மத்திய சுகாதார அமைச்சர் திரு பி. சங்கரானந்த் அவர்கள் ஆதரித்தார்.

## குடும்ப நல அறுவைச் சிகிச்சை: தமிழகம் முதலிடம்!

தமிழ்நாட்டில் வருகிற 1984-85ஆம் ஆண்டில் 7 லட்சம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடத்த குறியீடு நிர்ணயிக்கப்பட்டது.

கடந்த ஆண்டில் 4 லட்சம் பேருக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை நடத்தக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இருந்தாலும், அதைவிட அதிகமாகவே மொத்தம் 5 லட்சம் பேருக்கு அந்த அறுவைச் சிகிச்சை நடத்தி முடிக்கப்பட்டது. அந்த அறுவைச் சிகிச்சையில், தமிழக அரசு முதல் இடம் பெற்று இருக்கிறது.

நடப்பு ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சையைத் தீவிரப்படுத்துவதற்காக ஊக்கத் தொகை அதிகரிக்கப்படுகிறது.

ஒரு அறுவைச் சிகிச்சைக்கு டாக்டருக்கும், நர்சுக்கும் சேர்த்து இதுவரை 10 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டது. இனிமேல் அந்தத் தொகை 25 ரூபாயாக உயர்த்தப்படுகிறது. இதில் கீழ்நிலை ஊழியர்களும் பயன் அடைவார்கள்.

அறுவைச் சிகிச்சைக்கு ஆள் சேர்ப்பவருக்கு இதுவரை ஒரு நபருக்கு 10 ரூபாய் மட்டும் கொடுக்கப்பட்டது. இனிமேல் எல்லாச் செலவும் உள்பட ஒரு நபருக்கு 50 ரூபாய் வீதம் கொடுக்கப்படும்.

[27-7-84 அன்று தலைமைச் செயலர் திரு. கு. சொக்கலிங்கம் இ. ஆ. ப. அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களிலிருந்து]

திருச்சியில் 8-7-1984 அன்று நடந்த குழந்தை பெறா உறுதி மொழி ஏற்பு விழாவில் 1983-84ஆம் ஆண்டில் திருச்சி மாவட்டத்தில் குடும்ப நல விளம்பரப் பணிகளைச் சிறப்பாகச் செய்த மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் திரு மா. விசுவநாதன் அவர்களுக்கு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் தங்கப் பதக்கம் வழங்கினார்.





# கிழக்குக் கடற்கரை ஓரத்தில் ஓர் ஆராய்ச்சி மையம்

**அ. ராமையா**

பறங்கிப்பேட்டை கடற்கரைச் சாலையில் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சி மையம் ஒன்று உள்ளது.

1952ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள விலங்கியல் துறைப் பேராசிரியராக இருந்த திரு ஆர். வி.சேஷய்யா என்பவரால் கடல் வாழ் உயிரின ஆராய்ச்சிக் கூடம் தொடங்கப்பட்டது.

1954ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக் கழக வெள்ளி விழாவின்போது இந்த ஆராய்ச்சிக் கூடத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒரு லட்ச ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது. 1963ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் பல்கலைக் கழக மானியக் குழு இந்த ஆராய்ச்சிக் கூடத்தை உயர் நிலை ஆய்வு மையமாக உயர்த்தியது. இம்மையத்திற்குத் தேவையான நிதி உதவியையும் பல்கலைக் கழக மானியக் குழு கொடுத்தது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலுள்ள விலங்கியல் துறையில் இருந்து 1963ஆம் ஆண்டு தனியாகப் பிரிக்கப்பட்டு, கடல் வாழ் உயிரினத்துறை எனப் பெயரிடப்பட்டது.

1970ஆம் ஆண்டு வரை இத்துறையின் இயக்குனராக திரு ஆர். வி.சேஷய்யா இருந்து வந்தார். அதன் பிறகு டாக்டர் ஆர். நடராஜன் இதன் இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

இந்த ஆராய்ச்சி மையத்தில் 86 மாணவர்கள் எம்.எஸ்.சி. வகுப்பிலும், ஆறு மாணவர்கள் எம்.பி.எல். வகுப்பிலும், 46 மாணவர்கள் பிஎச்.டி. வகுப்பிலும் படிக்கிறார்கள்.

இந்த மையத்தில் நான்கு பேராசிரியர்களும், எட்டு இணை ஆசிரியர்களும், ஆறு துணை ஆசிரியர்களும், அறுபது உதவியாளர்களும் பணியாற்றுகின்றனர்.

இம்மையத்தில் பணிபுரிபவர்களுக்குத் தனிவீடுகளும், இங்குப் படிப்பவர்களுக்குத் தனி விடுதியும் உள்ளன.

இம்மையத்திற்குத் தமிழ்நாடு அரசு எழுபது ஏக்கர் நிலத்தைக் கொடுத்துள்ளது. அந்நிலத்தில் இந்த அரிய ஆராய்ச்சி மையம் நிறுவப்பட்டுள்ளது.

1961ஆம் ஆண்டு டாக்டர் தேஷ்முக் பல்கலைக் கழக மானியக் குழுவின் தலைவராக இருந்த போது இம்மையத்திற்குப் போதிய நிதி உதவியைச் செய்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தர் காலஞ் சென்ற ராஜா சர். முத்தையா செட்டியார் இம்மையத்தை வளர்க்க வேண்டும்என்ற விருப்பத்திற்கு இணங்க இத்துறை வளர்ந்துள்ளது.

இங்கு நடக்கும் ஆராய்ச்சிகள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**முதல் பிரிவு**

மீன் இறால் மற்றும் கிளிஞ்சல் வகைகள், மனிதனுக்கு உணவு மற்றும் பலவகைகளில் உபயோகமாக இருக்கும் மீன் வகைகளின் இனப் பெருக்கம், அவைகளின் உணவு வகைகள், அவைகளை நாம் கட்டுப்பட்ட சூழ்நிலையில் வளர்க்கும் முறைகள் பற்றி அறிதல்.

இரண்டாம் பிரிவு: வேதியல்பிரிவு. கடல் நீரின் தன்மை, அதில் கலக்கும் பலவிதமான நச்சுத்தன்மை, இந்த நச்சுக் கொல்லி மருந்துகள் ஆற்றில் உள்ள நீரின் மூலமாகக் கடல் நீருடன் சேர்வதால் கடல் நீரின்



மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு, கடல்வாழ் உயிரின நிலைய இயக்குநர் டாக்டர் ஆர். நடராஜன் ஆகியோர் ஆராய்ச்சி நிலையத்தைப் பார்வை யிடுகின்றனர்.

தன்மையும், மற்றும் அதில் வாழும் உயிரினங்களை எவ்வாறு பாதிக்கிறது என அறிதல்.

மூன்றாம் பிரிவு: கடல்நீரைக் கடற்கரை மண்ணில் பாய்ச்சி காய்கறி மற்றும் சோளம், கம்பு வளர்க்க முடியுமா எனக் கண்டறிதல்.

நான்காம் பிரிவு: மீன் வகைகளின் முட்டை குஞ்சுகள், இவைகளை இம்மையத்திலுள்ள சோதனைக் கூடத்திலேயே பொறித்து வளர்த்து, அவைகளை நீர்நிலைகளில் தேக்கி முழு வளர்ச்சி அடைந்த உடன் விற்பனை செய்வதுபற்றி ஆராய்தல். தமிழ்நாடு மீன் வளர்ப்புத் துறையினரால் இங்கு இறால் வளர்ப்புப் பண்ணைகள் நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பண்ணைகளை சேர்ந்த நீர்த் தேக்கங்களில் இந்த ஆராய்ச்சிகள் மேலும் அதிக அளவில் விரிவுபடுத்தப்படும்

ஐந்தாம் பிரிவு: கடல் சூழ்நிலையில் இருக்கும் நுண்ணுயிர்களைப் பற்றிய ஆராய்ச்சி அவைகளினால் ஏற்படும் நன்மைகள், அவற்றால் ஏற்படும் தீமைகள், நுண்ணுயிரில் இருந்து வெளிப்படும் இரசாயனம் மனித இனத்திற்கு மருந்துகளாகப் பயன்படுத்த முடியுமா என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்துதல்.

இதைத் தவிர இருபது மீனவர்களுக்கு இறால் வளர்ப்பு பற்றி எட்டு வார காலப் பயிற்சி தரப்படுகிறது. இம்மையத்தைச் சேர்ந்த பேராசிரியர்களும், ஆராய்ச்சி மாணவர்களும் ஒன்று சேர்ந்து மீனவர்களுக்குப் பயிற்சி அளிக்கின்றனர்.

மீனவ சமுதாய வளர்ச்சிப் பணியின்கீழ் இது நடைபெறுகிறது. இப்பயிற்சியின்போது மாதம் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அரசு மானியம் அளிக்கிறது.

தற்போது இம்மையத்தில் மீனவர்களுக்கு மூன்றாவது பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மையத்திற்குப் பல்கலைக் கழக மானியக் குழு ரூபாய் ஐம்பது இலட்சம் கொடுத்துள்ளது.

1974-ஆம் ஆண்டில் இருந்து ஆண்டுதோறும் ஆகிற நிரந்தரச் செலவுத் தொகையினை மானியமாகத் தமிழக அரசு கொடுத்து வருகிறது.

இம்மையத்திலிருந்து 500 ஆய்வுக் கட்டுரைகளும், 60 டாக்டர் பட்டத்திற்கான ஆய்வுத் தொகுப்புகளும் இந்நிலையத்தால் அனுப்பப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

ஐந்து ஆண்டுத் திட்டத்தின் கீழ் இம்மையத்தின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பல்கலைக் கழக மானியக்குழு நிதி உதவி வழங்கி வருகிறது.

ஐக்கிய நாடுகளின் உணவு விவசாயக் கழகத்தைச் சேர்ந்த மீன் வளர்ப்பு நிபுணரான டாக்டர் கரீம் என்பவர் இம்மையத்தைப் பார்வையிட்டு, மீன் வளர்ப்புப் பண்ணைகள் அமைப்பதற்கு உரிய ஆலோசனைகளைக் கூறியுள்ளார்.

இந்நிலையத்திற்குப் பல ஆராய்ச்சி வல்லுநர்களும் ரஷ்யா, அமெரிக்கா, ஜெர்மன் ஜப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள, அறிஞர் பெருமக்கள் பலர் வந்து, சிறப்பு சொற்பொழிவு ஆற்றி விவாதமும் நடத்தி உள்ளனர்.

இதன் மூலம் இம்மையத்தின் ஆய்வுகள் நம்நாட்டிலும், வெளி நாட்டிலும் நன்றாக அறியப்பட்டுள்ளன. இம்மையத்தைப் பற்றி அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு, பறங்கிப் பேட்டை மேல்நிலைப் பள்ளிவிஞ்ஞானக் கூடத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு பேசும்போது, ''பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை இம்மையத்திற்கு அழைத்து சென்று காண்பித்தால் தான் அவர்களின் அறிவியல் அறிவு வளர வழியேற்படும்'' என்றார்.

இந்த ஆராய்ச்சி மையத்தில் 400-க்கும் மேற்பட்டவர்கள் எம். எஸ். சி. படித்துப் பட்டம் பெற்றுள்ளனர். இங்குள்ள ஆராய்ச்சி மாணவர்கள் பிச்சாவரம் காடுகளிலும், சதுப்பு நிலத்திலும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

இம்மையத்தால் பறங்கிப் பேட்டைக்குப் பெருமையும், பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைத்துள்ளது.

கிழக்குக் கடற்கரை ஓரத்தில் இம்மாதிரியான ஆராய்ச்சி மையம் இதுவரை நிறுவப்படவில்லை. இங்கு நடக்கும் உயர்நிலை ஆய்வுகள் தமிழ்நாட்டிற்கும், நமது நாட்டிற்கும்பெருமை சேர்க்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.




# கலை இலக்கிய வளர்ச்சிக்கு புதிய மன்றம்

பாவேந்தர் பாரதிதாசன் மக்கள் கலை இலக்கிய மன்றம்' ஜூலைத் திங்கள் 5ஆம் நாளன்று தொடங்கப் பெற்றது.

சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மத்திய நூலகத்தில் நடைபெற்ற தொடக்கவிழாவிற்கு மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தொடக்கி வைத்தார்.

டாக்டர் க. பாலச்சந்திரன் அனைவரையும் வரவேற்றுப் பேசியபோது மன்றத்தின் தோற்றத்திற்குரிய காரணத்தைத் தெளிவாக்கினார். அவர் குறிப்பிட்டார்:

''தேசத்திற்காகப் பாடிய மக்கள் கவிஞரின் பாடல்களை நகரத்தில் மட்டுமின்றி, கிராமங்களில் பரப்புவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது இந்த மன்றம்.''

மாண்புமிகு கல்வி அமைச்சர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''பாவேந்தரின் பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பாடப்பட வேண்டும். ஆயிரக் கணக்கான மேடைகளில் பாடப்பட வேண்டும். அவற்றைக் கேட்பதன் மூலம் மொழி உணர்வு, இன உணர்வு பெற்று, எளிய நிலையில் உள்ள தமிழ்ச் சமுதாயம் வீறுகொண்ட வலிமை கொண்ட சமுதாயமாக மாறவேண்டும்.

''தமிழ்மொழியை உயர்தனிச் செம்மொழி என்கிறோம். மொழி பற்றி, கலாச்சாரம் பற்றி ஒவ்வொரு தமிழ் மகனும் தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்ற விழாக்கள் எல்லாம் மக்களின் நன்மைக்காகத்தான் நடத்தப் பெறுகின்றன என்பதை நாம் சுட்டிக் காட்ட வேண்டும்.

''பாவேந்தர் நினைத்த காரியங்களைச் செயலாக்குவதற்கு நாம் உதவ வேண்டும். ஒரு கவிஞன், எந்த ராகத்தில் பாடப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு பாடலை எழுதினானோ, அதே ராகத்தில்தான் பாடகர் பாடவேண்டும். பாரதிதாசனின் பாடல்கள் மக்கள் மத்தியில் நன்கு பரவ வேண்டும்.''

வாழ்த்துரை வழங்கிய திரு சிலம்பொலி அ.செல்லப்பன் பாவேந்தரின் கவிதைச் சிறப்பை-காட்சி அமைப்பை வியந்து போற்றினார். அவர் தெரிவித்தார்:

''பாவேந்தர் தமது குடும்ப விளக்கில் படுக்கையறைக் காட்சி ஒன்றைக் காட்டுகிறார். அதில் உள்ள தம்பதிகள் நாட்டு நலனுக்காக நாம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். இதுதான் பாத்திரப்படைப்பின் சிறப்பு.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டார்:

''ஒரு மொழி நீண்ட காலம் வாழ்கிறது என்னும்போது அதற்குச் சிறந்த இலக்கியங்கள் வேண்டும் என்பது முக்கியம். அது இயற்றமிழாயினும் சரி, இசைத் தமிழாயினும் சரி, நாடகத் தமிழ் ஆயினும் சரி .

''அச்சுக்கலை வருவதற்கு முன்பே தமிழில் கவிதைகள் தோன்றி வாய்மொழியாகவே இருந்திருக்கின்றன. நினைவில் வைத்துக் கொள்ளும் வகையில் அவை அமைந்திருக்கின்றன. தொல்காப்பியம் - திருக்குறள் - மற்றும் சங்க இலக்கியங்கள் - இராமாயணம் ஆகியவற்றின் செய்யுள்கள் நினைவில் இருப்பதற்கு அவற்றின் கவிதை அமைப்புத்தான் காரணம். முன்தோன்றி மூத்த தமிழ் என்றும், இலக்கியங்கள் உள்ள தமிழ் என்றும் நாம் சொல்வதற்குக் கவிதைகள்தான் சான்றாகத் திகழ்கின்றன. அந்தக் கவிதைகள் ஆசிரியர்கள் மூலம், வாய்மொழியாகச் சொல்லப்பட்டு , வாய் மொழியாகவே கற்றுக் கொள்ளப்பட்டு வந்திருக்கின்றன.

''இப்போது புதுக்கவிதை முளைத்திருக்கிறது. உரை நடையாகவும் இல்லை; கவிதையாகவும் இல்லை. காலத்திற்கேற்றவாறு உதித்திருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் நீண்ட காலத்திற்கு நிலைத்து நிற்கிற கவிதையாக இது இருக்க முடியாது.

''மொழியைக் காக்கும் தெய்வங்களாக இருக்கின்ற ஆற்றல் மிக்க கவிஞர்கள் - புலவர்கள் நல்ல கவிதைகளை - பாடல்களைத் தந்து சென்றிருக்கிறார்

கள். இந்த 20ஆம் நூற்றாண்டின் சிறந்த கவிஞராக பாவேந்தர் - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விளங்குகிறார்.

''புலவர்கள் என்றால் பாடவும் வரும் என்ற காலம் இருந்தது. அவர்கள் எல்லாம் இசையோடு தமிழ் வளர்த்தார்கள். அதனால்தான் தமிழ் இசைத் தமிழ் என்று பெயர் பெற்றது. இசை நடுநாயகமாக அமைக்கப்பட்டது. இன்று தமிழர்களே தமிழிசையைக் கற்றுக் கொண்டு வருகிறார்களா என்பதே கேள்விக் குறியாக இருக்கிறது.

''தமிழாசிரியர்கள் இசை அறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்ற ஒரு விதியை உருவாக்க முடியுமா என்பதை நாம் பார்க்க வேண்டும். அப்படி இயலாது என்றால் அத்தகையவர் களுக்குச் சம்பளத்தை அதிகப்படுத்தியாவது அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

''பாரதிதாசன் தாமே பாடிக் காண்பிப்பார் - மாறான இசை அமைப்பைக் கேட்டுவிட்டால் கோபம் கொள்வார். சேலத்தில் இன்ப இரவு என்ற ஒரு இசை நிகழ்ச்சியைச் சொந்தச் செலவில் நடத்திக் கடன் பட்டவர் பாரதிதாசன் என்றால் இசை மீது அவருக்கு இருந்த நாட்டம் நமக்குப் புரியும்.

''தமிழை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும் நாம் இசையோடு வளர்க்க வேண்டும். உலகில் வேறு எந்த மொழிக்கும் இந்த ஆற்றல் இல்லை, இல்லை, இல்லை.

''பாவேந்தரின் பாடலை மட்டும்தான் பாடுவது என்ற வர்ணாச்சிரம உணர்வு வந்துவிடக் கூடாது. பாவேந்தரின் பாடல்களை மட்டுமின்றி, வள்ளலார் பாடல், பாரதியார் பாடல், திருவாசகம், தேவாரம் ஆகியவையும் இந்த மன்றத்தில் பாடப்பட வேண்டும்.

''அருணகிரிநாதரின் திருப்புகழ் தாள லயத்துடன் உருவாக்கப்பட்டது. இசை அறிவுடன்-தாள ஞானத்துடன் பாடல் எழுதிய அருணகிரியாருக்கு இணையாக வேறொரு புலவர் தமிழில் கிடையாது.

''கருத்தை எடுத்துச் சொல்வதற்குச் சிறப்பான வாயிலாகத் திகழ்கிறது. அதைவிடச் சிறப்பானது நாடகம் ஆகும். இவற்றைக் கொண்டு மொழியை வளர்க்க முனைய வேண்டும்.

சினிமாவில் கூட இலக்கிய நயத்துடன் பாடல் எழுதியவர் கண்ணதாசன். அவருக்குப் பிறகு யார் யாரோ பாடல் எழுதலாம், இப்போதும் கூட எழுதுகிறார்கள். நான் ஒன்று சொல்கிறேன் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது வருகின்ற பாடல்கள் எல்லாம், கண்ணதாசனின் பாடல் போல காலத்தை வென்று நிற்கக் கூடியதல்ல

''பழைய வழக்கங்களை மாற்றாது பின்பற்றுவது போல பழைய இசைகளை விடாது கடைப்பிடிக்க வேண்டும் இசைவாணர்கள்.

''இசை எது என்று தெரியாமல் திண்டாடித் தவிக்கின்ற தமிழர்களுக்குத் தெளிவு ஊட்டுவதற்கு இந்த மன்றம் பயன்படும் என்று கருதுகிறேன். தமிழ் வளரட்டும்! தமிழினம் வளரட்டும்! தமிழ்ச் சமுதாயம் வெற்றிக்குரியதாக மாறட்டும்''.

பாவேந்தர் பாரதிதாசன் மக்கள் கலை இலக்கிய மன்றத்துக் கலைஞர்கள் நடத்திட்ட இன்னிசை நிகழ்ச்சி அனைவரையும் மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்கச் செய்தது.

**நிகழ்ச்சித் தொகுப்பு:**

**தமிழ்ப்பித்தன்.**

## இந்தியத் தொழில் முதலீட்டுக் கழக ஒதுக்கீடு அதிகரிப்பு

இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகம் (Industrial Finance Corporation of India) தமிழ்நாட்டுக்கு ஒதுக்குகிற முதலீட்டு உதவியை அதிகரித்துள்ளது. தமிழ்நாடு கார்ப்பரேஷனின் மொத்த முதலீட்டில் 8.8 சதவிகிதம் பெறுகிறது. முதலீடு பெறுவதில் இந்தியாவில் நான்காவது இடத்தைத் தமிழ்நாடு வகிக்கிறது.

தமிழ்நாடு, இந்தியாவில் மக்கள் தொகை அதிகமுள்ள ஏழாவது மாநிலமாகவும் நிலப் பரப்பில் 13வது பெரிய மாநிலமாகவும் இருந்த போதிலும், அதற்குப் போதிய நிதி முதலீடுகளைக் கழகம் வழங்குகிறது. மின் உற்பத்தி தடையின்றி இருந்தால் தமிழ்நாட்டில் தொழில் நடவடிக்கை அதிகரிக்கும். அதன் மூலம் தமிழ்நாடு மேலும் அதிக முதலீடு உதவிகளைப் பெற முடியும்.

1984-ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் மொத்தம் 189 கோடி ரூபாய் வரை தமிழ்நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளது. 1982-83ஆம் ஆண்டில் 25.54 கோடி ரூபாயும், 1983-84ஆம் ஆண்டில் 34 திட்டங்களுக்கு 23.94 கோடியும் முதலீடு உதவி அளிக்கப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக்கு அளிக்கப்படுகிற உதவியில் 64 சதவிகித உதவி தனியார் நிறுவனங்களுக்கும், பொதுத்துறைக்கு 13சதவிகிதமும், கூட்டுறவுத் தொழில்களுக்கு 23 சதவிகிதமும் போய்ச் சேர்கிறது.

தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கு இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகம் அதிக உதவி அளிக்க முன் வந்துள்ளது. உள்நாட்டில் தொழில் நுட்பம் வளர தேவையான ஆராய்ச்சிகளுக்கு ஊக்கமும் சலுகைகளும் அளிக்க ஏழு வளர்ச்சித் திட்டங்களை இயற்றியுள்ளது. இதற்கு இதுவரை 101.47 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி பகுதிகளைக் கவனிக்கும் தமிழ்நாடு தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை அமைப்பு (சிட்காட்) 3.43 இலட்சம் ரூபாய் உதவி பெற்றுள்ளது.

புதிதாகத் தொழில் தொடங்குபவர்களுக்கு வட்டியில்லாக் கடன் உதவியும், நிர்வாகத்துறையின் பயிற்சி அளிக்கும் திட்டங்களுக்கு உதவியும் இக்கழகம் அளித்து வருகிறது. வங்கி மற்றும் அது சார்ந்த துறைகளில் ஆராய்ச்சி நடத்த சென்னைப் பல்கலைக் கழகத்தில் உள்ள வணிகவியல் துறைக்குத் தொழில் முதலீட்டுக் கழகம் உதவுகிறது.

—19-7-84 அன்று, இந்தியத் தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் திரு. டி.என். தவார் செய்தியாளர்களிடம் தெரிவித்த கருத்துக்களிலிருந்து.

# வளர்ந்து வரும் வண்ணக் கைத்தறி



மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்
**திரு. எஸ். திருநாவுக்கரசு**

இந்தியப் பிரதமர் அறிவித்துள்ள புதிய 20 அம்சப் பொருளாதாரத் திட்டம் கைத்தறி வளர்ச்சிக்கு வேண்டிய வழிவகைகளுக்கும் தொழில்நுட்ப மேம்பாட்டிற்கும் வகை செய்துள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் அமைந்துள்ள நம் தமிழக அரசும் தொடர்ந்து கைத்தறித் தொழிலுக்கு முன்னுரிமையை அளித்து வருகின்றது. கைத்தறித் தொழிலுக்காக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநில அரசு ரூ.27.82 கோடி செலவிட்டது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இச்செலவு ரூ. 84.58 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. மேலும் மாநில அரசு 'மாஸ்டர் வீவர்ஸ்' பிடியிலுள்ள ஏழை நெசவாளர்களை விடுவித்து அவர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ் கொண்டுவரத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில் 2.40 இலட்சம் கைத்தறிகள் 1980ல் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டு செயல்பட்டு வந்தது. இது 41 சதவிகிதம் ஆகும். தேசிய குறியீடான 60 சதவிகிதத்துக்குப் பதில் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்குள் 67சதவிகிதம் அளவிற்குக் கைத்தறிகளைக் கூட்டுறவின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது.

1979-80ஆம் ஆண்டில் இருந்த 1052 ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 31.3.1984ல் 1556 ஆக உயர்ந்துள்ளது. தமிழக முதல்வராக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், மொத்தம் 504 புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் சொந்தத்தில் தறியில்லாத நெசவாளர்களுக்கு 113 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அடங்கும்.

**மூலப்பொருட்கள் வழங்குதல்:**

நமது மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலினை வழங்கத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. அதிக அளவில் கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கடந்த ஐந்தாண்டுகளில் கொண்டு வந்ததால் ஏற்பட்ட அதிகப்படியான நூல் தேவையைப் பூர்த்தி செய்தது. தற்போது இயங்கி வரும் நூற்பாலைகளில் 5 கூட்டுறவு நூற்பாலைகளை விரிவாக்கவும், புதிய நூற்பாலைகளை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி சேலம், வேலூர், தென்னார்க்காடு, பேட்டை மற்றும் பெரியார் மாவட்ட நூற்பாலைகள் ஒவ்வொன்றின் திறனையும் 12,500 கதிர்கள் அதிகமாக்க விரிவாக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் 5 புதிய கூட்டுறவு நூற்பாலைகள் புதுக்கோட்டை (அறந்தாங்கி), தருமபுரி (ஊத்தங்கரை), மதுரை (தேனி), திருநெல்வேலி (எட்டயபுரம்) மற்றும் இராமநாதபுரம் (கமுதி) ஆகிய மாவட்டங்களில் நிறுவ ரூ.37.53 கோடி மூலதனச் செலவில் திட்டமிடப்பட்டு ஆரம்ப வேலைகள் செயல்படுத்தப்பட்டுவருகின்றன. புதிய ஆலைகளை அமைப்பதால் 2,800 பேர்களுக்கும், ஏற்கெனவே இயங்கி வரும் ஆலைகளை விரிவாக்கத்திட்டம் செயல்படுத்தியதனால் கூடுதலாக 1960 பேருக்கும் வேலை வாய்ப்புக்கு வழிவகை செய்கிறது.

1980-ஆம் ஆண்டு ரூ.70.00 கோடியாக இருந்த உற்பத்தி மற்றும் விற்பனைக்கான இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியுதவி (தற்பொழுது தேசிய வேளாண்மை மற்றும் அரசு வளர்ச்சி வங்கி) ரூ. 103.58 கோடி அளவில் 1983-84ல் உயர்ந்துள்ளது. 1984-85 ஆண்டிற்காக ரூ.104.70 கோடி அளவிற்கு உயர்த்தும் உச்ச இலக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வுதவி சலுகை வட்டி வீதத்தில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கோ-ஆப்டெக்சிற்கும் நடைமுறை மூலதனமாக வழங்கப்பட்டுள்ளது.

கைத்தறியின் புதிய தயாரிப்புகளையும், புதிய வடிவமைப்பு





களையும் உருவாக்குவதற்கும் ஏற்ற வகையில் கோ-ஆப்டெக்ஸ் இதுவரை மதுரை, திருச்சி, சேலம், கோவை மற்றும் கடையநல்லூர் ஆகிய இடங்களில் 5 வடிவமைப்புப் பணி நிலையங்களை அமைத்துள்ளது. இதற்காக அரசு ரூ.17.50 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளது. மேற்கண்ட நிலையங்கள் ஆண்டுக்கு 1,100 புதிய வடிவமைப்புகளை உருவாக்கி அவற்றை ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றன. மேற்படி வடிவமைப்புகள் மூலம் ஆண்டொன்றுகு ரூ. 8 கோடி அளவிற்கு உற்பத்தி பெருகி உள்ளது.

**விற்பனை வசதி:**

ஆரம்பக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்யும் துணிகளை விற்பனை செய்ய 'கோ-ஆப்டெக்ஸ்' பெருமளவில் உதவி செய்து வருகின்றது. ஆரம்ப நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிலுவைத் தொகையைக் கொடுக்கவும், மற்றும் துணிநூல் கொள்முதல் செய்யவும் 1982-83 நிதியாண்டில் ரூ. 11.00 கோடி அளவிற்கு வழி வகைக் கடனாக அரசு 'கோ-ஆப்டெக்ஸ்'சிற்கு அளித்துள்ளது. 1979-80ஆம் ஆண்டில் ரூ. 29.00 கோடியாக இருந்த விற்பனை 1983-84ல் ரூ. 88.85 கோடியாக உயர்ந்துள்ளது. 1984-85ஆம் ஆண்டிற்கான விற்பனை இலக்கு ரூ. 100-கோடியாக நிர்ணயிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருத்தியமைக்கப்பட்ட நெசவாளர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1979-80ல் இருந்து 1983-84 முடிய 39,972 நெசவாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. 1984-85ஆம் நிதியாண்டில் ரூ. 3.60 இலட்சம் இத்திட்டத்திற்கெனச் செலவிட்டு 14,400 நெசவாளர் பயிற்சி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தி கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல தரமான கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டம் 1980-81 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நவீன தொழில் நுட்பங்களைக் கொண்டு தரமான துணிகளை உற்பத்தி செய்து வருகின்றது.

1980-81 முதல் 1983 வரை ரூ. 70 இலட்சம் செலவிடப்பட்டு 21047 தறிகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. இத்தொகை மத்திய மாநில அரசுகள் சம பங்காக நிதியுதவி அளித்துள்ளன. 1984-85ஆம் நிதியாண்டிற்கு ரூ.21.00 இலட்சம் இத்திட்டத்தின்கீழ் 6000 தறிகளை நவீனப்படுத்த நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**நலத்திட்டங்கள்:**

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குத் தமிழ்நாடு அரசு ஆயுள் காப்பீட்டுத் திட்டத்துடன் கூடிய சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்றது. 1977-78ம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட நெசவாளர்களின் எண்ணிக்கை 60,500. இது 31.3.1984ல் 88,500 ஆக உயர்ந்துள்ளது.

ஏழைகள் மீது இரக்கம் கொண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் விருப்பப்படி தமிழ்நாடு அரசு 1.3.80 லிருந்து ஆயுள் காப்பீட்டுத் தொகையை ரூ. 500 லிருந்து ரூ. 3,000ஆக உயர்த்தி உள்ளது. இத்திட்டத்தின்படி சந்தாதாரர் இறந்துவிட்டால் அவருடைய வாரிசுதாரருக்குக் காப்பீட்டுத் தொகையாக ரூ. 3,000 ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து பெற்றுத் தரப்படுகிறது. இது தவிர அவர்களுடைய கணக்கில் சேர்ந்த தொகை 7 சதவித வட்டியுடன் வழங்கப்படும்.

**நெசவாளர் வீட்டு வசதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு நெசவாளர் வீட்டு வசதித்திட்டத்தைப் புதுப்பித்து வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் மாநில அரசு மானியத் தொகையுடனும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர் உறுப்பினர்களுக்காக 1979-80ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் 5,000 வீடுகள் கட்டி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. அதில் 3396 வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு இதுவரை 2075 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. 1321 வீடுகள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டு பல்வேறு கட்டுமான நிலையிலுள்ளன.

1.7.1982 முதல் ''ஹட்கோ'' நிறுவனம் ஒரு வீட்டிற்கு ரூ.8000 லிருந்து ரூ.12,000 கடனில் ''ஹட்கோ'' நிறுவனம் ஒரு வீட்டிற்கு ரூ. 9,000 வரை கடனாக கொடுக்கிறது. மாநில அரசு உதவித் தொகையாக ரூ. 1,000 ஒரு வீட்டிற்குக் கொடுத்து வருகிறது. மீதி ரூ. 1300 பயனடைவோர் செலுத்த வேண்டும்.




**சற்றே சிந்தியுங்கள். ஓய்வும், பொழுதுபோக்கும் உங்கள் மனைவிக்கும் தேவை.**

உங்கள் வாழ்க்கைத் துணைவியைக் கேளுங்கள். அவர் வாழ்க்கைத் துன்பத்தைப் பற்றி. உங்கள் மனைவிக்கும் கூட அன்றாட அல்லல்களிலிருந்து விடுதலையே இல்லாமல் இருந்தால் அவர் வாழ்க்கை சலிப்படையக் கூடும். இதைத் தவிர்க்க, உங்கள் மனைவியின் பொழுது போக்கிற்காக ஒரு டிவியை வாங்குங்களேன். தினமும் டிவியில் கண்டுகளிக்க சினிமா, ஒலியும் ஒளியும், நாடகம் போன்ற எத்தனையோ சுவாரஸ்சியமான நிகழ்ச்சிகள். உங்கள் அன்பு மனைவிக்கு இதைவிட சிறந்த அன்பளிப்பு வேறு ஏதேனும் உண்டோ? இனியும் சந்தேகம் ஏன்? வேண்டுமானால் டிவி வைத்திருக்கும் உங்கள் பக்கத்து வீட்டுக்காரரைக் கேளுங்களேன். ஒருவேளை டிவியை இன்றே வாங்க இன்னும் பல முக்கிய காரணங்களை உங்களால் அறிந்து கொள்ளமுடியும்

இப்போது, நீங்கள் எந்த டிவியையும் வாங்கும் முன், அது நம்பகமானதா என்று உறுதி செய்து கொள்ளுங்கள். அதில் தெள்ளத்தெளிவான படத்தோற்றத்திற்கு நீங்கள் தனி முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். செய்தி வாசிப்பவரின் கண் இமைகள் கூட அதில் துல்லியமாகத் தெரிய வேண்டும். அதாவது சாலிடெரில் தெரிவதுபோல்! அணுகிடுவீர் சாலிடெர் வைத்திருப்போரை, அறிந்திடுவீர் அதன் தம் சிறப்பம்சங்களை. அப்போது தெரியும் உங்களுக்கு எதனால் சாலிடெரே அனைவராலும் விரும்பப் படும் டிவி என்று! சாலிடெர் எகானமி மாடெல்களிலும் கூட டீலக்ஸ் அம்சங்களான விசிஆர் (VCR) மற்றும் பிக்அப் கனெக்ஷன்கள் அமைந்துள்ளன.

விற்பனைக்கு விடுப்போர் :
டிஜிவிஷன் எலக்ட்ரானிக்ஸ் (பி) லிட்.
44, சி.பி. ராமசாமி ஐயர் சாலை
அபிராமபுரம், சென்னை 600 018.

TS 33E
டீலக்ஸ்
அம்சங்கள் கொண்ட
புதிய
எகானமி மாடல்



# சாலிடெர்

-தொல்லையில்லாத் தொலைக்காட்சி

DE 1014 A

# தமிழ் நாட்டில் எரிசக்தி

எல்.என்.விஜயராகவன் இ.ஆ.ப.,
இணைச் செயலாளர்.
திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை.
தமிழ்நாடு அரசு.

"எங்கெங்கு காணினும் சக்தியடா" என்று பாவேந்தர் பாரதிதாசன் பொழிந்த கவிப் பெருமழையில் முதல்துளி. எங்கும் எதிலும், இயங்குகிற ஒவ்வொரு அணுவிலும் சக்தி பயன்படுத்தப் படுகிறது. அடுப்படியிலிருந்து தொடங்கி விவசாயம், சிறு தொழில்கள், பெரிய பெரிய ஆலைகள் வரை அனைத்துத் துறைகளுக்கும் சக்தி தேவைப் படுகிறது.

நாகரிகம் வளர வளர உற்பத்தி முறைகள் பெருகப் பெருகச் சக்தியின் தேவையும் அதிகரித்து வருகிறது. புயல் வேகத்தில் பெருகி வரும் சக்தி தேவைகளைப் பூர்த்தி செய்ய புழக்கத்தில் உள்ள நிலக்கரி, பெட்ரோல், டீசல், எண்ணெய் வகைகள், நீர், அனல் மின்சாரம் ஆகிய சக்தி மூலங்களை மட்டும் நம்பியிருப்பது கூடாது என்பது நிரூபணமாகி வருகிறது. மேலும் இயற்கை எண்ணெய் மூலங்களும் மின்சக்தி மூலங்களும் வெகுவாக வளங்குன்றி வருகின்றன. இந்தச் சூழ்நிலையில் நம் முன்னே நிற்கும் எரிசக்தி தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகிறோம்?

அனைத்து வல்லமையும் பொருந்திய அறிவியல் வளர்ச்சி இக்கேள்விக் குறியை நிமிர்த்துகிறது. ஆம்! எரிசக்தி பிரச்னையைத் தீர்க்க ஓர் இருமுனை யுக்தி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒன்று, ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வரும் சக்தியை எவ்வாறு சேமிப்பது. அதாவது, குறைந்த எரிசக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்தி அதிகப் பலன் பெற வழிவகைகளைக் கண்டறிதல், மற்றொன்று காற்று விசை, சூரிய சக்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி இயங்கும் சாதனங்களை அமைத்து அவ்வகைச் சக்தியைப் பெருக்குவது; சாணம், மனிதக் கழிவு மற்றும் பிற கழிவுகளிலிருந்து எரிசக்தியைப் பெருக்குவது; இவ்விருமுனை யுக்தியின் மூலம் நடப்பாண்டிலும் ஏழாவது திட்ட காலத்திலும் நம்முடைய எரி சக்தி பிரச்னைகளைத் தீர்க்க பெருத்த வாய்ப்புள்ளது.

**சக்தி சேமிப்பு:**

புழக்கத்திலுள்ள சக்தி மூலங்களைத் திறம்படக் கையாள்வதன் மூலம் பெருவாரியாகச் சக்தி சேமிக்கப்படுகிறது. அடுப்பெரிக்கப் பயன்படும் விறகு போன்ற எரி பொருட்களைச் சேமிக்க ஆற்றல் மிக்க அடுப்பு வகைகள் அமைக்கப்படுகின்றன.

'பிரியாக்னி' போன்ற அடுப்பைப் பயன்படுத்தும்போது கணிசமான அளவு எரிபொருள் சேமிக்கப்படுகிறது. விவசாயத் துறையில் நீர் இறைக்கும் எந்திரங்களில் ஏற்கெனவே பயன்படுத்தப்பட்டு வரும் கீழ்த் திறப்பு (புட் வால்வு) மாற்றியமைக்கப் படும்போது எந்திரத்தின் இறைக்கும் திறன் கூடுதலாவதுடன் மின்சக்தியும் 15-20 சதவீதம் மிச்சப்படுகிறது.

10 லட்சம் நீரிறைக்கும் எந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டில், அனைத்து எந்திரங்களிலும் வலிமைமிக்க இந்தப் புதுவகைக் கீழ்த் திறப்பை அமைக்கும் போது ஒரு எந்திரத்துக்கு 240 யூனிட்டுகள் என்ற கணக்கில் கோடிக் கணக்கான யூனிட் மின்சாரம் ஆண்டுதோறும் சேமிக்கப்படும். எனவே, புதுவகை கீழ்த் திறப்பை விவசாய நீர் இறைக்கும் எந்திரங்களில் பொருத்த முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

ஏற்கெனவே, 1983-84-ஆம் ஆண்டில் சோதனை முறையில் செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியத்தில் 200 பம்பு செட்டுகளிலும், கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் 200 பம்பு செட்டுகளிலும் இப்புது வகைப் புட்வால்வை அமைக்க அரசு மானியம் வழங்கியுள்ளது. மேலும், விவசாயத் துறையில் பல்வேறு பணிகளையும் விரைவாகவும் திறம்படவும் செய்யும் வகையில் உழுதல், பாத்திகட்டுதல், கதிரறுத்தல், சுமைதூக்கல் ஆகிய பல்வேறு பணிகளுக்கும் பயன்படக்கூடிய எருதுகள் இழுக்கும் டிராக்டரான 'ட்ராபிகல்டர்' மானிய விலையில் முற்போக்கு விவசாயிகளுக்கு அளிக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் மனித சக்தியும் கால்நடை ஆற்றலும் கணிசமாகச் சேமிக்கப்படும் என்பது உறுதி.

ஆலைகளிலும் தொழிற்சாலைகளிலும் பயன்படுத்தப்படும் சக்தியைச் சேமிக்க வழிவகைகள் ஆய்வு செய்யப்படுகின்றன. "தேசிய உற்பத்தித் திறன் வாரியம்" "இந்தியப் பொறியியல் தொழிற்சாலைகளின் குழுமம்" போன்ற நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து 100 பெரிய தொழில் நிறுவனங்களில் "எரி சக்தி தணிக்கை" என்றொரு திட்டத்தை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு மின்வாரியத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் முக்கியப் பொருள் உற்பத்தியினூடே அவ்வாலைகளுக்குத் தேவையான சக்தியையும் உற்பத்தி செய்து கொள்ளும் திட்டம் (Cogeneration of Power) ஆய்வு செய்யப்பட்டு இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் இத்திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்படும்.

**புதிய சக்தி மூலங்கள்:**

சூரிய சக்தி மூலம் செயல்படும் சமையல் அடுப்புகள் பிரபலப்

படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வடுப்புகளை மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தும் வகையில் செய்முறைத் திட்டங்கள் மூலம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எடுத்துச் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் உதவியுடன், மாநில அரசு கணிசமான தொகையை இதற்காக ஒதுக்கியுள்ளது.

சூரிய சக்தி மூலம் கொதி நீர்க் கலங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த பால்வள நிறுவனங்களிலும், பால் பதனிடும் நிலையங்களிலும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி ஆலையில் சாயம் ஏற்றும் பிரிவுகளிலும், மாணவ, மாணவியர் விடுதிகளிலும் நிறுவப்பட்டு வருகிறது. மேலும், இந்தச் சாதனங்களை மருத்துவ விடுதிகளிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், மகப்பேறு மருத்துவமனைகளிலும் நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

சூரிய சக்தியைப் பயன்படுத்தி தொலைதூரத்திலுள்ள மலைப் பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. கடந்த 1983-84 நிதியாண்டில் கல்ராயன் மலையைச் சேர்ந்த 5 கிராமங்களில் சூரிய சக்தியை மின் சக்தியாக மாற்றி மின்வசதி செய்து தர, போட்டோ வோல்டேக் அமைவுகள் நிறுவப்பட்டு உள்ளன. அவை மிகவும் சிறப்பாகச் செயல்படுகின்றன. இதே முறையில் மேலும் 20 கிராங்களுக்கு மின்வசதி செய்து தர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. போட்டோ வோல்டேக் அமைவுகள் மூலம் கிராமிய மின்வசதி செய்யும்முறை இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் நீர் இறைக்கும் காற்றாலைகளை நிறுவ மத்திய அரசு கணிசமான அளவு மானியம் வழங்குகிறது. மாற்று எரிசக்தி மூலங்களுக்கான குழு தமிழ்நாட்டில் 30 காற்றாலைகளை நீர்ப்பாசனத்திற்காகச் செயல்விளக்க முறையில் நிறுவ உதவியுள்ளது. இந்தக் காற்றாலைகளைப் பெருவாரியாக விவசாயிகள் மத்தியில் எடுத்துச் செல்லத் தகுந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

எரிசாண வாயு தயாரிக்கும் திட்டம் வெகுவாக மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எரிசாண வாயு தயாரிக்கும் எந்திரத்தை நிறுவத் தேவையான கடனுதவியும் மானியமும் வழங்கப்படுகின்றன. தேசிய எரிசாண வாயு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 1983-84ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 5000-ஐ எளிதில் எட்டிவிட முடிந்தது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்தது 35,000 எரிசாண வாயு அமைவுகளை நிறுவிடத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. மனிதக் கழிவு மற்றும் பிற கழிவுப் பொருட்களிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் சாத்தியக்கூறுகள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

சக்தி சேமிப்புச் சாதனங்களையும், புதிய வகை சக்தி மூலங்களை, சூரிய சக்தி, காற்று விசை போன்றவற்றைக் கொண்டு இயங்கும் சாதனங்களைத் தயாரிப்பவர்களுக்கும் நிறுவுவோருக்கும் மத்திய அரசு பல சலுகைகளை வழங்கியுள்ளது. இந்தச் சலுகைகள் பற்றிய விளக்கங்கள் அடங்கிய சிறு தொகுப்பு ஒன்று அமைக்க நிறுவனங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதில் ஆர்வம் காட்டும் நிறுவனங்களுக்குத் தேவையான கடன் வசதி, அத்தகைய கடன்களை வழங்கும் நிதி நிறுவனங்களுக்குப் போதுமான மறுநிதி வசதியும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் எரிசக்தி தேவைகளைக் கண்டறிந்து அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த ஊரக எரிசக்தித் திட்டம் என்றொரு திட்டம் மத்திய திட்டக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு, அத்திட்டம் சோதனை ரீதியாகத் தமிழ்நாட்டில் இரண்டு ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது. செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள காட்டாங்குளத்தூரும், கோவை மாவட்டத்திலுள்ள சர்க்கார் சாமக்குளமும் இதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்த ஒன்றியங்களில் முதல் கட்டமாக, மக்களின் எரிசக்தித்தேவைகள் கணக்கெடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பூர்த்திசெய்யும் முகத்தான்சூரிய அடுப்புகளைப் பரப்புதல், புகையற்ற அடுப்புகளை அமைத்துத் தருதல் 'பிரியாக்கினி' என்ற ஆற்றல் மிக்க அடுப்புகளை வழங்குதல், நீர் இறைக்கும் காற்றாலைகள் நிறுவுதல்போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நடப்பு நிதி ஆண்டில் மேலும் 5 ஒன்றியங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இவ்வாறாக தமிழ் நாட்டில் அனைத்து ஒன்றியங்களிலும் இத்திட்டம் விரிவாக்கப்படும்போது மக்களின் எரிசக்தி தேவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படும். மேலும் ஒன்றியங்களின் தேவைகளைக் கவனித்துக் கொள்ளும் வகையில் 'எரிசக்தி மையங்கள்' ஒவ்வொரு ஒன்றியத்திலும் நிறுவ முயற்சி மேற்கொள்ளப்படும்.

**ஆராய்ச்சியும் மேம்படுத்தலும்:**

புதுவகை சக்தி மூலங்களைப் போதுமான அளவு பயன்படுத்துவதற்கேற்ற சாதனங்களை அமைப்பதில் தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இதில் இந்தியத் தொழில் நுட்ப நிறுவனம் (I.I.T.) அண்ணா பல்கலைக் கழகம், முருகப்பா பாலிடெக்னிக், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகிய தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களும் தொழிற்சாலைகளின் ஒருங்கிணைந்த சங்கங்களும் மிகுந்த முன் முயற்சியுடன் பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. சூரிய சக்தியை ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்தும் முயற்சிக்குக் காற்றாலைகளை நிறுவி மின்சாரம் தயாரிக்கும் முயற்சிக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

இவ்வாறாகப் பெருகி வரும் எரிசக்தி தேவையைப் பூர்த்தி செய்ய அரசு தகுந்த தீர்க்க தரிசனத்துடன் செயல்பட்டு வருகிறது.

'ப்ரியாக்னி' அடுப்பு



# ஏழைகளின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்கிட...




**வ**ட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி அருகே தெள்ளார் மேல்நிலைப் பள்ளித் திடலில் கூட்டுக் குடிநீர்த் திட்ட அடிக்கல் நாட்டு விழா 27.7.84 அன்று நடைபெற்றது.

விழாவிற்கு வந்திருந்தோரை குடிநீர் வடிகால் வாரியத் தலைமைப் பொறியாளர் திரு அ. பொன்னம்பலம் வரவேற்றார்.

விழாவிற்குத் தலைமை வகித்து குடிநீர் வடிகால் வாரியத் தலைவர் திரு ஏ.எம்.இரகுநாதன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

வடஆர்க்காடு மாவட்டத்தில் குடிநீர்த் திட்டச் செலவிற்காக ரூ.160 இலட்சம் உலக பாங்க் உதவியுடன் செயல்படுத்தப்பட உள்ளது. எல்லாச் சட்டமன்றத் தொகுதிகளிலும் யார், யார் என்று பாராமல் செயல்பட்டு வருகின்றோம்.

வட ஆர்க்காடு மாவட்டம் வந்தவாசியை அடுத்த தேசூர் தெள்ளார் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டிப்பேருரையாற்றிப் பேசுகையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேசியதாவது;

''இந்தத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். நாங்கள் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கும் விழாவாக இது இருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். இந்தக் குடிநீர்த் திட்ட நிகழ்ச்சியைத் தடுக்கச் சிலர் முயற்சித்தனர். நிகழ்ச்சி இன்று நடைபெறுமா என்ற நிலை இருந்தது.

''குடிநீர்த் தண்ணீர் கொடுப்பதைக் கூடவா தடுக்க முயற்சிப்பது? அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபட்டார்கள், முந்தைய ஆட்சியில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் 1,406 தான். ஆனால் 1977ஆம் ஆண்டு வாக்கில் ஆட்சிக்கு வந்த பிறகு நாங்கள் அமைத்தது 5,037 குடிநீர்த் தொட்டிகள். வட ஆர்க்காடு மாவட்டத்தில் . மட்டும் எடுத்துக் கொண்டால் முந்தைய ஆட்சியினர் அமைத்த குடிநீர்த் திட்டப் பணிகள் 66 மட்டும்தான், ஆனால் எங்களது ஆட்சியில் அமைக்கப்பட்டது 249. இப்படி குடிநீர்த் திட்டப்பணிகளை அமைத்த எங்களைப் பார்த்து ஒன்றுமே செய்யவில்லை என்கிறார்கள்.

''நீண்ட தொலைநோக்கோடு வருங்கால நிலைமையை எண்ணிப் பார்த்துத் திட்டங்களைச் செயல்படுத்[illegible] வயது வந்த [illegible] தொழி[illegible] கல்வியைக் [illegible] வேண்டும். [illegible]ந்த வ[illegible] தொழில் கல்[illegible] திட்[illegible] கொண்டு வருகிறோம். அ[illegible] ஆண்டு சட்டமன்றத்தில் வைத்[illegible] ஏப்ரல் முதல் தொழிற் கல்வித் திட்டம் குழந்தைகளுக்கு (4 வயது, 5 வயது) விளையாட்டுப் போல சொல்லித்தரத் திட்டம் கொண்டு வரப்படும். **அண்மையில் நடந்த தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் தொழில் கல்வி பற்றி விளக்கிப் பேசினேன். பிரதமர் இந்திரா காந்தியும் இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார். மற்ற மாநிலங்களும் பரிசீலிக்க வேண்டும் என்று பிரதமர் கேட்டுக் கொண்டார். தொழிற் கல்வி பயின்றால்தான் நாடு முன்னேறும்.**

''சத்துணவுத் திட்டம் செப்டம்பர் 15ல் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் முதல் 15 வயது வரை படிக்கும் மாணவர்களுக்கும் விரிவாக்கப்படும். இதன் மூலம் 30 ஆயிரம் பேர்களுக்குப் புதிதாக வேலைவாய்ப்பு கிடைக்கும். கூடுதலாக அரசுக்கு ரூ.40 கோடி செலவாகும். நான் உயிரோடு இருக்கும்வரை இத்திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன்.

''இன்று நிறைவேற்றப்படும் திட்டத்தில் 38 கிலோ மீட்டர்

## செய்யாற்றை வென்றான் கிராமத்தில்...!

அனக்காவூர், பெரணமல்லூர் மற்றும் தெள்ளார் ஒன்றியங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லாமல் நரம்புச் சிலந்தி என்ற நோய் மூலம் பாதிக்கப்பட்டும், சென்ற ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டு,குடிக்க நீரின்றித் தவித்த 88 கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்காக ரூ 257 கோடி மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் வகுக்கப்பட்டது.

நிலத்தடி நீர், தேவைக்கேற்ப கிடைக்காததாலும், வேறு நல்ல நீர் ஆதாரம் அருகில் இல்லாததாலும் செய்யாற்றைவென்றான் கிராமத்தினருகில், செய்யாறு நதியில் மூன்று ஊற்றுக் கிணறுகள் அமைக்கப்பட்டு, 90 குதிரைச் சக்தியுள்ள நீரேற்றிகள் மூலம் தேசூர்-தெள்ளார் சாலை வழியாக 38 கி.மீ நீளத்திற்குப் பதிக்கப் படவுள்ள குழாய் மூலம், 10,000 லிட்டர் முதல் 15 இலட்சம் லிட்டர் வரை கொள்ளளவுள்ள 41 மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டி, இக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினால் பயன்படும் 88 கிராமங்களுக்குக் குடிநீர் வழங்கப்படும்.

இந்த கிராமங்களின் தற்போதைய மக்கட் தொகை 56,000. 2016 ஆண்டில் எதிர்பார்க்கப் படும் மக்கட்தொகையான 76,000 பேருக்கு நபருக்கு நாளொன்றுக்கு 40 லிட்டர் வீதம் பயன்தரும் வகையில் திட்டம் நிறைவேற்றப் படவுள்ளது.

* **இ**ந்த ஆண்டு வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1.25 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்து அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது.

* **36** ஊராட்சி ஒன்றியங்களில் தன்னிறைவுத் திட்டப் பணிகளுக்காக ரூ. 15.84 கோடி செலவிடப்பட்டுள்ளது.

* **2,632** ஆழ் துளைக் கிணறுகள் ஒரே ஆண்டில் போடப்பட்டுள்ளது.

இந்த கிராமங்களுக்கு அதிக அளவில் கிடைக்கும் குடிநீர் நாளொன்றுக்கு 26.73 இலட்சம் லிட்டர் ஆகும். இந்த கிராமங்களில் கி.பி. 2016ல் எதிர்பார்க்கப்படும் மக்கட் தொகைக்கேற்ப மேற்சொன்ன மேல் நிலைத் தொட்டிகளும் அதற்கான பகிர்மானக் குழாய்களும், பொதுக்குழாய்களும் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்படும்.

தேசூர் பேரூராட்சிக்குத் தேவையான உச்சகட்டக் குடிநீர் நாளொன்றுக்கு 6.65 இலட்சம் லிட்டர் வழங்குவதற்கு இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை முடிப்பதற்கு ரூ. 257 இலட்சமும், ஆண்டு தோறும் பராமரிக்க ரு 3.5 இலட்சமும் செலவாகும். இத்திட்டத்தினால் செலவாகும் தொகை நபர் ஒருவருக்கு ரூ. 442 ஆகும்.

இத்திட்டம் உடனடியாகச் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இரண்டு ஆண்டுக் காலத்திற்குள் முடித்து, பயனுக்குக் கொண்டுவரப்படும்.

தூரம் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கிறோம் என்றால் இன்றைய பிரச்சினைகளை மட்டும் சமாளிப்பதற்கு அல்ல. குறைந்தது 15 அல்லது 20 ஆண்டுகளுக்குப் பிறகு உள்ள நிலைமையை யோசித்துத் திட்டங்கள் தீட்டப் படுகின்றன.

"ஊட்டி ஏரியில் தண்ணீர் இருந்தும் ஊட்டி நகரில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அங்குபோடப் பட்டுள்ள தண்ணீர்க் குழாய்கள் சிறியவை. 50 ஆண்டுகளுக்கு முன்னர் போடப்பட்டவை. அதில் வரும் தண்ணீர் போதுமானதாக இல்லை. இந்தக் குறையைப் போக்க இந்த அரசுதான் நடவடிக்கை எடுத்தது.

"கர்நாடக மாநிலத்தில் ஏழைகட்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகின்றது. அதேபோல் தமிழ்நாட்டில் உள்ள ஏழை விவசாயிகட்கு மின்சாரம் வழங்க தீவிரமாக ஆலோசித்து வருகிறோம். செப்டம்பர் 15ல் அண்ணா பிறந்த நாள் அன்று அதற்கான அறிவிப்பை வெளியிடுவோம்.

"தமிழ்நாட்டில் பிளஸ் 2 தேர்வில் பெண்கள் அதிகமாகத் தேறியிருக்கிறார்கள். இந்த நிலை நீடித்தால் தற்பொழுது பெண்களுக்குச் சம உரிமை வேண்டும் என்று பேசப்படுவது மாறி, ஆண்கள் சம உரிமைக்காகப் போராட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டுவிடும். நான் என்றும் தாய்மார்களுக்கு ஆதரவாகப் பேசுபவன், இன்று இளைஞர்கட்காகப் பேச வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"முதியோர்கட்கு உதவித் தொகையும், வேட்டி, சேலையும், வழங்கப்பட்டு வருகின்றன, அப்படி உங்கள் ஊரில் யாருக்காவது வழங்கவில்லையென்றால் ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து அரசுக்கு அனுப்புங்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு உதவி வழங்கப்படும்.

"இன்று அடிக்கல் நாட்டப்படும் குடிதண்ணீர்த் திட்டம் இரண்டு ஆண்டுகளில் நிறைவேற்றப்படும் என்று சொன்னார்கள். அதை 1½ ஆண்டுகளுக்குள் நிறைவேற்றி முடிக்க வேண்டும் எனக் குடிநீர் வடிகால் வாரியத் தலைவரைக் கேட்டுக் கொள்கின்றேன்."

வடஆர்க்காடுமாவட்ட ஆட்சித் தலைவர் திரு நா.நாராயணன், இ.ஆ.ப., திரு சி. குப்புசாமி, எம்.எல்.ஏ., திரு பி.எம்.வெங்கடேசன். எம்.எல்.ஏ., திரு என். குலசேகரப்பாண்டியன். எம்.எம்.ஏ., திரு சி. சண்முகம். எம்.எல்.ஏ., திரு ஏ.எம்.சேதுராமன் எம்.எல்.ஏ., திரு பி.அன்பழகன், எம்.எல்.ஏ. ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

விழா இறுதியில் சமூக நலத் துறை சார்பில் 3 சக்கர வண்டிகளை மாண்புமிகு முதல்வர் 27 பேருக்கு வழங்கினார்.

திட்ட அமைப்புப் பிரிவுத் தலைமைப் பொறியாளர் திரு வெங்கடாச்சலம் நன்றி கூறினார்.

—அ. மருதவிநாயகம்



# பகுத்தறிவுத் தந்தைக்கு பதினைந்தாவது நினைவுத்தூண்

கன்னியாகுமரி மாவட்டத்தின் தலைநகரமான நாகர்கோவிலில் சுயமரியாதைக் கொள்கைகளுக்குப் பெயர்போன கோட்டாறு பகுதியில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறப்பு விழா ஜூலை 18ஆம் நாளன்று மாலையில் மாண்புமிகு தமிழ்நாடு அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எல்.கே.திரிபாதி இ.ஆ.ப., தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் வரவேற்புரை ஆற்றி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். அவர் தமது உரையில் குறிப்பிட்டார்:

"பெரியார் சீர்திருத்தக் கருத்துக்களைச் சமுதாயத்திற்குச் சொல்லி அதில் வெற்றியும் பெற்றவர்.''

அடுத்து, விளக்க உரை ஆற்றிய செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப. தெரிவித்தார்:

''பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் - பெரியார் அவர்களின் புரட்சிமிக்க - எழுச்சிமிக்க கொள்கைகளின்படி மக்கள் நடக்க வேண்டும் என்பதற்காக இந்தத் தூண் நிறுவப்படுகிறது.

"பெரியார் நூற்றாண்டு விழா தொடங்கிய மறு ஆண்டே பெரியார் மாவட்டம் தோற்றம் ஆகியது.

"பெரியார் ஒலி-ஒளிக் காட்சிகள் பல மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டன.

'பெரியார் புரட்சிமொழி' என்னும் நூலை அரசு வெளியிட்டது.

''கேரளத்திலும் அவருக்கு நினைவுச் சின்னம் அமைக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டது. கேரள அரசும் ஒப்புதல் தந்துவிட்டது.

"தந்தை பெரியார் விரும்பிய-ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை அமைக்க அரசு எல்லா முயற்சிகளையும் செய்து வருகிறது.''

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சிறப்புப் பிரதிநிதி திரு.ஜி.ஆர். எட்மண்ட் அவர்கள் தலைமை உரையின்போது குறிப்பிட்டார்:

"இந்திய அரசியலில் மட்டுமல்ல உலக அரசியலிலேயே எதையும் துணிச்சலாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றிருந்த தலைவர், பெரியார் ஒருவர்தான்!

"தமிழ்ச் சமுதாயத்தைத் தலைநிமிர்ந்து வாழவைத்தவர் பெரியார். இந்த உணர்வு நீடித்திருக்க வேண்டும்-நிலைத்திருக்க வேண்டும் என்ற முறையில் அரசு பணி ஆற்றி வருகிறது. இந்தத் தூண் திறப்பு விழாவின் மூலம் மக்கள் தன்மான உணர்வு பெறுவர் என்று எண்ணி, இத்தகைய முயற்சிகளை உருவாக்கி வருகிறார் தமிழக முதல்வர்.''

அடுத்து உரையாற்றிய குமரி மாவட்ட சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ்.முத்துகிருஷ்ணன் குறிப்பிட்டார்:

"கலப்புத் திருமணம் தமிழகத்தில் நடைபெறுவதற்குப் பெரியார்தான் மூல காரணம். அவரது கருத்துக்கள் எடுத்துச்சொல்லப்பட்ட பிறகுதான் கலப்புத் திருமணம் தமிழகத்தில் பெருகியுள்ளது."

அடுத்து, திரு எம்.இராசகோபாலன் உரையாற்றுகையில்,

"நாட்டில் ஜாதி வித்தியாச உணர்வுகளைப் பார்த்துப் பெரியார் துடித்து எழுந்தார். புத்தரின் துடிப்பு ஆட்சியிலிருந்து அவரை அகல வைத்தது. பெரியாரின் துடிப்பு அவரது படிப்புக்குத் தடைபோட்டுவிட்டது'' என்று கூறினார்.

திரு ஏ.பி.சனார்த்தனம் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

''சாக்ரடீஸ், புத்தர், வள்ளுவர் ஆகியோரின் கருத்துக்களைப் போல் தந்தை பெரியாரின் தத்துவங்களும் உலகம் உள்ளளவும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

''ஆங்கிலநாட்டில் எத்தனையோ அறிஞர்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அறைக்குள்ளே சொற்பொழிவாற்றியவர்கள். பொதுமக்களின் முன் பேசியது கிடையாது. ஆனால் தந்தை பெரியார் இலட்சக்கணக்கான மக்களின் முன் எழுச்சிமிக்க கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.''

அடுத்து திருவாரூர் திரு கே. தங்கராசு உரையாற்றுகையில், ''தந்தை பெரியார் அவர்களின் எழுத்துச் சீர்திருத்தத்தை மைய அரசே ஏற்றுக் கொண்டுவிட்டது. பெரியார், தடிகொண்டு அடித்துத் தன் கருத்தை எவரிடத்திலும் திணித்தவர் அல்லர். அவர் நடத்திய போராட்டங்கள் - அரசுச் சொத்துக்கு எந்தச் சேதத்தையும் ஏற்படுத்தியதில்லை! Demonstration ஆக நடத்தினார்; Agitation ஆக நடத்தவில்லை'' என்று கூறினார்.

தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூணைத் திறந்து வைத்து, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேருரையாற்றினார். அவர் பேசத் தொடங்கிய பதினைந்து நிமிடங்களுக்குள் மழைபெய்யத் தொடங்கியது. மக்கள் சிறிதும் பொருட்படுத்தாமல் நாவலரின் உரையைச் செவிமடுத்தார்கள். எழுச்சிமிக்க கருத்துக்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்குத் தந்த தந்தை பெரியார் அவர்களின் நினைவுத்தூண் திறப்பு விழாவிற்கு இயற்கையே பன்னீர் தெளித்தது போல இருந்தது.

நாவலர் தமது உரையில் தெரிவித்ததாவது:

''பெரியார் நூற்றாண்டையொட்டி மாவட்டத் தலை நகரங்களில் பெரியாரின் கொள்கை முழக்கங்கள் பொறிக்கப்பட்டுள்ள நினைவுத்தூண் நிறுவ வேண்டும் என்று திட்டமிடப்பட்டு, இதுவரை சென்னையைத் தவிர, ஏனைய இடங்களில் நிறுவப்பட்டுள்ளது. இங்கு நிறுவப்பட்டிருப்பது 15 வது தூண் ஆகும். 16வது தூண் சென்னையில் 95 அடி உயரத்தில் நாட்டப்படும். புதிய மாவட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உருவாக்கி வருவதால், எதிர்காலத்தில் இன்னும் 6 அல்லது 7 தூண்கள் நிறுவப்பட வேண்டியுள்ளது.

''புலவர், வீரர், தீரர், மதிப்பிற்குரிய சான்றோர் பெயரை எழுதி நடுகல் நடுவது தமிழர் நாகரிகம் ஆகும். நமது நாகரிகம் உலக நாகரிகத்தில் எல்லாம் தலை சிறந்ததாகும்.

''485 கோடி மக்கள் உலகத்தில் வாழ்கிறார்கள். ஒரு சிலர் தான் சமுதாயத்தினால் நினைவில் வைத்துக் கொள்ளப்படுகின்றனர். புத்தர், மகாவீரர், ஏசுநாதர், நபிகள் நாயகம், வள்ளுவர், காந்தியடிகள் போன்ற ஒரு சிலர் தான் மக்களின் உள்ளங்களில் இடம் பெற்றவர்களாக உள்ளனர். அத்தைய மேலோர் பட்டியலில் தந்தை பெரியாரும் இடம் பெறுகிறார்.

''பெரியாரின் பொன் மொழிகள் என்றும் நின்று நிலவ வேண்டும் என்ற முறையில் இந்தக் கற்றூண் நடப்படுகிறது. இது காற்றால் கெடாது; கறையான் இதனை அரிக்காது; பெருவெள்ளத்தால் இது கொள்ளப்படாது; வெயிலும் ஒன்றும் செய்யாது.

இந்த நினைவுச் சின்னத்தின் உச்சியில் சுடர் ஏந்துவதுபோல் பொறிக்கப்பட்டுள்ளது. பகுத்தறிவுச் சுடரைப் பெரியார் ஏற்றுவதை அது குறிக்கிறது. சுடர் ஒன்றுதான் விரியும், பரவும், பெருகும். ஐம்பூதங்களில் இது ஒன்று தான் பெருகக்கூடியது. ஒரு லிட்டர் நீரை வைத்திருந்தால் அது 2 லிட்டர் நீர் ஆகாது. ஆனால் சுடர் அப்படி அல்ல.

''பெரியாரின் கொள்கைமுறை அண்ணாவின் செயல்முறை ஆகியவைதான் எங்கள் அரசின் நடைமுறை என்று ஒருமுறை குறிப்பிட்டார் முதல்வர் புரட்சித் தலைவர். தந்தை பெரியாரின் கொள்கைப்படி ஜாதி வேற்றுமைகளை ஒழித்து வருகிறார். விதவை மணங்களை ஆதரித்து வருகிறார், அதற்கு நிதி உதவி தருகிறார். கலப்புத் திருமணத்தை ஆதரித்து வருகிறார்.

''தந்தைபெரியார் - பகுத்தறிவைப் போதித்து வந்த போதிலும், தாம் சொல்வதையே நம்ப வேண்டும் என்று மக்களிடம் வற்புறுத்தியதில்லை. உன்னையே நீ எண்ணிப்பார் என்று தான் சொன்னார். அந்த மொழிதான் அவர் மிகப் பெரும் சிந்தனையாளர் என்பதை உலகுக்கு எடுத்துரைத்தது''

செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு. வெ. நாமதேவன், நன்றி நவிலும் போது, ''நாகர்கோவிலில் உருவாக்கப்பட்டுள்ள பெரியார் நினைவுத் தூணைப் பாதுகாக்கும் பொறுப்பை இங்குள்ள ஸ்டேட் பேங்க் கிளை மேற்கொண்டுள்ளது. இதுபோன்று ஏனைய மாவட்டங்களிலும் யாராவது பொறுப்பேற்றுக் கொள்ள முன் வந்தால் அதை நாங்கள் வரவேற்கத்தயாராக உள்ளோம்'' என்று குறிப்பிட்டார்.

நேசமணி போக்குவரத்துக் கழகத்தைச்சேர்ந்த 'ராகமாலிகா' குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி பொது மக்களைப் பெரிதும் கவர்ந்தது.



நிகழ்ச்சித் தொகுப்பு :

—எஸ். எஸ். சுந்தரம்

# சேதுபதி பூமியின் சிறப்புச் செய்திகள்

## கிழவன் சேதுபதி

சேதுபதிகள் ஆண்டநாடு சேது நாடு என வழங்கப் பெற்றது. அந்நாட்டில் 78 பாளையங்கள் இருந்தன. அவற்றின் தலைவனாகப் புகழ் ஒளி வீசித் திகழ்ந்தார் கிழவன் சேதுபதி. சேத்தூர், சிவகாசி, புதுக்கோட்டை, தென்காசி, அனைத்தும் சேது நாட்டிற்குள் ஒரு காலத்தில் இருந்தன.

## முகவை

இராமநாதபுரத்திற்கு முகவை என்று ஒரு பெயர் உண்டு. முகவாய் எனச் சொல்லப்பட்டு, பின் அது முகவை எனப்பட்டதாகச் சிலர் குறிப்பிடுகின்றனர். மோகூர் என்ற பெயர் முகவூர் எனத் திரிந்து, பின்னர் முகவை என ஆகியது என்றும் சிலர் கருதுகின்றனர்.

## கண்மாய்ப் பெருமை

பொதுவாக ஆறுகள் எல்லாம் கடலில் தான் போய் விழும். ஆனால் வைகை ஆறு, இராமநாதபுரம் பெரிய கண்மாயில் போய் விழுகிறது. இந்தப் பகுதியில் எப்போதாவது மழை பெய்யும் என்ற நிலை! ஆகவே தப்பித் தவறிப் பெய்யும் மழை நீரைத் தேக்கி வைக்க இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய பெரிய கண்மாய்கள் உண்டு. கண்மாய் என்பதே இராமநாதபுர மாவட்டத்தில் மட்டும் பயன்படுத்தப்படும் சொல் ஆகும்.

## கடல்பகுதி நிறைந்த மாவட்டம்

இன்று உருவாக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் பகுதியில், கடல் பகுதி முற்றிலும் அமைந் திருக்கிறது.

## பாஸ்கர சேதுபதியின் நாட்குறிப்பு

சேதுபதி மரபைச் சேர்ந்த பாஸ்கர சேதுபதி - ஆங்கிலம் அறிந்தவர். அவரது நாட்குறிப்பு சென்னை ஆவணக் காப்பகத்தில் உள்ளது.



## விவேகாநந்தர் நினைவுச் சின்னம்

சமயப் பிரச்சாரம் செய்வதற்கு அமெரிக்கா சென்று வந்த விவேகாநந்தர் பாம்பனில் வந்து இறங்கினார். அவர் இறங்கிய இடத்தில் ஒரு நினைவுச்சின்னத்தை ஏற்படுத்தியுள்ளார் பாஸ்கர சேதுபதி.



## முஸ்லீமுக்கு உதவிய சேதுபதி

முஸ்லீம் மாணவர் ஒருவர் லண்டனுக்குச் சென்று பார்-அட்-லா படிப்பதற்கு சேதுபதி மன்னர் ஒருவர் உதவி செய்துள்ளார்.

## பொன்தேங்காய் தந்த சேதுபதி

1646 முதல் 1672 வரை இராமநாதபுரத்தை ஆண்ட திருமலை சேதுபதியைக் குறித்து அமிர்த கவிராயர் என்னும் புலவர் ஒரு துறைக்கோவை ஒன்றினைப் பாடினார். அதன் ஒவ்வொரு பாடலுக்கும் ஒரு பொன் தேங்காயை கவிராயருக்கு அளித்தார் சேதுபதி.

## சேதுபதிகள்

ராஜ ராஜ சோழன் ஈழத்தை வென்று தாயகம் திரும்பிய போது இந்தப் பகுதியினை-சேதுவைக் காவல் காப்பதற்காகப் பிரதிநிதியை நியமித்தான். அந்தப் பிரதிநிதி சேதுகாவலர் என்று வழங்கப்பட்டார். பின்னர் அவர்கள் சேதுபதிகள்! எனச் சொல்லப்பட்டனர்.



## பல்லக்கு சுமந்தார் சேதுபதி

பெரும்புலவர் கம்பனுக்கு அடைப்பக்காரனாக விளங்கினான் சேர மன்னன்; அயர்ந்து தூங்கிய புலவர் ஒருவருக்கு, கவரி வீசினான் சோழ மன்னன். புலவர் அமர்ந்து வந்த முத்துப் பல்லக்கைச் சுமந்து வந்தார் சேதுபதி மன்னர் ஒருவர்.



## சீதக்காதி

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கீழக் கரையில் வாழ்ந்த வள்ளல் சீதக்காதி கடல் வாணிபம் செய்து வந்தவர், இந்தியாவில் மட்டுமல்ல-சீனத்திற்கும் பொருள் விற்பனை செய்திருக்கிறார்.

இஸ்லாமியரான சீதக்காதி வள்ளல் - இராமநாதபுரத்தை ஆண்டு வந்த கிழவன் சேதுபதிக்கு ஆலோசகராக இருந்திருக்கிறார். அதன் காரணமாக அவர், சேதுபதியின் அமைச்சராக இருந்தார் என்று சிலர் கருதுகின்றனர்.

ஔரங்கசீப்பின் அரண்மனையில் சீதக்காதிக்கு வேலை கிடைத்தது. அதனை வேண்டாம் எனச் சொல்லி அவர் இராமநாதபுரத்தில் அமர்ந்துவிட்டார்.

(இராமநாதபுர மாவட்ட அமைப்பு விழா சொற்பொழிவிலிருந்து தொகுக்கப் பெற்றது.)

தொகுப்பு : த.பி

# எம்முனையிலிருந்து ஒளி பரப்பினாலும்...

இந்தியாவில் தொலைக்காட்சி 1960ஆம் ஆண்டு துவக்கத்தில் வந்தது. முதல் முதலாக இந்தியத் தலைநகரமான டெல்லியில் தொலைக்காட்சி நிலையம் தொடங்கப்பட்டது. 1980ஆம் ஆண்டு சென்னையிலும் தற்போது வடஆர்க்காடு மாவட்டத்திலும் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ளது 76வது தொலைக்காட்சி நிலையம் ஆகும்.

வானவெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் செயற்கைக் கோள் இன்சாட் பி-1 தான் டெல்லி தொலைக்காட்சி ஒளி பரப்பை வேலூரில் அமைந்துள்ள தொலைக்காட்சிக்குத் தெரிவிக்கிறது.



அகில உலகச் செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் இதுநாள் வரை செய்தித்தாள் மூலமும் வானொலி மூலமும் படித்தும் கேட்டும் வந்துள்ளோம். ஆனால் இன்று அத்தகைய நிகழ்ச்சிகளை உலகின் எம்முனையிலிருந்து ஒளிபரப்பினாலும் மறுநொடியிலேயே கண்டு ரசித்து வருகிறோம்.

வடஆர்க்காடு மாவட்ட மக்களின் குறை நீங்கும் வகையில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் தொடங்கி வைக்கப்படுகிறது. வேலூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையத் தொடக்க விழா அண்ணா கலையரங்கில் 27.7.84 அன்று தொடங்கியது.

சென்னைத் தொலைக்காட்சி இயக்குநர் திரு சவுடேகர் வரவேற்புரை நிகழ்த்தினார். தென் மண்டல வானொலி தொலைக்காட்சித் தலைமைப் பொறியாளர் திரு எம்.ஐ. சூரியநாராயணா, தமிழகத்தில் தொலைக்காட்சி ஆற்ற இருக்கும் பணிகள் பற்றி விளக்க உரையாற்றினார். பாராளுமன்ற உறுப்பினர் திரு. ஏ.எம்.வேலு தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் வேலூரில் அமைக்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்தார்.

மாண்புமிகு ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர் திரு எம்.விஜயசாரதி அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கிராம மக்கள் கண்டுகளிக்க எளிதான சாதனம் தொலைக்காட்சியாகும். தமிழக அரசு 50 தொலைக்காட்சிப் பெட்டிகளை ஆதிதிராவிட நலத்துறை மூலம் (தீண்டாமை ஒழிப்பு) வடஆர்க்காடு, செங்கல்பட்டு, சென்னை ஆகியபகுதிகளில் உள்ள ஆதிதிராவிட மக்களுக்குப் பயன் பெறும் வகையில் இலவசமாக வழங்க உள்ளது''

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு ஆர். சௌந்தரராசன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"இந்த ஒளிபரப்பு பொழுது போக்குக் காட்சி அல்ல, நேரடியாகப்பார்த்து உணர்வதுபோன்ற உணர்வை ஏற்படுத்தும். படிப்பு அறிவுஇல்லாதவர்கள் இந்த ஒளி பரப்பு மூலம் பார்த்துப் பயன் அடைவார்கள்.''

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமை உரையாற்றுகையில்—

"வேலூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் எனப் பெயர் வைத்து இதைத் தொடங்கிவைக்கும் பணி இன்று நடைபெறுகிறது. இந்தப் பகுதி மக்களுக்கு நம் மாநிலச் செய்திகளுடன் வெளி மாநில-வெளிநாட்டுச் செய்திகளை எடுத்துச் சொல்லவும், வெளி மாநில, மற்றும் வெளி நாட்டுக் கலை, அரசியல், பண்பாடு இவைகளைக் குக்கிராமத்திற்கு எடுத்துச் சொல்கிற வகையில் இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைக்க வந்துள்ள மைய அமைச்சருக்கு அமைச்சரவை சார்பிலும், தமிழக மக்கள் சார்பிலும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



"ஒரு செய்தி மக்களிடம் பரவினால் என்ன ஆகும் என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். நல்ல செய்திகள் விரைவாகச் செல்வதில்லை. தவறான செய்திகள் விரைவாகப் பரவி விடுகின்றன. தவறான செய்திகளைத் தடுத்து நிறுத்தவும், உண்மைச் செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்தவும் வேண்டும். தங்கள் வாழ்வைப் பற்றி மக்களுக்கு உணர்த்த வேண்டும்.

"நாட்டு நடப்பு, எதிர்கால முன்னேற்றத்துக்கான வழி ஆகியவற்றை வானொலி மூலம் கேட்க முடிகிறது. ஆனால் நேரடியாக பார்த்துத் தெரிந்து கொள்வது தொலைக்காட்சி மூலம் தான். வெளியிலுள்ள மக்கள் நிகழ்ச்சிகளைப் பார்த்து அதைப் பயன்படுத்தி அதன் மூலம் தங்களை எப்படி உயர்த்திக்கொள்ளலாம் என்பதற்கு உதவும் சக்திமிகு சாதனமாகத் தொலைக்காட்சி உள்ளது.

"தென்மாநிலங்களுக்கு 27 அஞ்சல் நிலையங்களை ஒதுக்கி அதில் தமிழகத்திற்கு 6 தொலைக்காட்சி அஞ்சல் நிலையத்திற்கும், கொடைக்கானலில் அமையும் சக்தி வாய்ந்த நிலையத்திற்கும் அனுமதி அளித்த மைய அரசிற்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

"தேசிய வளர்ச்சிக் கவுன்சிலில் பேசும்பொழுது நான் கூறிய கருத்தை இங்கு மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எந்த மாநிலத்தில் செய்திகள் ஒளிபரப்பப்பட்டாலும் அந்த மாநில மக்களுக்குத் தெரியும் வகையில் அவர்கள் பேசும்மொழியில் ஒளிபரப்ப வேண்டும். உண்மையை மக்களுக்கு எடுத்துக் கூறுவதாகவும், வரதட்சணைக் கொடுமை, வர்க்கபேதம், சாதி, மதபேதம் இவைகளைத் தகர்த்தெறியும் கருத்துக்களைக் கொண்ட நாடகம், பேச்சு இவைகளை அந்தந்த மாநில மொழிகளில் வெளியிட்டால் சாதாரண மக்கள் அறிந்துகொள்ள முடியும்.

"மக்கள் அறியமுடியாத மொழியில் வெளியிட்டால் நிகழ்ச்சிகளினால் பலனிருக்காது. மக்கள் கருத்தாக இதைச் சொல்லுகிறேன். இதை வற்புறுத்திச்

**தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தமிழ் மற்றும் மாநில மொழிகளில் ஒளி பரப்பவேண்டும்.**

**--மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர்.**

முதன் முதலில் ஒரே ஒரு சேனலில் வந்த தொலைக்காட்சி நாளடைவில் நவீனமயமாக்கப்பட்டு 'மல்டி சேனல்' ஆகியது. கறுப்பு வெள்ளையாக மட்டும் இருந்த தொலைக்காட்சி, நாட்கள் செல்லச் செல்ல ''வண்ணத்தில்'' கிடைத்தது.

நெய்வேலியில் தொலைக்காட்சி நிலையம்

விசேஷ தொலைக்காட்சி அறிமுகத் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 126 குறைந்த சக்தி கொண்ட டிரான்ஸ் மீட்டர்களும், 26 உயர்சக்தி கொண்ட டிரான்ஸ் மீட்டர்களும் பொருத்தப்படவுள்ளன. தமிழ்நாட்டில் மட்டும் 6 குறைந்த சக்தி கொண்ட டிரான்ஸ்மீட்டர்கள் பொருத்தப்படவுள்ளன.

இதேபோல் குறைந்த சக்தி கொண்ட டிரான்ஸ்மீட்டர்கள் கும்பகோணம், கோவை, நெய்வேலி ஆகிய நகரங்களில் பொருத்தப்படவுள்ளன.

காட்பாடியை அடுத்த விருதம்பட்டில் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் செயல்படுவது குறித்து தொலைக்காட்சி நிலைய பொறியாளர் நிருபர்களிடம் கூறியதாவது:

"இந்தியாவில் இது 76வது தொலைக்காட்சி நிலையமாகும். இது தமிழ்நாட்டில் இரண்டாவது தொலைக்காட்சி அஞ்சல் நிலையம் ஆகும். கோபுரத்தின் உயரம் 100 அடி ஆகும்.

"இந்த நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்ய ஒரு பட்டனை அழுத்தினால் போதும். இங்கு 3 இஞ்சினீயர்களும், ஒரு சீனியர் டெக்னீஷியனும் பணிபுரிகிறார்கள்.

## கிராமப்புற இளைஞர் பயிற்சித் திட்டம்

1984-85 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை மாவட்டததில் கிராமப்புற இளைஞர்களுக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் 250 பேர்களுக்கு ரூ. 8,85,500 செலவில் பயிற்சி வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது இதில் 221 பேர்கள் ஆதிதிராவிட இளைஞர்களாக இருப்பார்கள்.

பயிற்சி முடிப்போருக்கு இவ்வாண்டில் ரூ. 1,160,500 மதிப்புள்ள தொழில் கருவிகளை இலவசமாக வழங்கிடவும் திட்டமிடப்பட்டுள்ளது இது தவிர 2,351 பேர்களுக்குச் சிறுதொழில்கள் துவக்கிடவும், சிறு கடைகள் மற்றும் சிறு பணிமனைகள் அமைத்திடவும் ரூ 41.54 லட்சம் வங்கிகளிடம் கடனாகப் பெற்று வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ. 20.60 லட்சம் அரசு மானியமாக இருக்கும்.



## வேலூர் குறைதிறன் சக்தி கொண்ட தொலைக் காட்சி நிலையம்

மத்திய அரசின் 6வது திட்டத்தின் குறைதிறன் சக்தி கொண்ட தொலைக்காட்சி அமைக்கும் திட்டத்தில் ஒன்றாக மிக விரைவுத் திட்டமாக எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்களில் ஒன்று வேலூர் தொலைக்காட்சி அஞ்சல் நிலையம்.

வேலூரின் அருகில் உள்ள கழிஞ்சுர் என்ற இடத்தில் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கட்டடத்தில் இந்நிலையம் அமைக்கப்பட்டு இருக்கும் டிரான்ஸ்மிட்டர் 100 வாட் சக்தி கொண்டதாகவும் 10 சேனல்களைக் கொண்டதாகவும் அமைகிறது. இந்நிலையத்தில் இருந்து 25 கி.மீ. சுற்றுவட்டாரத் தொலைவுக்கு இந்நிலயத்தின் ஒளிபரப்பு பயன்படும். குறிப்பாக ராணிப்பேட்டை, ஆர்க்காடு, கணியம்பாடி, அகரம், பள்ளிகொண்டா, விரிஞ்சிபுரம் ஆகிய இடங்களுக்குப்பயன்படும். இதனால் வேலூரைச் சுற்றியுள்ள 14 இலட்சம் மக்கள் ஒளிபரப்பு நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம்.

தற்போது கீழ்க்கண்ட நேரங்களில் ஒளிபரப்பு இருக்கும்.

எல்லா நாட்களிலும்—

மாலை 6 முதல் இரவு 11-30 வரை

**கூடுதலாக ஒளிபரப்பப்படும் நேரங்கள்:**

எல்லா ஞாயிற்றுக் கிழமைகளில்—

காலை 9-30 மணிமுதல்<br>
மதியம் 12-30 மணிவரை<br>
பிற்பகல் 2-00 மணி முதல்<br>
மாலை 6-00 மணி வரை

எல்லா இரண்டாவது சனிக்கிழமைகளில்—

காலை 9-30 மணி முதல்<br>
மதியம் 12-30 மணி வரை

நான்காவது ஞாயிற்றுக் கிழமைகளில்—

காலை 9-30 மணி முதல்<br>
மாலை 6-00 மணி வரை

இவ்விடத்தில் உள்ளே அமைந்துள்ள தேசிய நெடுஞ்சாலைக்குச் சொந்தமான ''தரக்கட்டுப்பாடு ஆய்வகத்தில்'' நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வகத்தைப் பிறிதொரு இடத்தில் அமைப்பதற்காகத் தமிழ்நாடு அரசு ரூ. 2 இலட்சம் அனுமதித்தது. நிலப்பகுதி இலவசமாகத் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டுள்ளது.

சொல்லவும்,அழுத்தமாகச் சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

''காலையில் இசையுடன் கூடிய உடற்பயிற்சி பற்றிப் பாடம் தந்தால் குழந்தைகள் இதைக் கற்று ஒழுங்காக வளர முடியும். கல்வியைச் சொல்ல இதைவிடச் சிறந்த சாதனம் இருக்க முடியாது. குழந்தைகள் சிறந்த முறையில் வளர இதுபோன்ற முறையில் சொல்லித் தருவது எதிர்காலச் சந்ததிக்கு நாம் செய்யும் கடமையாகும். இதன் மூலம் மக்களை மேன்மைப்படுத்தி ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற கொள்கையை மக்களுக்கு உணர்த்த முடியும்'' என்றார்.

தொலைக்காட்சி நிலையத்தை மாண்புமிகு மத்திய எரிபொருள் சக்தித் துறை அமைச்சர் திரு பி. சிவசங்கர் தொடங்கி வைத்துப் பேசுகையில், ''தமிழக முதல்வர் கூறிய - வலியுறுத்திய கருத்தை ஏற்று மாநில மொழிகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் நடைபெறவிரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்றார், ''வருகிற செப்டம்பர் இறுதிக்குள் தமிழகத்தைச் சார்ந்த 87 சதவிகித் மக்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டுகளிப்பார்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலம் தங்களது அறிவாற்றலைப் பொதுமக்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

விழா இறுதியில் செய்தித் துறை துணை இயக்குநர் திரு வெ. நாமதேவன் அவர்கள் நன்றி கூறினார்.

—அ. மருது




# சேலத்தில் புதிய பேருந்து நிலையக் கால்கோள் விழா

**சே**லம் மத்திய பேருந்து நிலைய கால்கோள் விழா, 101 சத்துணவு மையக் கூடங்கள், டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள 101 துணை சுகாதார நிலையங்கள் திறப்பு விழா அனைத்தும் ஜூலை 30ஆம் நாள் பிற்பகல் - அச்சுவானேரிப் பகுதியில் நடைபெற்றது.

வரவேற்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா.வரதராஜுலு இ.ஆ.ப. "அச்சுவானேரிப்பகுதியில் அமையவிருக்கும் இந்தப் பேருந்து நிலையம்-மிகப் பெரும் முயற்சியின் பயனாக நமக்குக் கிடைத்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

"பொதுமக்கள் படும் பல்வேறு இடர்ப்பாடுகளைப் போக்குவதில் நமது முதல்வர் அவர்கள் பெரும் கவனம் செலுத்தி வருகிறார். இங்கு 24.62 ஏக்கர் பரப்பளவில் அமையவிருக்கும் பேருந்துநிலையம்-ஒருமாதிரிப் பேருந்து நிலையமாக விளங்கி-தமிழ்நாட்டுக்கே சிறப்புத் தேடித் தரப்போகிறது" என்று தெரிவித்தார் சட்டமன்ற உறுப்பினர் திரு சேலம் எம். ஆறுமுகம்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. பழனியப்பன் தெரிவித்ததாவது:

"இந்தப் பேருந்து நிலையத்தை யமைப்பதற்கு எத்தனையோ தடைக்கற்கள் ஏற்பட்டன என்பது பலருக்கும் தெரியும். அவற்றைக் கடந்து-அவற்றை எல்லாம் உடைத்தெறிந்த முதல்வர் கூர் வாளாகச் செயல்பட்டுள்ளதற்காகப் புகழ்மாலை சூட்டுகிறேன். ரயில்வே நிலையங்களில் உள்ள வசதிகள் போல-உருவாகிவரும் பேருந்து நிலையத்திலும் வசதிகள் செய்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்".

அடுத்து உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் திரு ஜி. கிருஷ்ணராஜ் குறிப்பிட்டதாவது:

"இந்த இடத்தில் பேருந்து நிலையம் அமைக்கப்படக்கூடாது என்று வியாபார சங்கங்கள் கேட்டுக்கொண்டபோதிலும்-தனியார் பலர் இடையூறு ஏற்படுத்திய போதிலும் அவற்றைப் பொருட்படுத்தாது பேருந்து நிலையம் அமைக்க முன்வந்த அரசைப் பாராட்டுகிறேன். இந்தப்பேருந்து நிலையத்திற்கு அறிஞர் அண்ணா பவள விழா நினைவுப் பேருந்து நிலையம் என்று பெயர் வைக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்."

மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி, அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

"பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தரு

வதில் நமது முதல்வர் அவர்களுக்கு ஈடு இணை எவரும் இல்லை. அந்த வகையில்தான் மிகப் பெரிய பேருந்து நிலையத்தைச் சேலத்தில் அமைக்க வழி வகை கண்டிருக்கிறார்''.

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு இரா. அருணாசலம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''தமிழக நகர்ப்புறங்களில் புதிய பேருந்து நிலையங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அவை நவீன மயமாக்கப்பட வேண்டும் என்பதில் தமிழக முதல்வர் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறார்''.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''அகில இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் சத்துணவு இலாகாவை நமது முதல்வர் துவக்கி நடத்தி வருகிறார். இதனைப் பிற மாநிலங்களும் பாராட்டுகின்றன.

''மாண்புமிகு முதல்வர் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் கடந்த 6, 7 ஆண்டுகளில் 6100 மையத் துணை சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. 5000 மக்களுக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்ற முறையில் 1985க்குள் பல நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இந்திரா காந்தி அவர்களின் 20 அம்சத் திட்டத்தின் 15வது அம்சத்தைத் தமிழகம் மட்டும்தான் சிறப்பாக நிறைவேற்றி வருகிறது என்பதைச் சொல்ல வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ஆர். சவுந்தரராசன் அவர்கள் தெரிவித்தார்:

''பசியால் வாடுவதற்குக் காரணம் தலைவிதி என்று சொல்லி வந்தார்கள்! விதியை யாரால் என்ன செய்ய முடியும் என்றும் கேட்டுவந்தார்கள். விதியை மதியால் வெல்லலாம் என்று சிலர் சொன்னார்கள். அதை எப்படி வெல்வது என்று யாரும் வழி முறையைச் சொல்லவில்லை. பசியால் வாடும் குழந்தைக்குச் சத்துணவு வழங்கி-அந்த விதியை மாற்றியுள்ளார் தமிழக முதல்வர்''

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு எஸ். முத்துசாமி அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''இங்கு பேருந்து நிலையம் வரவேண்டும் என்று பல்லாண்டுகளாக முயற்சி நடைபெற்று வருகிறது. இதனை உருவாக்க நகராட்சிக்கு வசதி இல்லை என்பதால் - அண்ணா போக்குவரத்துக் கழகமே செய்து கொள்ளலாம் என்று முதல்வர் அவர்கள் ஆணையிட்டதால் இன்று இந்த அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நிலையத்தின் மூலம் சேலத்தில் ஒரு புத்தொளி ஏற்படுவது உறுதி. தற்போது இருக்கும் பேருந்து நிலையம், நகரப் பேருந்து நிலையமாக இயங்கும். இந்த நிலையம் சேலத்து மக்களுக்கு மட்டுமல்ல, பக்கத்திலிருந்து வரும் மக்களுக்கும் பயன்படும்.

''புரட்சித் தலைவர் அவர்கள் அரசை ஏற்றுக்கொண்டபோது 4000 பேருந்துகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. தற்போது 8500 பேருந்துகள் அரசினால் இயக்கப்பட்டு வருகின்றன. புதிதாக 30 ஆயிரம் பேருக்குக் கூடுதலாக வேலை கொடுக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் முன்பு 200 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. தற்போது 648 பேருந்துகள் இயங்கிவருகின்றன. கிராமப்புறத்துமக்கள் நன்மைபெறுவதற்காக இந்த அரசு எல்லா வகையான திட்டங்களையும் செயல்படுத்தி வருகின்றது.

''பேருந்து நிலையங்களை அமைப்பதற்காகவே ஒரு கார்ப்பரேஷனை உருவாக்கலாமா என்ற திட்டம் அரசிடம் உள்ளது.

''போக்குவரத்துத் தொழிலாளர்களின் குழந்தைகளின் நலனை முன்னிட்டுப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் பொறியியல் கல்லூரி ஒன்றைத் தொடங்குவதற்குப் புரட்சித் தலைவர் ஆணையிட்டுள்ளார்.

''கடந்த 4 ஆண்டுக்காலமாகப் போக்குவரத்துக் கழகங்களில் எந்தவிதமான வேலை நிறுத்தமும் நடைபெறாதவாறு, அவற்றைச் சுமுகமான முறையில் தீர்த்து வைத்துள்ளார் தமிழக முதல்வர்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தெரிவித்தார்:

''இந்த அச்சுவான் ஏரிப் பகுதி காட்டிலாகாவால் கையகப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை மீண்டும் திரும்பப் பெற்றிருப்பது என்பது சாதாரண காரியமல்ல. ஆற அமர யோசித்துத் திட்டங்களை வெளியிட்டு அதன்பின் பந்தயக் குதிரைவேகத்தில் செயல்படுவது புரட்சித் தலைவரின் அரசு என்றுதான் சொல்லவேண்டும்.

''அரசியல்வாதி அடுத்த தேர்தலை நினைக்கிறான். சிந்தனையாளன் அடுத்த தலைமுறைபற்றி எண்ணிப்பார்க்கிறான் என்பார்கள். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அரசியல்வாதி மட்டுமல்ல, சிந்தனாவாதியாகவும் திகழ்கிறார்''



ஆராரோ ஆரிரரோ என்று தாய்மார்கள் தாலாட்டுப் பாடுகிறார்கள். இது வெறும் பாட்டு என்று கருதிவிடக் கூடாது! இதில் ஒரு தத்துவமே அடங்கியிருக்கிறது.

முந்திய பிறவியில் இவர் யார், யாரோ, இனி வரும் பிறவியில் யார் ஆவாரோ என்று கேட்கிறார்கள் தாய்மார்கள்!

நாக்கால் ஆட்டிப் பாடுவது தாலாட்டு. தால் என்றால் தொங்குதல் என்று பொருள் தொங்குகின்ற காரணத்தால் தான் மாங்கல்யம் தாலி என்று வழங்கப்படுகிறது.

**இராமாபுரம் மாவட்ட அமைப்புப் பணிகள் தொடக்க விழா நிகழ்ச்சியிலிருந்து**

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் பேருந்து நிலையத்திற்குக் கால் கோள் நாட்டி, சத்துணவு மையக் கூடங்கள், துணைச் சுகாதார நிலையங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்துப் பேருரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்.

"மக்களின் பிரதிநிதியாகஇருந்து தங்கள் உள்ளத்தின் எண்ணங்களை ஆக்க பூர்வமாகச் செயல் படுத்தும்போதுதான் திருப்தி ஏற்படுகிறது. சில நல்ல காரியங்களைச் செய்யும் போது பலர் பழிசுமத்துவார்கள். அதுபற்றிக் கவலைப்படக் கூடாது. நாம் போகிற பாதை நேர்மையான பாதை என்றால் பிறருக்குப் பயப்பட வேண்டிய தேவை இல்லை.

"தற்போது 101 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. இவை உருவாவதற்கு எத்தனை பேர்வேலை பார்த்திருப்பர்? லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்தோம் என்று சட்டமன்றத்தில் நான் சொன்னேன் என்றாலும் வேலை கொடுக்கவில்லை என்று திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள் சிலர். எங்கள் பணிகளில் தயவு செய்து குறை இருந்தால் சொல்லுங்கள் - ஆனால் நாங்கள் எதுவும் செய்யவில்லை என்று மட்டும் சொல்லாதீர்கள்! நமக்கு மனச்சாட்சி உண்டு. அதைத் தான் நாம் கடவுள் என்கிறோம்.

"நான் சிரித்தால் தமிழகத்தின் 4½ கோடி மக்களும் சிரிப்பார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பழனியப்பன் இங்கே குறிப்பிட்டார். நாம் சிரித்தால் மக்கள் சிரிப்பார்கள். நாம் அழுதால் மக்கள் அழமாட்டார்கள் என்று ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு.

"நாட்டில் போராட்டங்கள் வரும்போது - பிரச்சினைகள் உருவாகும்போது எல்லாம் பேருந்துகளைத்தான் இலக்கு வைக்கிறார்கள் போராட்டக்காரர்கள். இது தேவையா?

"சத்துணவுத் திட்டத்தின் மூலம் மக்களைச் சோம்பேறியாக்கவில்லை - பிச்சைக்காரர்களாக்கவில்லை என்பதைச் சிலர் இப்போதுதான் உணர்ந்திருக்கிறார்கள். இந்தத் திட்டம் தேவையற்றது என்று சொன்னவர்கள் கூட இனி வரும் தேர்தலில் எங்களைத் தேர்ந்தெடுத்தால் நாங்களும் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து செயலாற்றுவோம் என்று சொல்லத் தொடங்கியுள்ளனர்.

"நாங்கள் யாரை நம்பி திட்டங்களில் முதலீடு செய்கிறோம்? மக்களை நம்பி! உலக வங்கிகளிடம் கடன் வாங்கி! பேருந்துக் கட்டணத்தை உயர்த்த வேண்டிய சூழ்நிலை நமக்கு ஏற்பட்டுள்ளது. பேருந்துக் கட்டணத்தை உயர்த்தினால் தான் ரூ. 200 கோடி கடன் தர முடியும் என்று உலக வங்கியினர் தெரிவித்திருக்கிறார்கள். அதனால் நாங்கள் விரும்பாவிட்டாலும் கட்டண உயர்வைக் கொண்டு வரவேண்டியவர்களாக உள்ளோம். அதிலும் தமிழகத்தில் சென்னை நகரில் மட்டும் பேருந்துக் கட்டணத்தை உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

## கருத்தடைச் சிகிச்சைச் சாதனங்கள் வாங்க....

அரசு தாலுக்கா மருத்துவ மனைகளில் பயன்படுத்தும் வகையில் 90 நவீன கருத்தடைச் சிகிச்சைச் சாதனங்கள் (லேப்பராஸ்கோப்) ரூ. 40 இலட்சத்திற்கு மிகையாகாமல் வாங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

"படிக்கும்போதே தொழிற் கல்வி கற்க வேண்டும். படித்து விட்டு ஏதோ வேலை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் செயலாற்றுவதில் பயன் என்ன? மாணவன் படித்து விட்டு வெளியில் வரும்போது இந்தத் தொழிலுக்குச் சொந்தக்காரன் என்ற முறையில் வெளிவர வேண்டும்.

"அரசு திட்டமிடும்போது உடனடிப் பயனளிக்கும் திட்டங்கள்- எதிர்காலத்திற்கு ஏற்ற வகையில் சில திட்டங்கள் என்று திட்டமிட வேண்டும்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் தாய்மார்கள் - குறிப்பாக விதவைகளுக்கு வேலை வாய்ப்பளிக்கப்படுகிறது.

"மாணவர்கள் போராட்டங்களில் ஈடுபட்டு, பேருந்தில் கல் எறிகிறார்கள். பேருந்துகள் என்ன பாவம் செய்தன? பயணிகள் என்ன குற்றம் செய்தார்கள்? யாருடைய பொருள் நாசம் ஆகிறது? பெரியவர்கள் கொடுத்த வரிப்பணம் இங்கே பாழாகின்றது! ஓட்டுநரும் மனிதன்தான். நடத்துநரும் மனிதன்தான்! அவர்கள் அடிபட்டால், அவர்களது குடும்பம் என்ன ஆகும்?

"உன்னைத் துன்பப்படுத்திக் கொண்டு மற்றவர்களை இன்பப் படுத்து என்றார் மகாத்மா காந்தியடிகள். பலர் தன்னை இன்பப் படுத்திப் பிறரைத் துன்பப்படுத்தி வருகிறார்கள். ஏதாவது ஒரு சிறிய தகராறு என்றால் கூட எதிரியை அழித்துவிட வேண்டும் என்று நினைப்பது எப்படி நியாயமானதாகும்!

"போக்குவரத்துத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு புதிய கல்லூரி ஒன்று உருவாகிவரும் திட்டத்தைப் போக்குவரத்துத்துறை அமைச்சர் இங்கே குறிப்பிட்டார். அந்தக் கல்லூரிக்குப் பணம் தரும் தொழிலாளர்களை நான் தெய்வமாகக் கருதுகிறேன்.

"சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பு இருக்க வேண்டும். அது போல் பெரும்பான்மையினருக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். இருவரும் ஒத்துப்போனால் தான் ஜனநாயகம் வெற்றி பெற முடியும்!"

இறுதியில் அண்ணா போக்குவரத்துக்கழக நிர்வாக இயக்குநர் திரு டி. பாலகிருஷ்ணன் நன்றி நவின்றார்.

—எஸ். எஸ்.

# கல்லூரிக் கல்வித் துறை

## சென்னை-600 006.

### அறிவிக்கை

ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கூட ஆசிரியர் குழந்தைகளுக்கான மாநில உபகாரச் சம்பளங்கள் 1984—85 திட்டம்.

அங்கீகாரம் பெற்ற (1) ஆரம்ப, முன் ஆரம்ப, நடுத்தர, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிக்கூடங்களிலும், (2) உடல் ஊனமுற்றோர் கல்வி நிறுவனங்களிலும், பயிற்சி பள்ளிக் கூடங்களிலும் பணியாற்றும் ஆசிரியர்கள் குழந்தைகள் மற்றும் (3) பாதுகாப்பு அமைச்சகத்தால் நடத்தப்படும் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் சிவிலியன் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளங்களை தொடர்ந்து வழங்க தமிழ்நாடு அரசு தீர்மானித்திருக்கிறது என்பது பொது மக்களின் தகவலுக்கு அறிவிக்கப்படுகிறது.

2 தகுதி :

தகுதிக்கான முக்கிய நிபந்தனைகளாவன:—

1. மார்ச்சு/ஏப்ரல் 1984-ல்/நடைபெற்ற எஸ். எஸ். எல். சி. (10-ம் வகுப்பு புதிய பாடத் திட்டம்)/மெட்ரிகுலேஷன்/ஆங்கிலோ-இந்திய உயர்நிலைப் பள்ளித் தேர்வு/தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளி இறுதியாண்டுத் தேர்வில் விண்ணப்பதாரர் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

2. 1984 மார்ச்சு/ஏப்ரலில் நடைபெற்ற மேல்நிலைக் கல்வித் தேர்வில் (பிளஸ் 2) முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

3. 1984 ஏப்ரல்/மே மாதத்தில் நடைபெற்ற பட்டப் படிப்புத் தேர்வில் முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

4. 1984 ஏப்ரல்/மே மாதத்தில் நடைபெற்ற முதுகலைப் பட்டப் படிப்பில் முதல் வகுப்பு அல்லது மொத்தத்தில் 60 சதம் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

5. மாலைக் கல்லூரிகள் அல்லது அஞ்சல் வழிக் கல்வி மூலம் பயின்று வரும் மாணவர்கள் தற்போதுள்ள விதிகளின்படி தகுதி அற்றவராவார்கள். இருப்பினும் இது விஷயமாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மாலை நேரக் கல்லூரிகள்/அஞ்சல் வழிக் கல்வியில் சேர்ந்துள்ள மாணவர்களும் தங்களது விண்ணப்பத்தை, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட கடைசி தேதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். ஆனால், அவர்களது விண்ணப்பங்கள் இது சம்பந்தமாக அரசாங்கத்திடமிருந்து தகுந்த உத்தரவுகளைப் பெற்ற பிறகே பரிசீலிக்கப்படும்.

6. மேற்கண்ட தேர்வுகளில் (மேற்கண்ட பாராக்களில் குறிப்பிடப்பட்டுள்ள) தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டில் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவார்கள்.

7. உபகாரச் சம்பளம் பெற விரும்பும் மாணவர்கள் நிர்ணயிக்கப்பட்ட கடைசித் தேதிக்குள் கல்வி நிலையங்களில் இடம்பெற முடியாமல் போனால், விண்ணப்பங்களால் பூர்த்தி செய்து, தேவையான சான்றுகளுடன் இந்த இயக்கத்திற்கு, நிர்ணயிக்கப்பட்ட முடிவுத் தேதிக்குள் அனுப்பி வைக்கலாம். கல்வி நிலையங்களில் இடம் பெற்ற பிறகு, சேர்ந்ததற்கான தகவலைத் தெரிவிக்கலாம்.

8. 1984-க்கு முன் நடந்த தேர்வுகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவராவார்கள்.

9. 1983, டிசம்பரில் நடைபெற்ற இந்தியன் பள்ளிக்கூடச் சான்றிதழ்த் தேர்வில் Indian School Certificate Examination) தேர்ச்சி பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

10. ஆய்வு அலுவலர்கள் அல்லது நிர்வாக சம்பந்தமான பதவிகளில் உள்ள இதர அலுவலர்கள் குழந்தைகள் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவராவார்கள்.

3. சரியான மற்றும் முழுமையான தகவலுடன் (முழு நீள) வெள்ளைத்தாள்களில் கையினால் தெளிவாக எழுதப்பட்ட, அல்லது டைப் செய்யப்பட்ட விண்ணங்பங்களைப் பின் வரும் படிவத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

பள்ளிக்கூட ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான மாநில உபகாரச் சம்பளங்கள் 1984—85-க்கான திட்டம்.

1. பெயரும் பிறந்த தேதியும் (விண்ணப்பத்தின் முதல் பக்கத்தில் மேல் கோடியில் சமீபத்தில் எடுக்கப்பட்ட ஒரு பாஸ்போர்ட் அளவு போட்டோ ஒட்டப்பட வேண்டும்)
2. நாடு இனம் ...
3. முழு அஞ்சல் முகவரி (நிரந்தர முகவரி)...
4. பெற்றோர்களின் பெயர் ...
   (அ) தகப்பனார் ...
   தொழில் (முழு விவரங்கள் தரவும்)
   வருமானம் (ஏப்ரல் 83 முதல் மார்ச் 84 வரை)
   (ஆ) தாயார் ...
   தொழில் (முழு விவரங்கள் தரவும்)
   வருமானம் (ஏப்ரல் 83 முதல் மார்ச் 84 வரை)
5. 1983-84ம் ஆண்டின் மொத்த ஆண்டு வருமானம்: ...
   (அ) தகப்பனாரின் ஆண்டு வருமானம்:
   (ஆ) தாயாரின் ஆண்டு வருமானம் ...
   (இ) இதர வகைகளிலிருந்து வருமானம்:
6. பெற்றோர்கள் பணிபுரியும் பள்ளிக்கூடத்தின் பெயர்:
   (அ) தந்தை ...
   (ஆ) தாயார் ...

விண்ணப்பத்தாரரின் பாஸ்போர்ட் அளவு போட்டோவை இங்கே ஒட்ட வேண்டும்.

7. (அ) மார்ச்/ஏப்ரல் 1984, டிசம்பர் 1983-இல் தேர்ச்சி பெற்ற தேர்வுகள் போர்டு/பல்கலைக்கழகப் பெயர், பதிவு எண், பெறப்பட்ட மதிப்பெண்கள், மொத்த மதிப்பெண்கள் முதலிய விவரங்களுடன் மதிப்பெண்களின் சான்று நகல் இணைக்கப்பட வேண்டும்) ...
   (ஆ) தேர்ச்சி பெற்ற பள்ளிக்கூடம்/கல்லூரியின் பெயர்(இருக்கும் இடத்தின் பெயர் மற்றும் மாவட்டத்தின் பெயருடன்) ...
8. மாணவர் வேறு எந்த ஒரு உபகாரச் சம்பளம் பெறுகின்றாரா அப்படி இருந்தால், அது பற்றிய 1984-85-க்கான முழு விவரங்களையும் தரவும்: ...
9. 1984-85-ல் பயின்று வரும் மேல்நிலைப் பள்ளிக்கூடம் / கல்லூரியின் பெயர், பயிலும் பாடத் திட்டத்தின் பெயர் மற்றும் சேர்ந்த தேதி ...

தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை / முதல்வர் கையொப்பம்.

விண்ணப்பதாரரின் கையொப்பம் தேதியுடன்.

4. அங்கீகரிக்கப்பட்ட முன் - ஆரம்ப ( Pre-Primary ) ஆரம்ப, நடுத்தர உயர் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக்கூடத்தில் இந்த மாணவரின் தகப்பனார்/தாயார் ஆசிரியராகப் பணிபுரிகிறார் என்பதற்கு, தகுந்த முத்திரையுடன் கூடிய நிறுவனத் தலைவரிடமிருந்து பெற்ற ஒரு சான்றிதழையும் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

5. (அ) விண்ணப்பத்துடன் மதிப்பெண்களின் சான்று பெற்ற உண்மை நகலை இணைக்க வேண்டும்.
   (ஆ) பட்டப்படிப்பு/முதுகலைப் பட்டப்படிப்பு சம்பந்தப்பட்ட அனைத்து செமஸ்டர் தேர்வுகளின் மதிப்பெண்களின் சான்று பெற்ற உண்மை நகலையும் இணைக்க வேண்டும்.

6. உபகாரச் சம்பளத்திற்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களில் மொத்த சதவிகித மதிப்பெண்களின் மூலம் நிர்ணயிக்கப்படும் திறமை மற்றும் வருமான ( Merit-Cum-Means ) அடிப்படையில்,தேர்ந்தெடுப்பு செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களின் 1983-84-ம் வருடத்திற்கான வருட வருமானம் ரூ. 6,000-க்குக் குறைவாக உள்ள மாணவர்களுக்குப் பண உதவி அளிக்கப்படும். இதர (அதாவது ரூ. 6,000-க்கு மேல் வருமானமுள்ள) மாணவர்களுக்குத் திறமைச் சான்றிதழும் மற்றும் கருத்தளவான பரிசு ரூ. 100 மட்டும் வழங்கப்படும்.

7. இந்த இயக்ககத்தில் இருந்து விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டா.

8. இந்த அலுவலகத்தில் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித் தேதி:
   (அ) மேல்நிலைப் பள்ளிக்கூடங்கள் மற்றும் பாலிடெக்னிக்குகளில் பயிலும் மாணவர்கள் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளக் கடைசித் **தேதி: 15-9-1984 ஆகும்.**
   (ஆ) பட்டப்படிப்பு,முதுகலைப் பட்டப்படிப்பு மற்றும் தொழிற் படிப்பில் பயிலும் மாணவர்கள் (அதாவது கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், விவசாயம் மற்றும் இதர தொழிற் கல்லூரிகள்) சம்பந்தப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடைசித் தேதி 30-9-1984 ஆகும்.

9. மேற்கண்ட கடைசித் தேதிகளுக்குப் பிறகு பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

10. உபகாரச் சம்பளங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டுமே அவர்களது தேர்வு பற்றி அறிவிக்கப்படும்.

11. 1982-83 ஆம் ஆண்டில், பொதுத் தேர்வுகளில் 10 ஆம் வகுப்பில் (எஸ். எஸ். எல். சி.) 500-க்கு 443-க்குக் குறையாமலும், 12-வது வகுப்பில் (மேல் நிலைப்பள்ளி) 1,200-க்கு 1003க்குக் குறையாமலும் மதிப்பெண்கள் பெற்றவர்கள் மட்டுமே உபகாரச் சம்பளத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதுமாணவர்களுக்குத் தகவலுக்காகத் தெரிவிக்கப்படுகிறது.

தேதி: 3 – 7 – 1984
சென்னை – 600 006.

**கல்லூரிக்கல்வி இயக்குநர்**

# இருபெருந் தலைவர்களுக்கு



# திருஉருவச் சிலைகள்!

சேலம் லட்சுமிப் பெருமாள் கோவில் அருகில் ஜூலை 30ஆம் நாள் இரவு 7 மணியளவில் பெருந் தலைவர் காமராஜர் - சேலம் விஜயராகவாச்சாரியார் திருவுருவச் சிலைகள் திறப்பு விழா, மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

நாயனவேந்தர் நாமகிரிப் பேட்டை திரு கிருஷ்ணன் அவர்கள் குழுவினரின் இன்னிசையுடன் நிகழ்ச்சி தொடக்கமாகியது.

விழாவுக்கு வருகை புரிந்தோரை செய்தி - மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு நா. கிருஷ்ணபாரதி இ.ஆ.ப வரவேற்றார்.

இந்திய தேசிய காங்கிரஸின் மாநிலப் பொருளாளர் திரு. எம். இராமசாமி உடையார் உரையாற்றுகையில், ''ஒழுக்கத்தைப் போதித்த இரு பெரும் தலைவர்களின் திருவுருவச் சிலைகள் நமக்கு எதிர்காலத்தில் ஒழுக்கத்தைப் போதித்து உன்னதம் பெறுவதற்குப் பயன்படும்'' என்றார்.

அடுத்து உரையாற்றிய அ.இ. அ.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு ப. உ. சண்முகம் அவர்கள், ''நான் திருவண்ணாமலை நகர மன்றத் தலைவராக இருந்த போது காமராஜர் அவர்களுக்கு வரவேற்பளித்தேன். 'நான்என்ன மந்திரியா, எதற்காக எனக்கு வரவேற்புத் தருகிறாய்' என்று கேட்டார். அவர் ஒரு தமிழர்-சிறந்த உழைப்பாளி என்பதற்காக அந்த வரவேற்பை நான் அளித்தேன்'' என்று குறிப்பிட்டார்.

அடுத்து உரையாற்றிய திரு ஜி. கிருஷ்ணராஜ் எம். எல். ஏ. ''மாற்றான் தோட்டத்து மலரையும் மதிக்க வேண்டும் என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டதற்கிணங்க இன்று விஜயராகவாச்சாரியார் - காமராஜர் ஆகிய காங்கிரஸ் தலைவர்களின் சிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.

அடுத்து, திரு சி. பழனியப்பன் எம். பி. உரையாற்றுகையில், ''இரு பெருந்தலைவர்களுக்குச் சிலை எடுத்துள்ள இந்தச் சர்க்காரை நான் பாராட்டுகிறேன்'' என்றார்.

அடுத்து, திரு எம். ஆறுமுகம் எம். எல். ஏ. உரையாற்றுகையில், ''உயிரோடு இருப்பவர்களின் சிலையைத் திறந்துவைக்க மாட்டேன் என்று சொல்லி வந்த பண்டித நேரு அவர்களே, சென்னை அண்ணா சாலையில் உருவாக்கப்பட்ட காமராஜர் சிலையை அவர் வாழ்ந்த காலத்திலேயே திறந்து வைத்தார் என்றால் காமராஜரின் பெருமை சொல்லத் தரமன்று. அதே போல் விடுதலைப் போராட்டத்தில் வழக்கறிஞர் தொழிலையே தூக்கி எறிந்து விட்டுப் போராட்டத்தில் கலந்து கொண்டார் விஜயராகவாச்சாரியார். இந்த இருவருக்கும் இங்கே சிலை எடுக்கப்படுவது வெகு பொருத்தம்'' என்று தெரிவித்தார்.

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு எச்.வி. ஹண்டே குறிப்பிட்டார்:

''1852-ல் பிறந்த grand old man of India என்றழைக்கப்பெற்ற சேலம் விஜயராகவாச்சாரியார் 92 ஆண்டுகள் இந்த நாட்டுக்குச் சேவை செய்திருக்கிறார். 1855-ல் நடைபெற்ற முதல் இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டார். 1895-ல் எம்.எல்.சி.யாக இருந்திருக்கிறார். சேலம் கொடுத்து வைத்த நகரம். பல பெரிய மனிதர்களை உலகுக்குத் தந்திருக்கிறது. ராஜாஜி போன்ற பெருமக்கள் இங்குதான் தோன்றியுள்ளார்கள்.

அடுத்து, சட்டமன்றமேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் தமது தலைமை உரையில் தெரிவித்ததாவது:

''இந்திய காங்கிரஸ் மகாசபையில் முதல்முதல் தலைமை வகித்தவர் சி. விஜயராகவாச்சாரியார். கடைசித் தலைவர் காமராஜர். 1920-ல் நாகபுரியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் தலைமை ஏற்று அவர் வாசித்த தீர்மானம்தான் நாட்டை மாற்றியது. பதவியில் இருப்பவர்கள் பதவியை விட்டு விலக வேண்டும் என்ற தீர்மானம்தான் அது.

> நாம் ஒரு கடவுளையோ அல்லது பல கடவுள்களையோ நம்புகிறோமா, இல்லையா என்பது கேள்வி இல்லை. நாம் இறுதியாக இலட்சியம் என்பதில் நம்பிக்கை கொள்கிறோமா இல்லையா என்பதுதான் முக்கியமானது.
> — நேரு

''முஸ்லிம்களுக்கும் இந்துக்களுக்கும் விரோதம் ஊட்டி, கலவரத்தை ஏற்படுத்தி விட்டார் என்று அவர் மீது கிரிமினல் குற்றச்சாட்டு தொடரப்பட்டது. அதன் காரணமாக 10 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை அவருக்கு வழங்கப்பட்டது. அதனை எதிர்த்து, தாம் நிரபராதி என்பதைத் நிரூபித்து, விடுதலை பெற்றதுடன், வழக்கில் இணைக்கப்பட்டிருந்த வேறு எட்டுப் பேர்களுக்கும் விடுதலை வாங்கித் தந்தார். அதுமட்டுமல்ல, தன் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக் கூறியதற்காக மான நட்ட ஈடு வழக்குத் தொடர்ந்து 10 ஆயிர ரூபாய் பெற்றார்.

''இங்கே கற்சிலைகள் திறக்கப் படவில்லை. தேசத்தின் சரித்திர உருவங்கள் திறக்கப்படுகிறார்கள்''

சிலம்புச் செல்வர் தாம் சென்னைக்குப் புறப்பட வேண்டியிருப்பதால் - 'நான் மேடையில் இருக்கும்போதே சிலைகளைத் திறந்து விட்டால் அவற்றைத் தரிசித்துக் கிளம்புவேன்' என்ற வேண்டுகோளை மாண்புமிகு முதல்வரிடம் தெரிவிக்கவே, உடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சிலைகளைத் திறந்து வைத்தார்.

பின்னர், திரு. முகமது இஸ்மாயில் எம்.எல்.ஏ., உரையாற்றுகையில் கூறினார்:

''ஒருவர் மெத்தப் படித்த மேதை; மற்றொருவர் படிக்காத மேதை. இருவரும் நாட்டு விடுதலையில் முனைப்பாக ஈடுபட்டு அரசியலில் செயலாற்றியவர்கள்.''

பின்னர் திரு குமரி அனந்தன் எம். எல். ஏ. உரையாற்றுகையில் தெரிவித்தார்;

''இருவரின் பிறந்த ஊரும் சேலம் இல்லை. ஆனால் இருவரும் சிலையாக நிற்கும் இடம் சேலம். தாங்கள் இறந்த பின்னும் மக்களின் நெஞ்சங்களில் வாழ்பவர்கள்தான் அமரர் ஆவர்.

''விஜயராகவாச்சாரியார் தமது 12வது வயதிலே படிப்பைத் தொடங்குகிறார், காமராஜர் தமது 12வது வயதிலே படிப்பை நிறுத்துகிறார்.

'' விஜயராகவாச்சாரியாரின் தலைமையில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில்தான், 'வந்தே மாதரம்' பாடல் ஒலித்தது.

''பொன் விளைந்த களத்தூரில் பிறந்த விஜயராகவாச்சாரியார் மதுராந்தகத்தில் படித்தார். சேலத்தில் வழக்கறிஞர் தொழில் பார்த்தார்.

''பூப்பெய்திய பின்னர்தான் பெண்கள் மணம் செய்து கொள்ள வேண்டும் என்று ஹரிட்ஸாரரின் சாஸ்திரியார் கொண்டு வந்த தீர்மானத்தை விஜயராகவாச்சாரியார் ஆதரித்தார்.''

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் விஜயராகவாச்சாரியாரின் பேரருமான திரு ஆர். டி. பார்த்தசாரதி நன்றியுரை கூறும்போது, ''இந்த நாளைப் பொன்னாளாகக் கருத வேண்டும். எந்த அரசும் சாதித்திருக்க முடியாத காரியத்தை இந்த அரசு செய்திருக்கிறது. இளைய சமுதாயத்தினர் தியாகச் செயல்களைச் செய்ய இது போன்ற விழாக்கள் பயன்படும்'' என்று குறிப்பிட்டார்.

சிலம்புச்செல்வர் தமது தலைமைப் பொறுப்பை மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்களிடம் ஒப்படைத்துச் சென்றார். அதன்பின்னர், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''அந்த நாளில் மிகச்சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர் விஜயராகவாச்சாரியார். ராஜாஜி அவர்களைத் தமது சீடராக ஏற்றுக் கொண்டார் அவர். உன்னதமான உள்ளம் உடைய அவர் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டிய தலைவராகத் திகழ்ந்தார்.

''விஜயராகவாச்சாரியார் தமது கருத்துக்களைத் தேசத் தலைவர்களுக்கெல்லாம் கடிதத்தின் மூலம் விடாது எழுதி வந்திருக்கிறார். படேல், கோகலே போன்ற அனைவருடனும் கடிதத் தொடர்பு வைத்திருந்திருக்கிறார். சுயராஜ்யம் என்ற தத்துவத்தை உருவாக்கி வளர்த்த ஒப்புயர்வற்ற தலைவர் அவர்.

''காங்கிரஸ் தலைவர் வரதராஜுலு வீட்டில் நடைபெற்ற ஒரு விழாவின்போது அங்கிருந்த குரூப்போட்டோ ஒன்றைக் காண்பித்தார் காமராஜர். அதிலே தந்தை பெரியாரின் அருகில் காமராஜர் இருந்தார். அதைப் பார்த்த பெரியார், ''அப்ப நீ நம்ம ஆளு! உன்னை ஆதரிப்பது எனது கடமை'' என்று சொல்லி, அன்று முதல் காமராஜரை ஆதரித்துப் பேசினார்; பச்சைத் தமிழர் என்று பாராட்டுரை வழங்கினார்.''

விழாப் பேருரை ஆற்றிய மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். தெரிவித்தார்:

"ஒரு உண்மையை நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனிதனும் உயிரோடு இருக்கும்பொழுது பாராட்டப்படுவதை விட மறைந்த பின் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் மக்களால் பாராட்டப்படுவதுதான் முக்கியம். புகழ்பெற்ற தலைவர்கள் மக்களுக்காக மாபெரும் சேவை செய்திருக்கிறார்கள்.

படிப்பு எனப்படுவது பி.ஏ., எம்.ஏ. பட்டம் பெறுவது மட்டுமல்ல - தங்களை உலகுக்குச் சொந்தக்காரர்களாக ஆக்கிக் கொள்வதற்குத்தான் காமராஜர் படித்தார். இங்கே அவர் கடவுள் போல நின்று கொண்டிருக்கிறார்.

'மறைந்த தலைவர்களை மதிப்பது வேறு; அவரது கொள்கைகளை ஏற்றுக் கொள்வது என்பது வேறு. இங்கே இந்தச் சிலை வைப்பது பற்றிப் பிரச்சினைகள் எழுந்தன. அரசு அதனைச் சுமுகமான முறையிலே தீர்த்து-தனது சொந்தச் செலவிலே பெருந் தலைவர்களுக்குச் சிலை எடுத்துள்ளது.

"இப்போது நாட்டில் அரசு போடும் ஆணைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்தப் பெறுகிறது. எதற்கெடுத்தாலும் போராட்டம் என்றால் அது போராட்டமாக இருக்காது, ஆங்கிலத்தில் சொல்வார்களே Bore என்று, அந்த 'போர்' ஆட்டமாகத்தான் அது முடியும். இந்த நிலை, நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

''நான் ஏன் பிறந்தேன்''என்று ஒரு முறை கட்டுரை எழுதினேன்; பலர் கேலி செய்தார்கள். ஒரு மனிதன், தான் பிறருக்குப் பயன்படும்படி என்னென்ன காரியங்கள் செய்தேன் என்று எண்ணிப் பார்க்க அவனையே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் ஒவ்வொருவரும் இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

"அவரவர் மதத்துக்குரிய கோட்பாடுகளின்படி வாழ்க்கை நடத்துகிறார்களா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இங்குச் சிலையாக உள்ள தலைவர்கள், தாங்கள் பிறந்த காரணத்தை இந்த உலகுக்குச் சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

"இந்த நாட்டிற்குப் பூரண சுதந்தரம் கிடைப்பதற்காக ஒத்துழையாமை இயக்கம் நடத்த வேண்டும் என்ற யோசனையைத் தெரிவித்திருக்கிறார் விஜயராகவாச்சாரியார்.

"அத்தனை கட்சிக்காரர்களும் இங்கு வந்து கலந்து கொள்வது பெரியவர்களைப் பாராட்டுவதற்காகவே தவிர, எங்களைப் போற்றிக் கொள்வதற்கு அல்ல. மறைந்த தலைவர்கள் எந்தவிதப் பிரதி பிரயோசனமும் எதிர்பாராது பணியாற்றியவர்கள்! இந்த இடத்தில் எதிர்காலத்தில் நமக்குச் சிலை வைக்கப்படும் என்று விஜயராகவாச்சாரியார் கற்பனையாவது செய்திருப்பாரா?

''புகழை நாம் தேடிப் போகக் கூடாது. புகழ் நம்மைத் தேடி வரவேண்டும். உள்ளத்தில் தோன்றுகின்றவற்றை எல்லாம் செய்யக் கூடாது. மக்களுக்கு எது 'பயனுடையதாக இருக்குமோ அதைச் செய்ய வேண்டும்''.

மாண்புமிகு முதல்வரின் உரைக்குப் பின்னர், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. வரதராஜுலு இ.ஆ.ப. நன்றி தெரிவித்தார். — த.பி.

## புதுக்கோட்டையில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிப் பணிகள்

புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1984-85ஆம் ஆண்டுக்கான திட்டம், இம் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்குமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த நிதி இலக்கு ரூ. 104 லட்சங்கள். இந்தத் தொகைக்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு ரூ. 3 லட்சம் வீதம் செலவிடப்படும்.

ஒரு ஊராட்சி ஒன்றியத்துக்கு 600 குடும்பங்கள் வீதம் மொத்தம் 13 ஊராட்சி ஒன்றியங்களுக்கு 7,800 குடும்பங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் புதியதாக இவ்வாண்டுக்கு 2,292 பால் மாடுகள் மற்றும் 1,252 ஆட்டுமந்தைகளும் வழங்கப்பட உள்ளன. மேலும் 15 பன்றி வளர்ப்பும் இவ்வாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மற்றும் உழவு மாடுகள் வழங்குதல், மாட்டு வண்டி வழங்குதல் சிறு தொழில்கள் நடத்துதல் ஆகியவற்றின் கீழ் 4,235 குடும்பங்கள் பயன்பெற உள்ளன. ஆகஸ்டுத் திங்கள் முடிய ரூ. 9 லட்சங்கள் மானியமாக வழங்கப்பட்டுள்ளன. 337 குடும்பங்கள் நிதி உதவி பெற்றுள்ளன.

## யார் காவல்?

நோய்களிலிருந்தும் பூச்சிகளிலிருந்தும் பயிர்களைக் காத்து விளைச்சலை அதிகமாக்க சிலந்திப் பூச்சிகளின் துணையை நாடுகிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

பயிர்களைத் தாக்கும் பூச்சிகளைச் சிலந்திகள் எப்படிக் கொல்கின்றன என்பதை ஆராய்வதற்காக விவசாய விஞ்ஞானிகள் எலுமிச்சைத் தோப்புகளில் 130 வகை சிலந்திகளின் நடவடிக்கைகளை மிகவும் நெருக்கமாகக் கண்காணித்தனர்.

பருத்திப் பயிர்களை நாசம் செய்யும் புழுக்களைச் சில வகைச் சிலந்திகள் கொன்று விடுகின்றன. எலுமிச்சை இனத்தைச் சேர்ந்த பழ வகைகளைத் தாக்கும் சில பூச்சிகளை வேறு வகை சிலந்திகள் அழித்து விடுகின்றன.

சிலந்திப் பட்டாளத்தை முதலில் வயல்வெளிகளில் ஏவிவிட்டால் பூச்சி கொல்லி மருந்தைத் தெளிப்பதைத் தவிர்க்கலாம், அல்லது தள்ளிப் போடலாம் என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இதற்காக எந்த வகைச் சிலந்திகளை அதிகமாக வளர்க்கலாம் என்றும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். அதற்குத் தகுந்த சூழலை உருவாக்கவும் முனைகின்றனர், அமெரிக்க விஞ்ஞானிகள்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.


"கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்" என
பார்த்தாலே தெரிகிறது
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி







# அண்ணா கூட்டுறவு நூற்பாலை
# ஆண்டிப்பட்டி, மதுரை மாவட்டம்-626 512.

18-7-1984 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர், அவர்களால் திறந்து வைக்கப்பட்டது என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இது தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள முதல்
பருத்தி விவசாயிகள் ஆலை.

பருத்தி விவசாயிகளே!

ஆலையில் பங்கு முலதனம் எடுத்து, பருத்தி விவசாய மேம்பாட்டிற்கும், விற்பனைக்கும் புதுப்பாதை அமைத்திடுவீர்!

சமூக, பொருளாதாரத் தொழில் ரீதியாகப் பின்தங்கியுள்ள ஆண்டிப்பட்டி பகுதியின் கூட்டுறவுத் தொழில் வளர்ச்சிக்குக் கூடித் துணை நிற்பீர்!

நெசவாளர்களே!

எங்கள் அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் தயாராகும் தரமான 40ம் எண் சிட்டம் மற்றும் கோன் நூல் வாங்கிப் பயன் பெறுவீர்.

**கி. ராஜமாணிக்கம்,** எம்.ஏ.,
*மாவட்ட வருவாய் அலுவலர்/*
நிர்வாக இயக்குநர்

**வி. சந்திரலேகா,** இ.ஆ.ப.
*மாவட்ட ஆட்சித் தலைவர்/*
*தலைவர்*

